97



ஓம் தத்ஸத்ப்ரஹ்மணே நம:

# ॥ श्री पञ्चीकरणादि ॥

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவிராஜகாசார்ய

ஸ்ரீ சங்கரபகவத்பாதர் அவர்களால்

அருளிச்செய்யப்பட்ட 1456

# ஸ்ரீ பஞ்சீகரண முதலியன

இவை

தஞ்சைமாநகரம்

வெ. குப்புஸ்வாமிராஜு அவர்களால்

மொழிபெயர்க்கப்பட்டு

தஞ்சை

ஸ்ரீ வித்தியா விநோதினி முத்திராசாலையிற்
பதிக்கப்பட்டன.

*Copy Right Registered.*

1914

விலை ~~அணா 12~~. ரூ/-

# முகவுரை

THE TANJORE MA…

ஸ்ரீ பரமகருணாநிதியான பரமேசுவரன்

காமம் மோகமென்னும் திமிதிமிங்கலமும், தனலோபமென்னும் முதலைகளும், கோபமென்னும் வடவாநலமும், மூடத்தன்மை யென்னும் பாசிகளும், சஞ்சலமென்னும் அலைகளும், ஓரோர் காலத்துண்டாகும் அறிவென்னுங் குமிழிகளும், அஞ்ஞானமென்னுஞ் ஜலமுமுள்ளதான சம்சாரமென்னுங் கடலில் ஜீவர்களாகிய மீனங்கள் இயமனென்ற செம்படவன் வீசிய பாசமாகிற வலையிலகப்பட்டு மாய்வதோடு.

उद्घाटित नवद्वारे पञ्जरे विहगोऽनिलः ।
यत्तिष्ठति तदाश्चर्यं प्रयाणे विस्मयः कुतः ॥

திறந்துள்ள ஒன்பது வாயிலுடைய சரீரமான கூட்டில் பிராணவாயு வென்னும் பக்ஷி நிலைத்திருப்பதாச்சரியம் அது வெளிப்படுவதில் ஆச்சரியமேது என்ப துணராது.

येतन्मंदिरमुन्नतं विरचितं प्राकारएषस्वयं
बद्धोयत्र च राधिका प्रियतमो देवश्च संस्तापितः ।
उद्यानानि च कल्पितानि ललितान्यापूरिकोषोधनै
राक्रांताश्च महाजना ननुमया धन्यामदन्योऽस्तिकः ॥

இவ்வுயரமான மாளிகை என்னாற் கட்டப்பட்டது, இப்பிரகாரம் யானே கட்டினேன், இதில் இராதாபிரியதமனான கிருஷ்ணதேவன் என்னால் ஸ்தாபிக்கப்பட்டுளான் இச்சோலைகளை யானுண்டாக்கினேன்; என் பொக்கிஷத்திற் பெட்டி பெட்டியாய் திரவியம் நிறைத்திருக்கின்றேன், இத்தனை பேர்கள் என்னாலாதரிக்கப்படுகிறார்கள். ஆகையால் என்னினும் மேம்பட்டவன் எவனிருக்கின்றான் என்று பிதற்றிக்கொண்டு.

स्तेय हिंसानृतं दंबः कामः क्रोधः स्मयो मदः ।
भेदो वैरमविश्वासः संस्पर्धा व्यसनानिच ॥

திருட்டு அஹிம்சை பொய் இடம்பம் காமம் குரோதம் களிப்பு மதம் வஞ்சகம் பகை விசுவாசமின்மை ஸம்ஸ்பர்தா ; (ஆசை) ஆகிய இவை வியசனத்திற்கு காரணமென்பதோராது நாசமடைதலையும்.

“பௌத்தர்கள் அதிக்கிரமித்துக் கருமங்களேது ? உபாசனையேது ? சன்னியாசமேது ? வயிறு வளர்க்கப் பிராஹ்மணர்கள் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்பதோடு, வேதமாகிய தாயையும் நிந்திக்கிறார்கள். இதனால் வேதநெறி குறைந்து தேவாராதனையின்றி யாகங்களுமில்லா தொழிந்தன. என் செய்வோம்? பெருமானே” யென்று தேவர்கள் வேண்டுதலையுங் கண்டு. கருமகாண்டத்தைத் தாபிக்கக் குமாரக்கடவுளையும், உபாசனா காண்டத்தைத் தாபிக்க சங்கருஷணரையும் அனுப்பிப் பின் உத்தரமீமாம்ஸையாகிய அத்வைதத்தைத் தாபிக்க, நான்கு வேதங்களும் மூர்த்தீகரித்த தொப்ப, பதுமபாதர், ஹஸ்தாமலகர், துரோடகர், வார்த்திககாரரென்னும் நால்வரோடு ஸ்ரீ சங்கர பகவத்பாதரென்னும் பெயரோடவதரித்து துர்மதங்களை எல்லாவற்றையும் தும்ஸம்பண்ணி சுவமதஸ்தாபனத்தால் அத்வைதஸ்தாபனா சாரியர், வியாக்கியான சிம்ஹாசனாதீசரென்னும் பெயர்களையும் பூண்டருளினர் அம்மகான் இயற்றியருளிய நூல்கள் பலவற்றுள், சிலவற்றை யெமதாசிரியராகிய ஸ்ரீ பிரஹ்ம நிஷ்ட பண்டித வே. குப்புஸ்வாமி ராஜு அவர்கள் ஆரியபாடையுணராத தமிழ்நாட்டு ஆஸ்திகர்களாகிய மந்தாதிகாரிகளுக்குமுபயோகமாவான்கருதி. உஎ. புத்தகங்களை தமிழில் மொழிபெயர்த்தருளினர். அவற்றை யாம் மூலசுலோகங்களோடு கூட்டிச் சங்கரகிரந்தாவலி மூன்றும் புத்தகமாக வெளிப்படுத்தினோம். இதிலுள்ள குற்றங்களைப் பெரியோர் மன்னிக்க.

ராம. வீராஸ்வாமி ராஜு.

# இதிலடங்கியுள்ளன.


க. பஞ்சீகரணம் வார்த்திகத்தோடு

உ. ஜீவன்முக்தானந்தலஹரி

ங. ஏகசுலோகி

ச. காசீபஞ்சகம்

ரு. மாயாபஞ்சகம்

சா. கௌபீனபஞ்சகம் (யதிபஞ்சகம்)

எ. சாதனபஞ்சகம்

அ. ஆத்மபஞ்சகம்

கூ. மனீஷாபஞ்சகம்

ய. நிருவாணஷட்கம்

கக. பராபூஜை

கஉ. குருவ்ஷ்டகம்

கங. தக்ஷிணாமூர்த்தியஷ்டகம்

கச. தன்யாஷ்டகம்

கரு விஞ்ஞானநௌகா

கசா. பிரஹ்மஸ்தோத்திரம்

கஎ. நிருவாணதசகம்

கஅ. ஹஸ்தாமலகம்

ககூ. மகாவாக்கிய சித்தாந்தஸ்தோத்திரம்

உ0. துவாதச பஞ்சரிகாஸ்தோத்திரம்

உக. சர்ப்படபஞ்சரிகாஸ் தோத்திரம்

உஉ. ஆத்மபூஜை

உங. பிரஹ்மநாமாவலி

உச. வாக்கியவிருத்தி

உரு. அத்வைதாநுபூதி

உசா. தத்துவோபதேசம்

உஎ. பாலபோதினி.

|| ॐ तत् सत् ||

# || पंचीकरणम् ||

# பஞ்சீகரணம்

## வார்த்திகத்துடன்.

பஞ்சீகரணம்.

अथातः परमहंसानां समाधिविधिं व्याख्यास्यामः ॥

இப்போது அதனால் பரமஹம்ஸர்களின் சமாதிவிதியை வியாக்கியானஞ்செய்வாம்:—

வார்த்திகம்.

ॐकारः सर्ववेदानां सारस्तत्त्वप्रकाशकः ।
तेन चित्तसमाधानं मुमुक्षूणां प्रकाश्यते ॥ १ ॥

ஓங்காரம் சர்வவேதங்களின் சாரமும் தத்துவப்பிரகாசமுமாம். அதனால் முமுக்ஷுக்களின் சித்தசமாதானம் பிரகாசிக்கப்படுகின்றது.

பஞ்சீகரணம்.

सच्छब्दवाच्यमविद्याशबलं ब्रह्म। ब्रह्मणोऽव्यक्तम् । अव्यक्तान्महत् । महतोऽहंकारः। अहंकारात्पञ्चतन्मात्राणि। पञ्चतन्मात्रेभ्यः पञ्चमहाभूतानि। पञ्चमहाभूतेभ्योऽखिलं जगत् ॥

சத்தென்னும் சொற்பொருளான அவித்தையோடு கூடியது பிரஹ்மம். பிரஹ்மத்தினின்று அவ்வியக்தமும் (மூலப்பிரகிருதியும்), அவ்வியக்தத்தினின்று மகத்தும், மகத்தினின்று அகங்காரமும், அகங்காரத்தினின்று பஞ்சதன்மாத்திரைகளும், பஞ்சதன்மாத்திரைகளினின்று பஞ்சமகாபூதங்களும், பஞ்சமகாபூதங்களினின்று சகலஜகத்தும் உண்டாயின.

வார்த்திகம்.

आसीदेकं परं ब्रह्म नित्यमुक्तमविक्रियम् ।
तत्स्वमायासमावेशाद्बीजमव्याकृतात्मकम् ॥ २ ॥

* க. நித்தியமுக்தமும் * உ. அவிக்கிரியமும் ஏகமுமான பரப்பிரஹ்ம முளது. அது தனது மாயையில் செவ்வையாய்ப் பிரவேசித்தலால் பீஜமான *ந. அவ்யாகிருதவடிவின தாகின்றது.

तस्मादाकाशमुत्पन्नं शब्दतन्मात्ररूपकम् ।
स्पर्शात्मकस्ततो वायुस्तेजो रूपात्मकं ततः ॥ ३ ॥

அதனினின்றும் சப்ததன்மாத்திரவடிவ ஆகாசமுண்டாயிற்று. அதனினின்றும் ஸ்பரிசவடிவ வாயு உண்டாயிற்று. அதனினின்றும் ரூபவடிவ தேயு (அக்கினி) உண்டாயிற்று. (ந)

आपो रसात्मिकास्तस्मात्तेभ्यो गन्धात्मिका मही ।
शब्दैकगुणमाकाशं शब्दस्पर्शगुणो मरुत् ॥ ४ ॥

அதனினின்றும் இரஸவடிவ ஜல முண்டாயிற்று. அதனினின்றும் கந்தவடிவ பிருதிவி உண்டாயிற்று. சப்தமொன்றையே குணமாகவுடையது ஆகாயம். சப்த, ஸ்பரிசங்களை குணமாகவுடையது வாயு. (ச)

शब्दस्पर्शरूपगुणैस्त्रिगुणं तेज उच्यते ।
शब्दस्पर्शरूपरसगुणैरापश्चतुर्गुणाः ॥ ५ ॥

சப்தம் ஸ்பரிசம் ரூபம் என்னும் குணங்களால் முக்குணமுடையது தேயு எனப்படும். சப்தம், ஸ்பரிசம், ரூபம், இரஸமென்னும் குணங்களால் நாற்குணமுடையது ஜலம். (ரு)

---

* க. நித்தியமுக்த மென்பதனை ஸ்ரீபாலபோதம் கூ-வது உபதேசம் உகூஅ-வது பக்கத்திலும், அபரோக்ஷாநுபூதி கந-வது பக்கத்திலும் காண்க.

* உ. அவிக்கிரியம் அதாவது விகாரப்படுத்தப்படாதது.

* ந. அவ்வியாகிருதம் அதாவது விசேஷமாயாக்கப்படாதது.

शब्दस्पर्शरूपरसगन्धैः पञ्चगुणा मही ।
तेभ्यः समभवत्सूत्रं लिङ्गं सर्वात्मकं महत् ॥ ६ ॥

சப்தம், ஸ்பரிசம், ரூபம், இரஸம், கந்த மென்பவற்றால் ஐந்துகுணமுடையது பிருதிவி. அவற்றினின்றும் சூத்திரமும் *௧. சர்வாத்மகமும் மகத்துமான இலிங்கமுண்டாயிற்று. (௬)

ततः स्थूलानि भूतानि पञ्च तेभ्यो विराडभूत् ।
पञ्चीकृतानि भूतानि स्थूलानीत्युच्यते बुधैः ॥ ७ ॥

அதனின்றும் ஸ்தூலமான ஐந்து பூதங்க ளுண்டாயின. அவற்றினின்றும் விராட்டு உண்டாயிற்று. பஞ்சீகிருதபூதங்கள் ஸ்தூலங்க ளென்று அறிஞர்களால் சொல்லப்படும். (எ)

பஞ்சீகரணம்.

पञ्चानां भूतानामेकैकं द्विधा विभज्य स्वार्द्धभागं विहायार्द्धभागं चतुर्धा विभज्येतरेषु योजिते पञ्चीकरणं मायारूपदर्शनमध्यारोपापवादाभ्यां निष्प्रपञ्चं प्रपंच्यते ।

ஐந்துபூதங்களுள் ஒவ்வொன்றனையும் இரண்டிரண்டாகப் பிரித்து, தனது பாதிபாகத்தினை விட்டுப், பாதிபாகத்தினை நான்காகப் பிரித்து மற்றப் பூதங்களில் சேர்க்கப் பஞ்சீகரணமாம். இது மாயாரூபதரிசனம். அத்தியாரோபாபவாதங்களால் பிரபஞ்சமில்லாதது பிரபஞ்சமாக்கப்படுகின்றது. (பிரபஞ்சம்=விரிவு.)

வார்த்திகம்.

पृथिव्यादीनि भूतानि प्रत्येकं विभजेद्द्विधा ।
एकैकं भागमादाय चतुर्धा विभजेत्पुनः ॥ ८ ॥

பிருதிவிமுதலிய பூதங்களை ஒவ்வொன்றையும் இரண்டிரண்டாகப் பிரிக்கவேண்டும். அவற்றுள், ஒவ்வொருபாகத்தை மறுபடியும் நந்நான்காகப் பிரிக்கவேண்டும். (அ)

---

*௧. மற்ற காரியங்கள் யாவும் இதன் பரிணாமமாகலின் இதனைச் சர்வாத்மக மென்றார்.

एकैकं भागमेकस्मिन्भूते संवेशयेत्क्रमात् ।
ततश्चाकाशभूतस्य भागाः पञ्च भवन्ति हि ॥ ९ ॥

அவற்றுள், ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பூதத்தில் கிரமமாகச் சேர்த்தல் வேண்டும். அதனால், ஆகாசபூதத்தின் பாகங்கள் ஐந்தும், (கூ)

वाय्वादिभागाश्चत्वारो वाय्वादिष्वेवमादिशेत् ।
पञ्चीकरणमेतत्स्यादित्याहुस्तत्त्ववेदिनः ॥ १० ॥

வாயுவாதிகளின் பாகம் நான்குமாகின்றன. இவ்வாறே, வாயுவாதிகளிலும் பொருத்துக. இது * ரு. பஞ்சீகரணமாகுமென்று தத்துவமுணர்ந்தவர் கூறுவர். (க0)

பஞ்சீகரணம்.

ॐ पञ्चीकृतपञ्चमहाभूतानि तत्कार्यं सर्वं विराडित्युच्यते ।
एतत्स्थूलशरीरमात्मनः ।

ஓம். * சு. பஞ்சீகிருத பஞ்சமகாபூதங்களும் அவற்றின் காரியமுமாகிய யாவும் விராட்டென்று சொல்லப்படுகின்றன. இது ஆத்மாவுக்கு ஸ்தூலசரீரம்.

வார்த்திகம்.

पञ्चीकृतानि भूतानि तत्कार्यं च विराड्भवेत् ।
स्थूलं शरीरमेतत्स्यादशरीरस्य चात्मनः ॥ ११ ॥

பஞ்சீகிருதபூதங்களும் அவற்றின் காரியமும் விராட்டு ஆகின்றது. இஃது சரீரமின்றிய ஆத்மாவுக்கு ஸ்தூலசரீரமாகின்றது. (கக)

---

* ரு. பஞ்சீகரணமென்பதனை பைங்கலோபநிடதம் உ-வது அத்தியாயத்திலும், ஸ்ரீவிசாரசந்திரோதயம் ௬௬-வது பக்கத்திலும், ஸ்ரீ பாலபோதம் மூன்றும் உபதேசம் ௫௬-வது பக்கத்திலும் காண்க.

* சு. எந்தப்பூதங்களுக்குப் பஞ்சீகரணம் (அவ்வைந்தாக்கல்) செய்யப்பட்டதோ அவற்றைப் பஞ்சீகிருதபூத மென்பர். அவற்றையே ஸ்தூலபூத மென்றுங் கூறுவர்.

अधिदैवतमध्यात्ममाधिभूतमिति त्रिधा ।
एकं ब्रह्म विभागेन भ्रमाद्भाति न तत्त्वतः ॥ १२ ॥

ஓரே பிரஹ்மம் பிரமத்தால் அதிதைவம் அத்தியாத்மம் அதிபூதமென்று மூவகைப் பிரிவாகத் தோற்றுகின்றது; உண்மையாக இல்லை. (௧௨)

பஞ்சீகரணம்.

इन्द्रियैरर्थोपलब्धिर्जागरितम् । एतदुभयाभिमान्यात्मा विश्वः । एतत्त्रयमकारः ।

இந்திரியங்களால் பொருளுணர்ச்சியுண்டாதல் ஜாக்கிரம். இவ்விரண்டன் அபிமானி ஆத்மா விசுவன். இம்மூன்றும் அகாரம்.

வார்த்திகம்.

इन्द्रियैरर्थविज्ञानं देवतानुग्रहान्वितैः ।
शब्दादिविषयं ज्ञानं तज्जागरितमुच्यते ॥ १३ ॥

தேவதாநுக்கிரகத்தோடு கூடிய இந்திரியங்களால் அர்த்தவிஞ்ஞானம் (பொருளுணர்ச்சி) உண்டாகின்றது. சப்தாதிகளை விஷயஞ்செய்யும் ஞானமாகிய அது ஜாக்கிரமெனப்படும். (௧௩)

श्रोत्रमध्यात्ममित्युक्तं श्रोतव्यं शब्दलक्षणम् ।
अधिभूतं तदित्युक्तं दिशस्तत्राधिदैवतम् ॥ १४ ॥

சுரோத்திரம் (காது) *எ. அத்தியாத்மமெனப்படும் கேட்கப்படுவதான சப்தலக்ஷணம் அதிபூதம் எனப்படும். அதில் திக்கு அதிதைவதமெனப்படும். (௧௪)

त्वगध्यात्ममिति प्रोक्तं स्प्रष्टव्यं स्पर्शलक्षणम् ।
अधिभूतं तदित्युक्तं वायुस्तत्राधिदैवतम् ॥ १५ ॥

---

* எ. அத்தியாத்மமுதலியவற்றின் இலக்கணத்தினை ஸ்ரீ விசாரசந்திரோதயம் ௬௦-வது பக்கத்திற் காண்க.

துவக்கு (தோல்) அத்தியாத்ம மெனப்படும். ஸ்பரிசிக்கப் படும் ஸ்பரிசலக்ஷணம் அதிபூதமெனப்படும். அதில் வாயு அதிதைவதமாம். (கரு)

चक्षुरध्यात्ममित्युक्तं द्रष्टव्यं रूपलक्षणम् ।
अधिभूतं तदित्युक्तमादित्योऽत्राधिदैवतम् ॥ १६ ॥

சக்ஷு (நேத்திரம்) அத்தியாத்ம மெனப்படும். பார்க்கப் படும் ரூபலக்ஷணம் அதிபூத மெனப்படும். இதில் ஆதித்தியன் அதிதைவதமாம். (கசா)

जिह्वाध्यात्मं तया स्वाद्यमाधिभूतं रसात्मकम् ।
वरुणो देवता तत्र जिह्वायामधिदैवतम् ॥ १७ ॥

சிங்நுவை (நா) அத்தியாத்மம். அதனால் உருசிக்கப்படும் இரஸவடிவினது அதிபூதம். அந்த நாவில் வருணனுகிய தேவதை அதிதைவதமாம். (கஎ)

घ्राणमध्यात्ममित्युक्तं घ्रातव्यं गन्धलक्षणम् ।
अधिभूतं तदित्युक्तमश्विनावधिदैवतम् ॥ १८ ॥

கிராணம் (மூக்கு) அத்தியாத்ம மெனப்படும். முகரப்படும் கந்தலக்ஷணம் அதிபூத மெனப்படும். அதில் அசுவினிகுமாரரிருவரும் அதிதைவதமாம். (கஅ)

वागध्यात्ममिति प्रोक्तं वक्तव्यं शब्दलक्षणम् ।
अधिभूतं तदित्युक्तमग्निस्तत्राधिदैवतम् ॥ १९ ॥

வாக்கு அத்தியாத்ம மெனப்படும். வசனிக்கப்படும் சப்தலக்ஷணம் அதிபூத மெனப்படும். அக்கினி அதில் அதிதைவதமாம். (ககூ)

हस्तावध्यात्ममित्युक्तमादातव्यं च यद्भवेत् ।
अधिभूतं तदित्युक्तमिन्द्रस्तत्राधिदैवतम् ॥ २० ॥

பாணி (கைகள்) அத்தியாத்ம மெனப்படும். கையினுல் கொள்ளப்படுவது யாதுண்டாகின்றதோ அது அதிபூத மெனப் படும். அதில் இந்திரன் அதிதைவதமாம். (உ0)

पादावध्यात्ममित्युक्तं गन्तव्यं तत्र यद्भवेत् ।
अधिभूतं तदित्युक्तं विष्णुस्तत्राधिदैवतम् ॥ २१ ॥

பாதங்கள் அத்தியாத்ம மெனப்படும். அதில் நடக்கப்படுவது யாதுண்டாகின்றதோ அது அதிபூத மெனப்படும். அதில் விஷ்ணு அதிதைவதமாம். (உக)

पायुरिन्द्रियमध्यात्मं विसर्गस्तत्र यो भवेत् ।
अधिभूतं तदित्युक्तं मृत्युस्तत्राधिदैवतम् ॥ २२ ॥

பாயுரு (குத) இந்திரியம் அத்தியாத்மம். அதில் மல நீக்கம் யாதுண்டாகின்றதோ அது அதிபூத மெனப்படும். அதில் மிருத்தியு (யமன்) அதிதைவதமாம். (உஉ)

उपस्थेन्द्रियमध्यात्मं स्त्र्याद्यानन्दस्य कारणम् ।
अधिभूतं तदित्युक्तमधिदैवं प्रजापतिः ॥ २३ ॥

உபஸ்தேந்திரியம் (மூத்திரத்துவாரம்) அத்தியாத்மம். ஸ்திரீயாதியாநந்தத்தின் காரணம் அதிபூத மெனப்படும். அதில் பிரஜாபதி அதிதைவதமாம். (உ௩)

मनोऽध्यात्ममिति प्रोक्तं मन्तव्यं तत्र यद्भवेत् ।
अधिभूतं तदित्युक्तं चन्द्रस्तत्राधिदैवतम् ॥ २४ ॥

மனசு அத்தியாத்ம மெனப்படும். அதில் யாது மனனஞ் செய்யப்படுவது (நினைக்கப்படுவது) ஆகின்றதோ அது அதிபூத மெனப்படும். சந்திரன் அதில் அதிதைவதமாம். (உச)

बुद्धिरध्यात्ममित्युक्तं बोद्धव्यं तत्र यद्भवेत् ।
अधिभूतं तदित्युक्तमधिदैवं बृहस्पतिः ॥ २५ ॥

புத்தி அத்தியாத்மமெனப்படும். அதில் யாது அறியத்தக்கதாகின்றதோ அது அதிபூத மெனப்படும். பிருகஸ்பதி அதிதெய்வமாம். (உரு)

अहंकारस्तथाध्यात्ममहंकर्तव्यमेव यत् ।
अधिभूतं तदित्युक्तं रुद्रस्तत्राधिदैवतम् ॥ २६ ॥

அகங்காரம் அத்தியாத்மம். அகங்கரிக்கப்படுவது எதுவோ அது அதிபூத மெனப்படும். அதில் ருத்திரன் அதிதைவதமாம்.()

चित्तमध्यात्ममित्युक्तं चेतव्यं तत्र यद्भवेत् ।
अधिभूतं तदित्युक्तं क्षेत्रज्ञोऽत्राधिदैवतम् ॥ २७ ॥

சித்தம் அத்யாத்ம மெனப்படும். அதில் யாது சிந்திக்கப்படுவதாகின்றதோ அது அதிபூதமெனப்படும். க்ஷேத்திரஞ்ஞன் இதில் அதிதைவதமாம். (உஎ)

तमोऽध्यात्ममिति प्रोक्तं विकारस्तत्र यो भवेत् ।
अधिभूतं तदित्युक्तमीश्वरोऽत्राधिदैवतम् ॥ २८ ॥

தமசு அத்தியாத்ம மெனப்படும். அதில் எந்த விகார முண்டாகின்றதோ அது அதிபூத மெனப்படும். இதில் ஈசுவரன் அதிதைவதமாம். (உஅ)

बाह्यान्तःकरणैरेवं देवतानुग्रहान्वितैः ।
स्वं स्वं च विषयज्ञानं तज्जागरितमुच्यते ॥ २९ ॥

தேவதானுக்கிரகத்தோடுகூடிய பாகியாந்தக் (வெளிஉள்) கரணங்களால் தத்தம் விஷயஞானம் உண்டாவது யாதோ, அது ஜாக்கிர மெனப்படும். (உகூ)

येयं जागरितावस्था शरीरं करणाश्रयम् ।
यस्तयोरभिमानी स्याद्विश्व इत्यभिधीयते ॥ ३० ॥

யாதொரு இந்த ஜாக்கிரவஸ்தை கரணாசிரயமான இலிங்க சரீரமாம். எவன் அவ்விரண்டன் அபிமானியாகின்றானோ, அவன் விசுவ னெனப்படுகின்றான். (௩0)

विश्वं वैराजरूपेण पश्येद्भेदानिवृत्तये ।

விசுவனைப் பேதநீங்கும் பொருட்டு * அ. வைராஜவடிவமாகக் காண்க.

பஞ்சீகரணம்.

अपञ्चीकृतपञ्चमहाभूतानि पञ्चतन्मात्राणि, तत्कार्यं च पञ्चप्राणाः दशेन्द्रियाणि मनो बुद्धिश्चेति सप्तदशकं लिङ्गं भौतिकं हिरण्यगर्भ इत्युच्यते। एतत्सूक्ष्मशरीरमात्मनः। करणेषूपसंहृतेषु जागरितसंस्कारजः प्रत्ययः सविषयः स्वप्न इत्युच्यते । तदुभयाभिमान्यात्मा तैजसः । एतत्त्रयमुकारः।

அபஞ்சீகிருதபஞ்சமகாபூதங்களும், பஞ்சதன்மாத்திரைகளும், அதன் காரியமும் அதாவது பஞ்சப்பிராணன், தசேந்திரியம், மனது, புத்தி என்னும் பதினேழுதத்துவமாகிய இலிங்கமும் பௌதிகமும், ஹிரணியகர்ப்ப மென்று சொல்லப்படும். இஃது ஆத்மாவுக்குச் சூக்ஷ்மசரீரமாம். கரணங்களொடுங்கியபோது ஜாக்கிரஸம்ஸ்காரத்தினுலாகிய பிரத்தியயம் விஷயத்தோடு சொப்பன மென்று சொல்லப்படும். அவ்விரண்டன் அபிமானியாகிய ஆத்மா தைஜஸனுவன். இம்மூன்றும் உகாரமாம்.

வார்த்திகம்.

ज्ञानेन्द्रियाणि पञ्चैव पञ्च कर्मेन्द्रियाणि च ॥ ३१ ॥

ஞானேந்திரியங்களைந்தே கர்மேந்திரியங்களும் ஐந்து (௩௧)

श्रोत्रत्वङ्नयनघ्राणजिह्वा धीन्द्रियपञ्चकम् ।
वाक्पाणिपादपायूपस्थाः कर्मेन्द्रियपञ्चकम् ॥ ३२ ॥

சுரோத்திரம், துவக்கு, நேத்திரம், கிராணம், சிங்ஙுவை என்பன ஞானேந்திரியபஞ்சகம். வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபஸ்தம் என்பன கர்மேந்திரியபஞ்சகம் (௩௨)

* அ. வைராஜபுருஷனென்பதனை ஸ்ரீபாலபோதம் ௬௧-வது பக்கம் ௨அ-வது பிரசங்கத்திலும், ஸ்ரீ பஞ்சதசி ௬௦-வது பக்கத்திலும் காண்க.

मनो बुद्धिरहंकारश्चित्तं चेति चतुष्टयम् ।
संकल्पाख्यं मनोरूपं बुद्धिर्निश्चयरूपिणी ॥ ३३ ॥

மனது, புத்தி, அகங்காரம், சித்தம் என்பன நான்காம். சங்கற்ப மெனப்படுவது மனதின் வடிவம். புத்தி நிச்சயவடிவினது. (நந)

अभिमानात्मकस्तद्वदहंकारः प्रकीर्तितः ।
अनुसंधानरूपं च चित्तमित्यभिधीयते ॥ ३४ ॥

அதுபோல அபிமானவடிவினது அகங்கார மெனப்படும். அநுசந்தான (சிந்தித்தல்) வடிவினது சித்த மென்று சொல்லப் படுகின்றது. (நச)

प्राणोऽपानस्तथा व्यान उदानाख्यस्तथैव च ।
समानश्चेति पञ्चैताः कीर्तिताः प्राणवृत्तयः ॥ ३५ ॥

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என்னும் ஐந்தும் பிராணவிருத்திக ளெனப்படும். (நரு)

खवाय्वग्न्यम्बुक्षितयो भूतसूक्ष्माणि पञ्च च ।
अविद्याकामकर्माणि लिङ्गं पुर्यष्टकं विदुः ॥ ३६ ॥

ஆகாயம், வாயு, அக்கினி, ஜலம், பிருதிவி என்னும் சூக்ஷ்ம பூதங்கள் ஐந்தும், அவித்தியாகாமகர்மங்களுமாகிய இலிங்கத்தினை புரியஷ்டக மென்று அறிவர். (நசு)

एतत्सूक्ष्मशरीरं स्यान्मायिकं प्रत्यगात्मनः ।
करणोपरमे जाग्रत्संस्कारोत्थप्रबोधवत् ॥ ३७ ॥

இது பிரத்தியகாத்மாவுக்கு மாயிகமான சூக்ஷ்மசரீர மாகின்றது; கரணங்களொழிந்தவிடத்து ஜாக்கிரசம்ஸ்காரத் தெழுந்த உணர்ச்சிபோல, (நஎ)

ग्राह्यग्राहकरूपेण स्फुरणं स्वप्न उच्यते ।
अभिमानी तयोर्यस्तु तैजसः परिकीर्तितः ॥ ३८ ॥

கிரகிக்கப்படுவது கிரகிப்பது என்னும் வடிவமாக ஸ்புரித்தல் (விளங்குதல்) சொப்பன மெனப்படும். அவ்விரண்டன் அபிமானி எவனே அவன் தைஜஸ னெனப்படுகின்றான். (ங-அ)

हिरण्यगर्भरूपेण तैजसं चिन्तयेद्बुधः ।

அறிஞன் தைஜஸனை ஹிரணியகர்ப்பவடிவமாகச் சிந்திக்க வேண்டும்.

பஞ்சீகரணம்.

शरीरद्वयकारणमात्माज्ञानं साभासमव्याकृतमित्युच्यते । एतत्कारण शरीरमात्मनः । तच्च न सत्, नासत् । नापि सदसत् । न भिन्नं, नाभिन्नम् । नापि भिन्नाभिन्नं कुतश्चित् । न निरवयवं, न सावयवं । नोभयम् किन्तु केवलब्रह्मात्मैकत्वज्ञानापनोद्यम् ॥

சரீரமிரண்டற்குக் காரணமான ஆத்மாஞ்ஞானம் ஆபாஸனேடுகூடியதாய் அவ்வியாகிருத மெனப்படும். இது ஆத்மாவுக்குக் காரணசரீரம். அதுவும் *கூ. சத்தன்று; அசத்தன்று; சதசத்து மன்று. *கo. பின்னமன்று; அபின்னமன்று; ஓரிடத்தும் பின்னுபின்னமுமன்று; நிரவயவமன்று; *கக. ஸாவயவமன்று; சாவயவநிரவயவ இருவடிவினது மன்று. ஆனல் கேவலப் பிரஹ்மாத்மவொருமைஞானத்தினல் நீக்கத்தக்கதாம்.

வார்த்திகம்.

चैतन्याभासखचितं शरीरद्वयकारणम् ॥ ३९ ॥
आत्माज्ञानं तदव्यक्तमव्याकृतमितीर्यते ।
न सन्नासन्न सदसद्भिन्नाभिन्नं न चोभयम् ॥ ४० ॥

---

*கூ. மூன்று காலத்திலும் பாதிக்கப்படாதது சத்து. இதனை ஸ்ரீ விசாரசந்திரோதயம் எ-ம் கலை சு-வது டிப்பணத்திலும், ஸ்ரீ பாலபோதம் உகூகூ-வது பக்கத்திலும் காண்க.

*கo. பின்னமென்பதனை ஸ்ரீ விசாரசந்திரோதயம் கஎக-வது டக்கத்திற் காண்க.

*கக. ஸாவயவம்:—அவயவத்தோடு கூடியது.

சைதன்னியாபாஸத்தோடு கூடியதான சரீர மிரண்டன் காரணமாகிய ஆத்மாஞ்ஞானம் எதுவோ அது அவ்வியக்தம், அவ்வியாகிருதமென்று சொல்லப்படுகின்றது. அது சத்தன்று; அசத்தன்று; சதசத்தன்று; பின்னமன்று; அபின்னமன்று; இருவடிவமன்று. (௩௯-௪0)

न सभागं न निर्भागं न चाप्युभयरूपकम् ।
ब्रह्मात्मैकत्वविज्ञानहेयं मिथ्यात्वकारणात् ॥ ४१ ॥

பாகத்தோடுகூடியதன்று, பாகமின்றியதன்று; இருவடிவினதுமன்று. மித்தியாத்தன்மைக்காரணத்தால் பிரஹ்மாத்மவொருமைவிஞ்ஞானத்தால் நீக்கத்தக்கதாம். (௪௧)

பஞ்சீகரணம்.

सर्वप्रकारज्ञानोपसंहारे बुद्धेः कारणात्मनावस्थानं सुषुप्तिः । तदुभयाभिमान्यात्मा प्राज्ञः । एतत्त्रयं मकारः ।

எல்லாவித ஞானமுமொடுங்கியபோது புத்தி காரணவடிவமாக நிலைத்தல் சுழுத்தி. அவ்விரண்டன் அபிமானியாகிய ஆத்மா பிராஞ்ஞன். இம்மூன்றும் மகாரம்.

வார்த்திகம்.

ज्ञानानामुपसंहारो बुद्धेः कारणतास्थितिः ।
वटबीजे वटस्येव सुषुप्तिरभिधीयते ॥ ४२ ॥

ஆலவித்தில் ஆலமரத்தினைப்போல ஞானங்களின் ஒடுக்கமான புத்தியின் காரணத்தன்மை ஸ்திதி சுழுத்தியெனப்படும். (௪௨)

अभिमानी तयोर्यस्तु प्राज्ञ इत्यभिधीयते ।
जगत्कारणरूपेण प्राज्ञात्मानं विचिन्तयेत् ॥ ४३ ॥

அவ்விரண்டன் அபிமானி எவனோ அவன் பிராஞ்ஞனெனப்படுகின்றான். பிராஞ்ஞனாகிய ஆத்மாவை ஜகத்காரணவடிவமாகச் சிந்திக்கவேண்டும். (௪௩

பஞ்சீகரணம்.

अकार उकारे, उकारो मकारे, मकार ॐकारे ॐकारोऽहम्येव ।

அகாரத்தினை உகாரத்திலும், உகாரத்தினை மகாரத்திலும், மகாரத்தினை ஓங்காரத்திலும், ஓங்காரத்தினை அகமென்பதிலுமே ஒடுக்கவேண்டியது.

வார்த்திகம்.

विश्वतैजससौषुप्तविराट्सूत्राक्षरात्मभिः ।
विभिन्नमिव संमोहादेकतत्त्वं चिदात्मकम् ॥ ४४ ॥

விசுவ தைஜஸ ஸௌஷுப்த(பிராஞ்ஞ)விராட் சூத்ராத்மா அக்ஷராத்மாக்களினின்றும் வேறுபட்டது போல ஏகதத்துவமான சிதாத்மாவை மோகத்தினால் காண்கிறான். (சச)

विश्वादिकत्रयं यस्माद्वैराजादित्रयात्मकम् ।
एकत्वेन समं पश्येदन्याभावप्रसिद्धये ॥ ४५ ॥

வைராஜன்முதலிய மூன்று வடிவமான விசுவாதி மூன்றையும் ஏகத்துவமாக அந்நியாபாவப்பிரசித்தியின் பொருட்டுச் சமமாகக் காணவேண்டும். (சரு)

ॐकारमात्रमखिलं विश्वप्राज्ञादिलक्षणम् ।
वाच्यवाचकताभेदाद्भेदेनानुपलब्धितः ॥ ४६ ॥

* கஉ. வாச்சியவாசகத்தன்மையபேதத்தாலும், பேதமாகக் காணப்படாமையாலும், விசுவப்பிராஞ்ஞாதிலக்ஷணமுடைய எல்லாவற்றையும் ஓங்காரமாத்திரமாக அறியவேண்டும். (சசு)

अकारमात्रं विश्वः स्या दुकारस्तैजसः स्मृतः ।
प्राज्ञो मकार इत्येवं परिपश्येत्क्रमेण तु ॥ ४७ ॥

விசுவனே அகாரமாத்திர மாகின்றானென்றும், தைஜஸன் உகாரமாய்க் கருதப்படுகின்றானென்றும், பிராஞ்ஞன் மகாரமாகின்றானென்றும், இவ்வாறு கிரமமாய்க் காணவேண்டியது. (சஎ)

---

* கஉ. வாச்சியம் சொல்லப்படுவதாகிய பொருள். வாசகம் சொல்லுவதாகிய சொல்.

समाधिकालात्प्रागेवं विचिन्त्यातिप्रयत्नतः ।
स्थूलसूक्ष्मक्रमात्सर्वं चिदात्मनि विलापयेत् ॥ ४८ ॥

சமாதிகாலத்திற்குமுன் இவ்வாறு மிகுந்த பிரயத்தனத்தால் சிந்தித்து ஸ்தூலசூக்ஷ்மக்கிரமமாக எல்லாவற்றையும் சிதாத்மாவில் ஒடுக்கவேண்டியது. (சஅ)

अकारं पुरुषं विश्व मुकारे प्रविलापयेत् ।
उकारं तैजसं सूक्ष्मं मकारे प्रविलापयेत् ॥ ४९ ॥

அகாரமாகிய விசுவபுருஷனை உகாரத்தில் ஒடுக்கவேண்டியது. உகாரமான சூக்ஷ்மதைஜஸனை மகாரத்தில் ஒடுக்கவேண்டியது.

मकारं कारणं प्राज्ञं चिदात्मनि विलापयेत् ।

மகாரமாகிய காரணப்பிராஞ்ஞனைச் சிதாத்மாவில் ஒடுக்கவேண்டியது. (ருo)

### பஞ்சீகாணம்.

अहमात्मा साक्षी केवलश्चिन्मात्रस्वरूपः, नाज्ञानं नापि तत्कार्यम् । किन्तु नित्यशुद्धबुद्धमुक्तसत्यस्वभावं परमानन्दाद्वयं प्रत्यग्भूतचैतन्यं ब्रह्मैवाहमस्मीत्यभेदेनावस्थानं समाधिः । "तत्त्वमसि" ( छान्दो० ६।८।७ ) "ब्रह्माहमस्मि" ( परमहं० ३ ) "प्रज्ञानमानन्दं ब्रह्म" ( ऐ० । बृ० ३ । ९ ), "अयमात्मा ब्रह्म" ( बृह० २।५।१९ ) इत्यादिश्रुतिभ्यः ॥ इति पञ्चीकरणं भवति ॥ ॐ ॥

इति श्रीमच्छंकराचार्यविरचितं

॥ पञ्चीकरणम् ॥

யான் ஆத்மா; சாக்ஷி; கேவலன்; சின்மாத்திர சொரூபன்; அஞ்ஞானமுமல்லன்; அதன் காரியமுமல்லன்; ஆனால் நித்தியசுத்த புத்தமுக்தசத்தியசுபாவமான பரமாநந்தாத்வய பிரத்தியக்

வடிவ சைதன்னியமாகிய பிரஹ்மமே யான் என்று அபேதமாக நிலைத்தல் சமாதி; "* கங. தத்துவமஸி." "* கச. பிரஹ்மம் யான்." "* கரு. பிரஞ்ஞானம் ஆநந்தம் பிரஹ்மம்." "* கசு. இவ்வாத்மா பிரஹ்மம்." என்றல் முதலியசுருதிகளால். இவ்வாறு பஞ்சீகரணமாகின்றது. ஓம்.

ஸ்ரீமத் சங்கராச்சாரிய ஸ்வாமிகளால் இயற்றப்பட்ட

## பஞ்சீகரணம்

முடிந்தது.

---

வார்த்திகம்.

चिदात्माहं नित्यशुद्धबुद्धमुक्तसदद्वयः ॥ ५० ॥
परमानन्दसंदोहवासुदेवोऽहमोमिति ।
ज्ञात्वा विवेचकं चित्तं तत्साक्षिणि विलापयेत् ॥ ५१ ॥

---

* கங. "தத்துவமஸி=அது நீயாயிருக்கின்றாய்" என்பதனை சுகாஹஸ்யோபநிடதத்திலும், சாமவேத சாந்தோக்கிய உபநிடதம் ஆறுவது பிரபாடகத்திலும், விசாரசந்திரோதயம் கக-ம்கலை உஉச-வது பக்கத்திலும், விசாரசாகரம் சுoரு-வது பக்கத்திலும் தத்துவமஸிமகாவாக்கியவுபதேச மென்னும் நூலிலும் காண்க.

* கச. "பிரஹ்மம் யான்" என்பதனை பரமஹம்ஸோபநிடதத்திலும், "அஹம் பிரஹ்மாஸ்மி=நான் பிரஹ்மமாயிருக்கின்றேன்" என்பதனை எஜுர்வேத பிருகதாரணியக உபநிடதத்திலும், ஸ்ரீ விசாரசந்திரோதயம் உஉச-வது பக்கத்திலும், விசாரசாகரம் சுoரு-வது பக்கத்திலும், ஸ்ரீ பஞ்சதசி உகஎ-வது பக்கத்திலும் காண்க.

* கரு. "பிரஞ்ஞானம் பிரஹ்மம்=மிக்கறிவு (பேரறிவு) பிரஹ்மம்" என்பதனை இருக்குவேத ஐதரேய உபநிடத மகாவாக்கியத்திலும், பிரகதாரணியகம் ங-கூ-லும், ஸ்ரீ விசாரசந்திரோதயம் உஉச-வது பக்கத்திலும், ஸ்ரீவிசாரசாகரம் சுoரு-வது பக்கத்திலும், ஸ்ரீ பஞ்சதசி உகங-வது பக்கத்திலும் காண்க.

* கசு. "அயமாத்மா பிரஹ்மம்=இவ்வாத்மா பிரஹ்மம்" என்னும் அதர்வணவேத மாண்டூக்கிய உபநிடதமகாவாக்கியத்தினைப் பிரகதாரணியகம் உ-ரு-ககூ-லும், ஸ்ரீ விசாரசந்திரோதயம் உஉச-வது பக்கத்திலும், ஸ்ரீ விசாரசாகரம் சுoச-வது பக்கத்திலும், ஸ்ரீ பஞ்சதசி ௩oஉ-வது பக்கத்திலும் காண்க.

நித்திய சுத்த புத்த முக்த சதத்வய சிதாத்மா யான், பரமா நந்த பூர்ணவாசுதேவன் யான், ஓம் என்று அறிந்து விவேகஞ் செய்யும் சித்தத்தினை அதன் சாக்ஷியினிடத்து ஒடுக்கவேண்டும். (ருo-ருக)

चिदात्मनि विलीनंचे त्तच्चित्तं नवै चालयेत् ॥
पूर्णबोधात्मनासीत पूर्णाचलसमुद्रवत् ॥ ५२ ॥

சிதாத்மாவினிடத்து ஒடுங்குமாயின், அந்தச்சித்தம் அசைக் கப்படாது. பூர்ணமான அசைவின்றிய சமுத்திரம்போல் பூர்ண போதவடிவமாக இருக்கும். (ருஉ)

एवं समाहितो योगी श्रद्धाभक्तिसमन्वितः ।
जितेन्द्रियो जितक्रोधः पश्येदात्मानमद्वयम् ॥ ५३ ॥

இப்படிச் சமாதியுடைய யோகி சிரத்தா பக்தியோடு கூடிய வனாய் * கஎ. ஜிதேந்திரியனாய் * கஅ. ஜிதக்குரோதனாய் அத்வ யமான ஆத்மாவைப் பார்க்கக்கடவன். (ருங)

आदिमध्यावसानेषु दुःखं सर्वमिदं यतः ।
तस्मात्सर्वं परित्यज्य तत्त्वनिष्ठो भवेत्सदा ॥ ५४ ॥

எதனால் இவையாவும் ஆதியிலும், நடுவிலும், முடிவிலும் துக்கவடிவமோ, அதனால் எல்லாவற்றையும் விட்டு எப்போதும் தத்துவநிஷ்டனா யிருக்கக்கடவாய். (ருச)

यः पश्येत्सर्वगं शान्तमानन्दात्मानमव्ययम् ।
न तेन किञ्चिदाप्तव्यं ज्ञातव्यं वावशिष्यते ॥ ५५ ॥

எவன் எல்லாவற்றினிருப்பதும், சாந்தமும், ஆநந்தமும், அவ்வியயமுமான ஆத்மாவைக் காண்கின்றானோ, அதனால் அவ னுக்கு அடையத்தக்கதும் அறியத்தக்கதுமான எதுவும் மிஞ்சு கிறதில்லை. (ருரு)

---

* கஎ. ஜிதேந்திரியன் = இந்திரியங்களை ஜயித்தவன்.

* கஅ. ஜிதக்குரோதன் = கோபத்தை வென்றவன். கோபத்தின் சொரூபத்தை விசாரித்தல் என்பதனை ஸ்ரீபஞ்சதசி உஅங-வது பக்கத்திற் காண்க.

कृतकृत्यो भवेद्विद्वाञ्जीवन्मुक्तो भवेत्सदा ।
आत्मन्यारूढभावस्तु जगदेतन्न वीक्षते ॥ ५६ ॥

*வித்வான் கிருதகிருத்தியனுகின்ருன் ; எப்போதும் ஜீவன் முக்தனுகின்ருன். ஆத்மாவிலேறிய தன்மையுடையவன் இவ்வுலகத்தைப் பார்க்கிறதில்லை.* (ருசு)

कदाचिद्व्यवहारेषु द्वैतं यद्यपि पश्यति ।
बोधात्मव्यतिरेकेण न पश्यति चिदन्वयात् ॥ ५७ ॥

*ஒருகால் வியவகாரங்களில் துவைதத்தைப் பார்ப்பானுயின், யாவும் சித்தோடுகூடியிருத்தலால், போதாத்மாவுக்கு வேருகக் காணுன்.* (ருஎ)

किन्तु पश्यति मिथ्येदं दिङ्मोहेन्दुविभागवत् ।
प्रतिभासशरीरः स्यात्तदा प्रारब्धसंचयात् ॥ ५८ ॥

*ஆனுல் இதனைத் திக்குப்பிரமத்தினைப் போலும், சந்திரவிபாகம (இரட்டைச்சந்திரன்)போலும் மித்தையாகக் காண்கின்ருன். அப்போது பிராரப்தச்சேர்க்கையால் தோற்றமாத்திர சரீரமுடையவனுகின்ருன்.* (ருஅ)

" तस्य तावदेव चिर " मित्यादिश्रुतिरब्रवीत् ।
प्रारब्धस्यानुवृत्तिस्तु मुक्तस्याभासमात्रतः ॥ ५९ ॥

*" அவனுக்கு (ஜீவன்முக்தனுக்கு) அதுவரையிலுமே(தேகம் விழும்பரியந்தமே விலம்ப(தாமத)மிருக்கின்றது" என்று சாந்தோக்கியமுதலிய சுருதிகள் கூறுகின்றன. முக்தனுக்குப் பிராரப்தத்தின் *கக. அநுவிருத்தியோ ஆபாஸமாத்திரமாக உளது.*

सर्वदा मुक्त एव स्याज्ज्ञाततत्त्वः पुमानसौ ।
प्रारब्धशेषभागस्य संक्षये तदनन्तरम् ॥ ६० ॥

*தத்துவமுணர்ந்த இப்புருஷன் எப்போதும் முக்தனேயாகின்ருன். பிராரப்தசேஷபோகம் குறைந்தபோது, அதன்பின்,*

अविद्यातिमिरातीतं सर्वाभासविवर्जितम् ।
चैतन्यममलं शुद्धं मनोवाचामगोचरम् ॥ ६१ ॥

---

* கக. அநுவிருத்தி=பின்னிகழ்ச்சி. இதனை ஸ்ரீ பஞ்சதசி பிரத்தியக் தத்துவவிவேகம் ருஎ-வது சுலோகத்திலும், அதன் விளக்கவுரையிலும் காண்க.

அவித்தையாகிய இருளைக் கடந்ததும், சர்வாபாஸங்களும் நீங்கியதும், சைதன்னியமும், மலமின்றியதும், சுத்தமும், மனவாக்குகளுக் கெட்டாததும், (சுக)

वाच्यवाचकनिर्मुक्तं हेयोपादेयवर्जितम् ।

प्रज्ञानघनमानन्दं वैष्णवं पदमश्नुते ॥ ६२ ॥

வாச்சியவாசகத்தன்மைகளினின்று விடுபட்டதும், தள்ளத்தக்கதும் கொள்ளத்தக்கது மல்லாததும், பிரஞ்ஞானகனமும், ஆநந்தமுமான * உ௦. வைஷ்ணவபதத்தை அநுபவிக்கின்றான். ( )

इदं प्रकरणं यस्माज्ज्ञातव्यं भगवत्तमैः ।

अमानित्वादिनियमैर्गुरुभक्तिप्रसादतः ॥ ६३ ॥

இப்பிரகரணம் எதனால் மிக்கைசுவரியமுடைமையாகிய அமானித்துவாதி நியமங்களால் குருபக்திப்பிரசாதத்தால் அறியத்தக்கதோ, (சுங)

इमां विद्यां प्रयत्नेन योगी संध्यासु सर्वदा ।

समभ्यसेदिहामुत्र भोगानासक्तधीः सुधीः ॥ ६४ ॥

அதனால் இகலோகபரலோகபோகங்களில் இச்சையில்லாதவனும் நற்புத்தியுடையவனுமாகிய யோகி, இந்தவித்தையினைச் சந்திகளில் எப்போதும் பிரயத்தனத்தால் செவ்வையாய் அப்பியசிக்கக்கடவன். (சுச

रागद्वेषादिरहितं स्वात्मानं चिन्तयेत्सदा ।

स एव जीवन्मुक्तो वा न पुनर्भवसंभवः ॥ ६५ ॥

इति श्रीमत्सुरेश्वराचार्यविरचितं पञ्चीकरणवार्तिकं

॥ संपूर्णम् ॥

இராகத்துவேஷமின்றிய தனதாத்மாவை யெப்போதும் சிந்திக்கக்கடவன் அவனே ஜீவன்முக்தன். அவனுக்கு மறுபடியும் பிறப்புச் சம்பவித்தலில்லை. (சுரு)

ஸ்ரீமத் சங்கராசாரியஸ்வாமிகளால் இயற்றப்பட்ட பஞ்சீகரணமும், ஸ்ரீமத் சுரேசுவராசிரியராற் செய்யப்பட்ட வார்த்திகமும் முடிந்தன.

---

* உ௦. வைஷ்ணவபதம் = வியாபகமான பதம். அறிஞர்களா லறியப்படுவதனால் பத மெனப்படுகின்றது.

|| ॐ तत्सद्ब्रह्मणे नमः ||

# || जीवन्मुक्तानंदलहरी ||

ஸ்ரீ பரமஹம்ஸபரிவிராஜகாசாரிய

ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள்

அருளிச்செய்த

## ஜீவன்முக்தாநந்தலஹரி.

पुरे पौरान्पश्यन् नरयुवतिनामाकृतिमयान् ।
सुवेषान् स्वर्णालंकरणकलितांश्चित्रसदृशान् ॥
स्वयंसाक्षाद्द्रष्टेत्यपि च कलयन् तैस्सह रमन् ।
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ १ ॥

குருதீக்ஷையினால் அஞ்ஞானவிருணீங்கிய முனியானவன் புரத்தில் நல்ல வேஷமுடையவராயும், பொன்னாபரணங்களாலலங்கரிக்கப்பட்டவர்களாயும், சித்திரம்போன்றவர்களாயுமிருக்கின்ற மானிடப்பெண்களென்னும் பெயர்வடிவமயமானவர்களுமான புரவாசிகளைக் கண்டும், வசனித்தும், அவர்களோடு கிரீடித்தும் மோகத்தை யடைகிறதில்லை. (க)

वने वृक्षान्पश्यन् दळफलभरान् नम्रसुशिखान् ।
घनच्छायाच्छन्नान् बहुळकलकूजद्द्विजगणान् ॥
भजन् घस्रे रात्राववनितलकल्पैकशयनो ।
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ २ ॥

குருதீக்ஷையினால் அஞ்ஞானவிருணீங்கியவனாய்ப் பகலிலும் இரவிலும் பூமியையே சயனமாகவுடைய முனியானவன், வனத்தில் தளிர்களாலும் பழங்களாலும் நிறைந்துள்ளனவும், வளைந்த நல்ல கிளைகளுள்ளனவும், நெருங்கிய நிழல்களாற் மறைக்கப்பட்டனவுமாகிய விருக்ஷங்களையும் இனிய குரலோடு கூவும் பக்ஷிக்கூட்டங்களையும் பார்த்து, மோகத்தை யடையமாட்டான்.()

कदाचित् प्रासादे क्वचिदपि च सौधेषु धनिनां ।
कदाकाले शैले क्वचिदपि च कूलेषु सरिताम् ॥
कुटीरे दांतानां मुनिजनवराणामपि वसन् ।
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ ३ ॥

குருதீக்ஷையினால் அஞ்ஞானவிருணீங்கிய முனியானவன் ஒருகாலத்து அரண்மனையிலும், ஒருகாலத்து செல்வர்மாளிகை யிலும், ஒருகாலத்து மலையிலும், (கங்கை முதலிய) ஆற்றின்கரை களிலும், இந்திரியஜயமுள்ள முனிசிரேஷ்டர்களது ஆசிரமங் களினும் வசிக்கினும், மோகத்தை யடைகிறதில்லை. (௩)

क्वचिद्बालैस्साधं करतलजतालैस्सहसितैः ।
क्वचित्तारुण्यालंकृतिनरनरीभिस्सह रमन् ॥
क्वचिद्वृद्धैश्चिंताकुलितहृदयैश्चापि विलपन् ।
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ ४ ॥

குருதீக்ஷையினால் அஞ்ஞானவிருணீங்கிய முனியானவன் ஓரிடத்துக் கைகொட்டி விளையாடும் பாலர்களுடனும், ஓரிடத்து அலங்கரிக்கப்பட்ட தாருணியமான நரநாரியருடன் இரமித்தும், ஓரிடத்து வியாகூலப்பட்ட ஹிருதயமுடைய விருத்தர்களோடு புலம்பியும் மோகத்தை யடைகிறதில்லை. (௪)

कदाचिद्विद्वद्भिर्विविदिषुभिरत्यंतनिरतैः ।
कदाचित्काव्यालंकृतिरसरसालैः कविवरैः ॥
कदाचित्सत्तर्कैरनुमितिपरैस्तार्किकवरैः ।
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ ५ ॥

குருதீக்ஷையினால் அஞ்ஞானவிருணீங்கிய முனியானவன் ஒருகாலத்து வித்துவான்களோடும், முழுமுயற்சியுடையோரா கிய ஞானவிருப்புடையோரோடும், ஒருகாலத்து காவியாலங் காரரசதற்பரர்களாகிய கவிசிரேஷ்டர்களோடும், ஒருகாலத்து நல்லதர்க்கஞ்செய்யும் அநுமிதிபரர்களாகிய தார்க்கிகசிரேஷ்டர் களோடும் கூடியும் மோகத்தையடைகிறதில்லை. (௫)

कदाध्यानाभ्यासैः क्वचिदपि सपर्या विकसितैः ।
सुगंधैस्सत्पुष्पैः क्वचिदपि दळैरेव विमलः ॥
प्रकुर्वन् देवस्य प्रमुदितमनास्सन्नतिपरो ।
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ ६ ॥

குருதீக்ஷையினால் அஞ்ஞானவிருணீங்கிய முனியானவன் ஒருகாலத்துத் தியானப்பியாசங்களாலும், ஒருகாலத்து வாசனையுள்ள நல்ல புஷபங்களாலும், ஒருகாலத்து வில்வமுதலிய தளங்களாலும், தெய்வத்தின் பூஜையைச் செய்து களிப்படைந்த மனமுடையவனாய் வணக்கமுடையவனாயினும் மோகத்தையடைகிறதில்லை. (௬)

शिवायाश्शंभोर्वा क्वचिदपि च विष्णोरपि कदा ।
गणाध्यक्षस्यापि प्रकटतपनस्यापि च कदा ॥
पठन्वै नामाळिः नयनरचितानंदसारितो ।
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ ७ ॥

குருதீக்ஷையினால் அஞ்ஞானவிருணீங்கிய முனியானவன் ஒருகாலத்துச் சிவை, சம்பு, ஒருகாலத்து விஷ்ணு, கணேசன், ஒருகாலத்துப் பிரகடமான அக்கினியென்னும் இவற்றின்நாமங்களை யுச்சரித்து, கண்களினாற் பெருக்கப்பட்ட ஆநந்தபாஷ்பமுடையவனாயினும் மோகத்தையடையமாட்டான். (எ)

कदा गंगांभोभिः क्वचिदपि च कूपोत्थसलिलैः
क्वचित्कासारोत्थैः क्वचिदपि सदुष्णैश्च शिशिरैः ॥
भज स्नानं भूत्या क्वचिदपि च कर्पूरनिभया ।
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ ८ ॥

குருதீக்ஷையினால் அஞ்ஞான விருணீங்கிய முனியானவன் ஒருகாலத்து கங்காஜலத்தினாலும், ஒருகாலத்துக் கிணற்றுஜலத்தினாலும், ஒருகாலத்து ஏரிகளிலுள்ள ஜலங்களினாலும், ஒருகாலத்து உஷ்ணஜலத்தினாலும், ஒருகாலத்து குளிர்ந்தநீரினாலும் ஸ்நானஞ்செய்து கர்ப்பூரம்போல் வெண்மையான விபூதியணியினும் மோகத்தையடையான். (அ)

कदाचित् जागर्त्यां विषयकरणैस्संव्यवहरन् ।
कदाचित् स्वप्नस्थानपि च विषयानेव च भजन् ॥
कदाचित् सौषुप्तं सुखमनुभवन्नेव सततं ।
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ ९ ॥

குருதீக்ஷையினுல் அஞ்ஞானவிருணீங்கிய முனியானவன் ஒருகாலதது ஜாக்கிரத்தில் விஷயங்களோடும் கரணங்களோடும் வியவகரித்தும், ஒருகாலத்துச் ஸொப்பனத்திலுள்ள விஷயங்கள் மாத்திரத்தை யநுபவித்தும், ஒருகாலத்துச் சுழுத்தியிலுள்ள சுகத்தைமாத்திர மனுபவித்தும், என்றும் மோகத்தை யடைகிறதில்லை. (௯)

कदाप्याशा वासाः क्वचिदपि च दिव्यांबरधरः ।
क्वचित्पंचास्योत्थां त्वचमपि दधानः कटितटे ॥
मनस्वी निस्संगस्सुजनहृदयानंदजनको ।
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ १० ॥

குருதீக்ஷையினுல் அஞ்ஞானவிருணீங்கிய முனியானவன் நல்லோரிதயத்தி லாநந்தத்தையுண்டுபண்ணுபவனும், ஒருகாலத்துத் திக்கைவஸ்திரமாயுடையவனும், ஒரு காலதது நல்லவஸ்திரங்களைத் தரித்தவனும், ஒருகாலத்துக் கடிதடங்களில் புலியின்றோலை யுடுத்தவனும், புத்திமானும், பற்றின்றியவனும் மோகத்தையடைகிறதில்லை. (௧0)

कदाचित् सत्वस्थः क्वचिदपि रजोवृत्तिषु गतः ।
तमोवृत्तिः क्वापि त्रितयरहितः क्वापि च पुनः ॥
कदाचित्संसारी श्रुतिपथविहारी क्वचिदहो ।
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ ११ ॥

குருதீக்ஷையினுல் அஞ்ஞானவிருணீங்கிய முனியானவன் ஒருகாலத்துச் சத்துவவிருத்தியி லிருப்பவனும், ஒருகாலத்து ரஜோவிருத்தியி லிருப்பவனும், ஒருகாலத்துத் தமோவிருத்தியி லிருப்பவனும், மீண்டுமொருகாலத்து அம்மூன்று விருத்தியு மிலலாதவனும், ஒருகாலத்துச் சம்ஸாரியும், ஒருகாலத்து வேதமார்க்கத்திற் செல்பவனுமாய் மோகத்தை யடைகிறதில்லை. (௧௧)

कदाचिन्मौनस्थः क्वचिदपि च वाग्वादनिरतः ।
कदाचित्सानंदं हसितरभसं त्यक्तवचनः ॥
कदाचिल्लोकानां व्यवहृतिसमालोकनपरो ।
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ १२ ॥

குருதீக்ஷையினால் அஞ்ஞானவிருணீங்கிய முனியானவன் ஒருகாலத்து மௌனமாயிருப்பன். ஒருகாலத்து வாக்குவாதநிரதனாவன். ஒருகாலத்து ஆநந்தத்தோடு புன்சிரிப்போடாரவாரித்து வார்த்தைபேசாதவனாவன். ஒருகாலத்து உலகவியவகாரத்தைச் செவ்வையாய்க் கவனிக்குந்தன்மையுடையவனாவன். என்றாலும் மோகத்தை யடைகிறதில்லை. (கஉ)

कदाचिच्छक्तीनां विकचमुखपद्मेषु कमलान् ।
क्षिपन् तासां क्वापि स्वयमपि च गृह्णन्स्वमुखतः ॥
सदद्वैतं रूपं निजपरविहीनं प्रकटयन् ।
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ १३ ॥

குருதீக்ஷையினால் அஞ்ஞானவிருணீங்கிய முனியானவன் ஒருகாலத்து சக்திகளின் மலர்ந்த முகத்தாமரைகளில் கமலங்களையெறிந்தும், ஒருகாலத்து அவற்றைத்தானும் கிரகித்தும், தான்பிறரென்பதின்றிய அத்வைதவடிவத்தைப் பிரகடஞ் செய்தும் மோகத்தையடையான். (க௩)

क्वचिच्छैवैस्सार्धं क्वचिदपि च शाक्तैस्सह वसन् ।
कदा विष्णोर्भक्तैः क्वचिदपि च सौरैस्सह वसन् ॥
कदा गाणापत्यैर्गतसकलभेदोऽद्वयतया ।
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ १४ ॥

குருதீக்ஷையினால் அஞ்ஞானவிருணீங்கிய முனியானவன் ஒருகாலத்துச் சைவர்களோடும், ஒருகாலத்துச் சாக்தர்களோடும் வசித்தும், ஒருகாலத்து விஷ்ணுபக்தரோடும், ஒருகாலத்துச் சௌரர் (சூரியபக்திசெய்வோர்) களுடனும் வசித்தும், சிலகாலத்துக் காணபத்தியரோடு வசித்தும், அத்வைதத்தன்மையால் சகலபேதமு நீங்கியவனாய் மோகத்தையடையான். (க௪)

निराकारं क्वापि क्वचिदपि च साकारममलं ।
निजं शैवं रूपं विविधगुणभेदेन बहुधा ॥
कदाश्चर्यं पश्यन् किमिदमिति हृष्यन्नपि कदा ।
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ १५ ॥

குருதீக்ஷையினால் அஞ்ஞானவிருணீங்கிய முனியானவன் ஒருகாலத்து நிராகாரமும், ஒருகாலத்துச் சாகாரமுமாக அமலமும் நிஜமுமாகிய சிவத்தினுருவத்தைப் பல்வகைக்குணபேதத்தால் வெகுவிதமாய்க் கண்டும், ஒருகாலத்து ஆச்சரியத்தைக்கண்டும் ஈதென்னை?யென்று சிரித்தும் மோகத்தை யடைகிறதில்லை.( )

कदाद्वैतं पश्यन्नखिलमपि सत्यं शिवमयं ।
महावाक्यार्थानामवगतिसमाभ्यासवशतः ॥
गतद्वैतभावः शिवशिवशिवेत्येव विलपन् ।
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥ १६ ॥

குருதீக்ஷையினால் அஞ்ஞானவிருணீங்கிய முனியானவன் ஒருகாலத்துச் சகலதுவைதத்தையும் மகாவாக்கியார்த்தத்தின் ஞானப்பியாசவசத்தினால் சத்தியமான சிவமயமாகக் கண்டும், துவைதபாவநீங்கியவனாய் சிவ சிவ சிவ வென்று சொல்லிக்கொண்டும் மோகத்தையடைகிறதில்லை (கசு)

इमां मुक्तावस्थां परमशिवसंस्थां गुरुकृपा- ।
सुधापांगावाप्यां सहजसुखवाप्यामनुदिनं ॥
मुहुर्मज्जन् मज्जन् भजति सुकृतैश्चेन्नरवर- ।
स्तदा त्यागी योगी कविरिति वदंति ह कवयः ॥ १७ ॥

॥ इति श्रीपरमहंसपरिव्राजकाचार्य श्रीमच्छंकराचार्यविरचिता
जीवन्मुक्तानंदलहरी
समाप्ता ॥

நரசிரேஷ்டன் குருகிருபாகடாக்ஷவமிர்தத்தால் அடையப்பட்டதும், மேலான சிவஸ்தானமுமாகிய இம்முக்தாவஸ்தையைச் சகஜசுகவாவியில் அனுதினமும் அடிக்கடி மூழ்கி மூழ்கி நல்லவர்களோடு பஜிப்பானாயின்; அப்போது அவனைக் கவிகள் தியாகி, யோகி, கவி யென்று சொல்லுகிறார்கள். (கஎ)

ஜீவன் முக்தாநந்தலஹரி
முற்றிற்று.

ஓம் தத் ஸத் பிரஹ்மணே நம:

## ॥ एकश्लोकी ॥

## ஏகசுலோகி.

किं ज्योतिस्तव भानुमानहनि रात्रौ प्रदीपादिकम् ।
स्यादेवं रविदीपदर्शनविधौ किं ज्योतिराख्याहि मे ॥
चक्षुस्तस्य निमीलनादिसमये किं ज्योतिर्धीर्धियोर्दर्शने ।
किं तत्राहमतो भवान् परमकं ज्योतिस्तदस्मि प्रभो ॥ १ ॥

உனக்கு ஜோதி (பிரகாசம்) யாது? பகலில் சூரியன்; இரவில் தீபமுதலியன. இவ்வாறாகுக. சூரியனையும் தீபத்தையும் பார்க்கும் விஷயத்தில் ஜோதியாது? சொல் எனக்கு. நேத்திரமாம். நேத்திரமூடியபோது ஜோதியாது? புத்தியாம். புத்தியைக்காணுமிடத்து ஜோதியாது? அங்கு யானும் தாமுமானபரம (மேலான) ஜோதி எதுவோ அது (தான்) இருக்கின்றது பிரபுவே. (க)

॥ इति श्रीमच्छंकराचार्यविरचितयेकश्लोकी संपूर्णम् ॥

இவ்வாறு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அருளிய

ஏகசுலோகி

முடிந்தது.

## ॥ काशीपञ्चकम् ॥

## காசீபஞ்சகம்.

मनोनिवृत्तिः परमोपशांतिः सा तीर्थवर्या मणिकर्णिका च ।
ज्ञानप्रवाहा विमलादिगंगा सा काशिकाहं निजबोधरूपा ॥ १ ॥

மனோநிவிருத்தியாகிய பரமோபசாந்தி தீர்த்த சிரேஷ்டமான மணிகர்ணிகையாம். ஞானப்பிரவாகம் விமலாதி கங்கையாம். அந்த நிஜபோதவடிவமான காசிகையான் (க)

यस्यामिदं कल्पित मिंद्रजालं चराचरं भाति मनोविलासम् ।
सच्चित्सुखैका परमात्मरूपा सा काशिकाहं निजबोधरूपा ॥ २ ॥

எதனிடத்துக் கற்பிதமாகிய இந்திரஜால சராசரமான மனோவிலாசம் தோற்றுகின்றதோ அந்தச் சச்சிதாநந்த ஏகமும், பரமாத்மரூபமும், விமலபோதவடிவமுமான காசிகையான். (உ)

कोशेषु पंचस्वधिराजमाना बुद्धिर्भवानी प्रतिदेहगेहं ।
साक्षी शिवः सर्वगतोंतरात्मा सा काशिकाहं निजबोधरूपा ॥ ३ ॥

கோசங்களைந்திலும் விளங்குவதாயும், தேகமாகிய வீடு தோறும் புத்தியாகிய பவானியாயும், சாக்ஷியாயும், சிவமாயும், எல்லாவற்றினுமிருக்கும். அந்தராத்மாவும், விமலபோதவடிவமுமான அந்தக் காசிகையான். (ங)

काश्यां हि काशते काशी काशी सर्वप्रकाशिका ।
सा काशी विदिता येन तेन प्राप्ता हि काशिका ॥ ४ ॥

காசியிலேயே பிரகாசிக்கிறது காசி. காசியென்பது எல்லாவற்றையும் பிரகாசிக்கச்செய்வதாம். அந்தக் காசி எவனால் அடையப்பட்டதாமோ, அவனால் காசிகை அடையப்பட்டதேயாம். (ச)

काशीक्षेत्रं शरीरं त्रिभुवनजननी व्यापिनी ज्ञानगंगा ।
भक्तिः श्रद्धा गयेयं निजगुरुचरणध्यानयोगः प्रयागः ॥
विश्वेशोयं तुरीयः सकलजनमनः साक्षिभूतोऽन्तरात्मा ।
देहे सर्वं मदीये यदिवसति पुनस्तीर्थमन्यत्किमस्ति ॥ ५ ॥

காசிக்ஷேத்திரம் சரீரம், திரிபுவன ஜனனியான வியாபாரமுடையது ஞானகங்கை. பக்திசிரத்தை இந்தக் கயை. தனதுகுரு பாதகமலங்களின் தியானயோகம் பிரயாகை. சகல ஜனங்களின்

மனதின் சாக்ஷிவடிவ அந்தராத்மா இத்தூரிய விசுவேசன். யாவும் எனது தேகத்தில் வசிக்கின், பின்வேறு என்னையுளது? ()

॥ इति श्रीमच्छंकराचार्यविराचितं काशीपंचकं संपूर्णम् ॥

இவ்வாய ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அருளிய

## காசீபஞ்சகம்

முடிந்தது.

---

## ॥ मायापंचकम् ॥

## மாயா பஞ்சகம்.

निरवधि निरंशकेप्यखण्डे मयि चिति सर्वविकल्पनादिशून्ये ।
घटयति जगदीशजीवभेदं अघटितघटनापटीयसी हि माया ॥ १ ॥

* அவதியில்லாததும், * அம்சமில்லாததும், * அகண்டமும், சர்வ விகற்பமுதலியன வில்லாததுமான சித்தாகிய என்னிடத்தும். ஜகத்து ஈசன் ஜீவனென்னும் பேதத்தினை நிகழச்செய்கின்றது. ஆதலால் * நிகழாததை நிகழச்செய்தலில் வல்லதுமாயை. (க)

सुखचिदमलबोधमद्वितीयं वियदनिलादिनिर्मिते नियोज्य ।
भ्रमयति भवसागरे नितान्तं अघटितघटनापटीयसी हि माया ॥ २ ॥

சுகமும், சித்தும், அமலமும், போதவடிவமுமான அத்விதீயத்தினை, ஆகாயம் வாயு முதலியவற்றால் நிர்மிக்கப்பட்ட பவசாகரத்தில் மிகுதியாகப் பொருத்துகின்றது. ஆதலால் நிகழாததை நிகழச்செய்தலில் வல்லதுமாயை. (உ)

---

* அவதி=எல்லை. * அம்சம்=கூறு. * அகண்டம்=துண்டிக்கப்படாதது. * ஆகாததை ஆக்குவித்தலில்.

श्रुतिशतनिगमान्तशोधकान्यप्यहह घनादिनिदर्शनेनसद्यः ।
कलुषयति चतुष्पदाद्यभिन्नं अघटितघटनापटीयसी हि माया ॥ ३ ॥

ஆச்சரியம்! நூற்றுக்கணக்கான சுருதி வேதாந்தங்களைச் சோதித்தவர்களையும் தனமுதலியவற்றைக்காட்டுதலால் உடனே நாற்காற் பிராணிகளுக்கு வேறுகாது கலக்குகின்றது. ஆதலால் நிகழாததை நிகழச்செய்வதில் வல்லதுமாயை. (ஙு

अपगतगुणवर्णजातिभेदे सुखचिति विप्रविडाद्यहंकृतिं च ।
स्फुटयति सुतदारगेहमोहं अघटितघटनापटीयसी हि माया ॥ ४ ॥

குண *வர்ண ஜாதிபேதங்களொழிந்த சுகமானசித்தின்கண் பிராஹ்மண வைசியாதி அகங்காரத்தையும் புத்திரன் தாரம் வீடு முதலிய மோகமாகிய எனதெனுந் தன்மையையும் உண்டாக்குகின்றது. ஆதலால் நிகழாததை நிகழச்செய்ய வல்லதுமாயை.

विधिहरिभवभेदमप्यखण्डे बत विरचय्य बुधानपि प्रकामं ।
भ्रमयति हरिभर्गभेदभावान् अघटितघटनापटीयसी हि माया ॥ ५ ॥

ஆச்சரியம்! * அகண்டத்தில் பிரஹ்மா, விஷ்ணு, சிவன் என்னும் பேதத்தையும் உண்டுபண்ணிப் புத்திமான்களையும் விஷ்ணு சிவனென்னும் பேதத்தன்மைகளைக் கொள்ளும்படியாக மயக்குகின்றது. ஆதலால் நிகழாததை நிகழச்செய்வதில் வல்லதுமாயை. (ரு)

॥ इति श्रीमच्छंकराचार्यविरचितमायापंचकं संपूर्णम् ॥

இவ்வாறு ஸ்ரீசங்கரபகவற்பாதர் அருளிய

மாயா பஞ்சகம்

முடிந்தது.

---

* வர்ணம்=பிராஹ்மணத்துவாதி நான்கு. ஜாதி=அதன் இடைப்பட்ட பேதங்கள்.

* பேதமில்லாததில்.

## ॥ यतिपञ्चकम् वा कौपीनपञ्चकम् ॥

## யதிபஞ்சகம் (கௌபீனபஞ்சகம்)

वेदांतवाक्येषु सदा रमंतो भिक्षान्नमात्रेण च तुष्टिमंतः ।
विशोकमंतःकरणे रमंतः कौपीनवंतः खलु भाग्यवंतः ॥ १ ॥

வேதாந்தவாக்கியங்களில் எப்போதும் இரமிப்பவனும், பிக்ஷாந்நமாத்திரத்தால் திருப்தியடைபவனும், சோகநீங்கிய அந்தக்கரணத்தில் இரமிப்பவனுமான கௌபீனமுடையவன் நிச்சயமாக பாக்கியமுடையவன். (க)

मूलं तरोः केवलमाश्रयंतः पाणिद्वयं भोक्तुममंत्रयंतः ।
कन्थामिव श्रीमपि कुत्सयंतः कौपीनवंतः खलुभाग्यवंतः ॥ २ ॥

கேவலம் மரத்தடியை ஆசிரயித்தவனும், கையிரண்டையும் புசித்தற்குபயோகப்படுத்துபவனும், கந்தையினைப்போல லக்ஷ்மியையும் அலக்ஷியஞ்செய்பவனுமான கௌபீனமுடையவன் நிச்சயமாக பாக்கியமுடையவன். (உ)

देहादिभावं परिवर्तयंतः आत्मानमात्मन्यवलोकयंतः ।
नांतं न मध्यं न बहिः स्मरन्तः कौपीनवंतः खलुभाग्यवंतः ॥ ३ ॥

தேகாதித்தன்மையை நீக்கியவனும், தன்னைத் தன்னிடத்திற் காண்பவனும், உள்ளிலும், இடையிலும், வெளியிலும் ஸ்மரியாதவனுமான கௌபீனமுடையவன் நிச்சயமாக பாக்கியமுடையவன். (ங)

स्वानंदभावे परितुष्टिमंतः सुशांतसर्वेंद्रियतुष्टिमंतः ।
अहर्निशं ब्रह्मसुखे रमंतः कौपीनवंतः खलु भाग्यवंतः ॥ ४ ॥

தனதானந்தத்தன்மையில் மிகச் சந்தோஷமடைபவனும் செவ்வையாய்ச் சாந்தியடைந்த சகலேந்திரியங்களாலும் திருப்தியுடையவனும், இரவும் பகலும் பிரஹ்மசுகத்தில் இரமிப்பவனுமான கௌபீனமுடையவன் நிச்சயமாகபாக்கியமுடையவன்.

---

* கௌபீனம்—கோவணம்.

पंचाक्षरं पावनमुच्चरंतः पतिं पशूनां हृदिभावयंतः ।
भिक्षाशिनो दिक्षु परिभ्रमंतः कौपीनवंतः खलु भाग्यवंतः ॥ ५ ॥

பாவனமாகிய பஞ்சாக்ஷரத்தை யுச்சரிப்பவனும், பசுக்களின் பதியை (ஈசுவரனை) இதயத்தில் பாவிப்பவனும், பிக்ஷாந்நத்திற்கு நாற்றிசையும் சுற்றுபவனுமான கௌபீனமுடையவன் நிச்சயமாக பாக்கியமுடையவன். (௫)

॥ इति श्रीमच्छंकराचार्यविरचित यतिपंचकं वा कौपीनपंचकं संपूर्णम् ॥

இவ்வாறு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அருளிய
யதிபஞ்சகம் (கௌபீனபஞ்சகம்)
முடிந்தது.

---

## ॥ साधनपञ्चकम् वा सोपानपंचकम् ॥

## * சாதனபஞ்சகம் (சோபானபஞ்சகம்)

वेदो नित्यमधीयतां तदुदितं कर्म स्वनुष्ठीयतां ।
तेनेशस्य विधीयतामपचितिः काम्ये परिस्त्यज्यताम् ।
पापौघः परिधूयतां भवसुखे दोषोऽनुसंधीयता ।
मात्मेच्छा व्यवसीयतां निजगृहात्तूर्णं विनिर्गम्यताम् ॥ १ ॥

நித்தியம் வேதத்தினை அத்தியயனஞ்செய்ய (ஓத) வேண்டும். அதிற்சொல்லப்பட்ட (நித்தியநைமித்திக) கர்மத்தினைச் செவ்வையாய் அநுஷ்டிக்கவேண்டும். அதனால் (செவ்வையாயநுஷ்டிக்கப்படும் கர்மத்தினால்) ஈசனுக்கு விதிப்படி பூசைசெய்யவேண்டும். காமிய (கர்ம)த்தில் புத்தியைச் செய்யலாகாது; (அது பிறப்பைத்தருமாகலின்.) கர்மங்களை (ஈசுவரார்ப்பணபுத்

---

* இது புருஷார்த்தத்திற்கு வேண்டிய சாதனங்களைக்கூறும் ஐந்து சுலோகவடிவாயிருத்தலின் சாதனபஞ்சகமென்றும், புருஷார்த்த சாதனங்களை சோபானமாக (படியொழுங்காக) க்கூறும் ஐந்து சுலோகவடிவாயிருத்தலின் சோபானபஞ்சகமென்றும் கூறப்படுகின்றது.

தியாக)ச்செய்து பாபக்கூட்டங்களைக் கழுவவேண்டும். சம்ஸார (இகலோக பரலோக) சுகத்தில் (அது அநித்தியமாதல் துன்பந் தருவசாதல் முதலிய) தோஷத்தைச் சிந்திக்கவேண்டும். (அதனால் அவற்றில் இச்சையைவிட்டு) ஆத்மாவை (நித்தியசுகத்தினை) யடையும் இச்சையினைத் திடமாக்கவேண்டும். (அவ்விச்சை மேலிட்டபோது) தன் வீட்டினின்றும் விரைவில் வெளிப்பட (துறவடைய) வேண்டும். (க)

संगः सत्सु विधयितां भगवतो भक्तिर्दृढा धीयतां ।
शांत्यादिः परिचीयतां दृढतरं कर्माशु संत्यज्यताम् ॥
सद्विद्वानुपसर्पतां प्रतिदिनं तत्पादुके सेव्यतां ।
ब्रह्मैकाक्षर मर्थ्यतां श्रुतिशिरोवाक्यं समाकर्ण्यताम् ॥ २ ॥

(துறவினால் பந்தஹேதுவான துச்சங்கம் (தீயகூட்டரவு) விடுபடவே மோக்ஷமார்க்கத்தை யறிவிக்கும்) சாதுக்களிடத்துச் சங்கம் (உடன் வசித்தலைச்)செய்யவேண்டும். (அச்சங்கம் இடைவிடாது சேர்வதற்கும் அவர்காட்டும் வழியிற் றன்கரணங்கள் ஒத்து நடப்பதற்கும் ஈசுவரப்பிரசாதமின்றி முடியாதாகலின் அதனைச் சம்பாதித்தற்பொருட்டு) பகவானது பக்தியினைத் திடமாய்க் கொள்ளவேண்டும். ஈசுவரப் பிரசாதமுண்டாயினும் (சாந்தியாதிகுணமின்றியவிடத்து விசாரஞ்செய்தும் ஞானமுதியாதாகலின்) சாந்தியாதி குணங்களையும் மிகத்திடமாய்ப் பழகவேண்டும். (விசாரத்திற்குத் தடையாகும் எவ்வகைக்) கருமத்தினையும் விரைவில் விடவேண்டும். (அறியஞானம் தானைப் பெறத்தக்கதன்றாகலின் அதனையுபதேசிக்கும்) நல்ல (சுரோத்திரியனும் பிரஹ்மநிஷ்டனுமான) வித்துவானை அநுஸரிக்க (விதிப்படி சரணாகதியடைய) வேண்டும். (அவனுக்கு இவனிடத்துத் தயையுண்டாகும் வண்ணம்) நாள்தோறும் அவன் பாதுகையினை (பாதமலர்களை)ச்சேவிக்கவேண்டும் (அவன் கட்டளையின்படி நடக்கவேண்டும்) பிரஹ்மமாகிய ஏகாக்ஷரத்தைத் (தனது முத்தாபமுமொழியுமாறு) அக்குருவனிடத்து யாசிக்கவேண்டும். சுருதிமுடியின் (அவர் உபதேசிக்கும்) மகாவாக்கியத்தைச் செவ்வையாய்க் கேட்கவேண்டும். (உ)

वाक्यार्थश्च विचार्यतां श्रुतिशिरःपक्षः समाश्रीयतां ।
दुस्तर्कात्सुविरम्यतां श्रुतिमतस्तर्कोऽनुसंधीयताम् ॥
ब्रह्मैवास्मि विभाव्यतामहरहर्गर्वः परित्यज्यतां ।
देहेहंमतिरुज्झतां बुधजनैर्वादः परित्यज्यताम् ॥ ३ ॥

(சிரவணமாத்திரத்தால் ஞானமுதயமாகாமல் * அசம்பாவனை யாகிய சம்சய முளதாயின் அது நீங்குதற் பொருட்டு மறுபடியும்) வாக்கியார்த்தங்களை விசாரிக்க (மனனஞ்செய்ய) வேண்டும். (ஜீவப்பிரஹ்மைக்கியமான) உபநிஷதபக்ஷத்தினைச் செவ்வையாய் ஆசிரயிக்கவேண்டும். (சுருதிவிரோத * பேதக சாதக யுக்திகளாகிய) கெட்டதர்க்கத்தினின்றும் விலகவேண்டும். வேதசம்மதமான (* அபேதசாதகயுக்திகளாகிய) தர்க்கத்தினைக் கொள்ளவேண்டும். (மனனத்தால் அசம்பாவனை நீங்கினும் நெடுங்காலம் பழகிவந்ததான தேகம் யானென்னும் விபரீதபாவனை நீங்காவிடின், அது நீங்குமாறு) நாள்தோறும் பிரஹ்மமேயானென்று விசேஷமாய்ப் பாவிக்கவேண்டும். கர்வ (யான் ஞானியென்றல் முதலிய அபிமான)த்தினை ஒழிக்கவேண்டும். (சிவம் யானென்னும் திடம்வருமாறு) தேகத்தில் யானென்னும் புத்தியை விடவேண்டும். (யான் மிகத்தெரிந்தவனென்னும் வித்தியாமதம்வந்து ஞானம்வராது தடுக்குமாதலின்) அறிஞர்களோடு வாதஞ்செய்தலை விடவேண்டும். (௩)

क्षुद्व्याधिश्च चिकित्स्यतां प्रतिदिनं भिक्षौषधं भुज्यतां
स्वाद्वन्नं न तु याच्यतां विधिवशात्प्राप्तेन संतुष्यताम् ।
शीतोष्णादि विषह्यतां न तु वृथा वाक्यं समुच्चार्यता
मौदासीन्यमभीप्स्यतां जनकृपानैष्ठुर्यमुत्सृज्यताम् ॥ ४ ॥

(தேகதாரணையினால் ஞானப்பியாசஞ் செய்யவேண்டியிருப்

---

* அசம்பாவனையின் இலக்ஷணத்தையும் வேறுபாடுகளையும் ஸ்ரீ பாலபோதம் ௬௨-வது உபதேச அ௬-வது பிரசங்கத்திற் காண்க.

* பேதக சாதக யுக்தி பேதவாதிகளின் நூல்களில் விரிவாயுளது. அது இங்குப்பயன்படாமை காண்க.

* அபேதசாதகயுக்தி ஸ்ரீ விசாரசாகரம் முதற்றரங்கம் ௧அ-வது பிரசங்க டிப்பணியிற் காண்க.

பதால் தேகதாரணத்தின்பொருட்டுப்) பசிவியாதியினைச் சிகிச்சைசெய்யவேண்டும். (அப்பசிவியாதி நீங்குதற்குத்) தினந்தோறும் பிக்ஷையாகிய ஔஷதத்தைப் புசிக்கவேண்டும். (பிக்ஷையெடுப்பதிலும்) உருசியுள்ள அந்நத்தினை யாசிக்கலாகாது (அதன்பொருட்டு எவ்வகை முயற்சியும் செய்யலாகாது). (முயற்சியின்றி) விதிவசத்தால் (நல்லது கெட்டது எதுவாயினும்) கிடைத்ததைக்கொண்டு சந்தோஷிக்கவேண்டும். (பிராரப்தவசத்தால் நீக்குதற்கரியனவாய் ஓயாது வரும்) சீதோஷ்ண முதலியவற்றைச் சகிக்கவேண்டும். (தனக்கும் பிறருக்கும் பயன்படாது வீண்போக்கிற் கேதுவாகலின்) பயனில்லாத வார்த்தைகளை யுச்சரிக்கலாகாது. உதாசீனமா (இஷ்டா நிஷ்டங்களில் விருப்பு வெருப்பின்றி) யிருத்தலை விரும்பவேண்டும். ஜனங்களிடத் துண்டாகும் கிருபையையும் நிஷ்டூரத் தன்மையினையும் விடவேண்டும். (அவை இராகத் துவேஷங்களை விருத்திசெய்வனவாகலின்.) (௪)

एकांते सुखमास्यतां परतरे चेतः समाधीयतां
पूर्णात्मा सुसमीक्ष्यतां जगदिदं तद्बाधितं दृश्यताम् ।
प्राक्कर्म प्रविलाप्यतां चितिबलान्नाप्युत्तरैः श्लिष्यतां
प्रारब्धं त्विह भुज्यतामथ परब्रह्मात्मना स्थीयताम् ॥ ५ ॥

(எவ்வார்த்தையும் நிகழாதிருக்கும் வண்ணம்) ஏகாந்தத்தில் (தன்னைவிட வேறொருவருமின்றிய தனியிடத்தில்) சுகமாக இருக்கவேண்டும். மிகமேன்மையான பிரஹ்மத்தின்கண் சித்தத்தை நிறுத்தவேண்டும். பூர்ணமான ஆத்மாவினைச் செவ்வையாய்க் காணவேண்டும். (ஆத்மதரிசனத்தின்கண் காணப்படும்) இந்த ஜகத்தினை அந்த ஞானத்தாற் பாதிக்க (பொய்யெனநிச்சயிக்க)ப்பட்டதாகக் காணவேண்டும். ஞானபலத்தால் முற்கருமமாகிய சஞ்சிதத்தினை ஒழிக்கவேண்டும். * ஞானபலத்

---

மூலசுலோகத்திலுள்ள चितिबलात् ஞானபலத்தால் என்னும் பதம் நடுநிலைத்தீபகமாம். அது பிராரப்தம் ஆகாமியம் என்னும் இரண்டன் நாசத்திற்கும் ஏதுவாம்.

* ஞானம் வந்தபோது கர்த்திருத்துவமின்மையால் பின் செய்யப்படும் கர்மங்கள் அவனைப் பற்றுகிறதில்லை.

தால் பிற்கருமங்களாகிய ஆகாமியங்களோடுங் கூடலாகாது. (கூடாதுபோகவே) அவை இவன்பால் நலந்தீங்குசெய்பவரை நாடும் பிராரப்தத்தினை இங்குப் புசிக்கவேண்டும். (பிராரப்தம் போகத்தால் நீங்கிய) பின்னர் பிரஹ்மவடிவமாக நிலைக்க வேண்டும். (௫)

यः श्लोकपंचकमिदं पठते मनुष्यः संचिंतयत्यनुदिनं स्थिरतामुपेत्य ।
तस्याशु संसृतिदवानलतीव्रघोरतापः प्रशांतिमुपयाति चितिप्रसादात् ॥

எந்த மனிதன் இச்சுலோகமைந்தனையும் ஸ்திரத்தன்மையினை யடைந்து தினந்தோறும் படிக்கின்றானோ, அவனுடைய சம்ஸாரமென்னும் காட்டுத்தீயின் தீவிரகோரமான தாபம் சித்தின் பிரசாதத்தால் விரைவிற் கெடும். (௬)

॥ इति श्रीमच्छंकराचार्यविरचितं साधनपंचकं संपूर्णम् ॥

இவ்வாறு ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசாரியஸ்வாமிகள் அருளிய

சாதனபஞ்சகம்

முடிந்தது.

---

## ॥ आत्मपंचकम् ॥

## * ஆத்மபஞ்சகம்.

नाहं देहो नेंद्रियाण्यंतरंगं नाहंकारः प्राणवर्गो न बुद्धिः ।
दारापत्यक्षेत्रवित्तादिदूरः साक्षी नित्यः प्रत्यगात्मा शिवोऽहम् ॥ १ ॥

யான் ஸ்தூலதேகமல்லன்; அந்தரங்கமான இந்திரியங்களல்லன்; பிராணவர்க்கமல்லன்; அகங்காரமல்லன்; புத்தியல்லன்; தாரம் புத்திரர் க்ஷேத்திரம் திரவிய முதலியவற்றினின்றும் விலகியவனும், சாக்ஷியும், நித்தியமும், பிரத்தியகா (அந்தரா)த்மாவுமான சிவம் யான். (௧)

रज्ज्वज्ञानाद्भाति रज्जुर्यथाहिः स्वात्माज्ञानादात्मनो जीवभावः ।
आप्तोक्त्या हि भ्रांतिनाशे स रज्जुर्जीवो नाहं देशिकोक्त्या शिवोऽहम् ॥

---

* சுலோகம் ஆறு இருக்கினும் பஞ்சகமென்றே வழங்கப்பட்டு வருகின்றது.

பழுதையையறியாததினால் பழுதை பாம்பாகக் காணப்படுகின்றதுபோலத் தனதாத்மாவை யறியாததினால் ஆத்மாவுக்கு ஜீவபாவம் தோன்றுகின்றது. * ஆப்தன் வாக்கியத்தால் பிராந்தி (மயக்கம்) ஒழிந்தபோது எப்படி அது பழுதையோ, அது போலத் * தேசிகனுபதேசத்தால் யான் ஜீவனல்லன்; சிவம் யான். (உ)

आभातीदं विश्वमात्मन्यसत्यं सत्यज्ञानानंदरूपे विमोहात् ।
निद्रामोहात्स्वप्नवत्तन्न सत्यं शुद्धः पूर्णो नित्य एकः शिवोहम् ॥ ३ ॥

* சத்திய ஞானானந்தவடிவ ஆத்மாவில் விசேஷமோகத்தினால் அசத்திய வடிவமான இவ்வுலகம் தோற்றுகின்றது; நித்திரை மயக்கத்கால் சொப்பனம் கோற்றுவதுபோல. அது சத்தியமன்று. சுத்தமும், பூர்ணமும், நித்தியமும், ஏகமுமான சிவம் யான். (௩)

मत्तो नान्यत्किंचिदत्रास्ति विश्वं सत्यं बाह्यं वस्तु मायोपक्लृप्तम् ।
आदर्शांतर्भासमानस्य तुल्यं मय्यद्वैते भातितस्माच्छिवोऽहम् ॥ ४ ॥

இங்கு (ஆத்மாவாகிய) என்னைவிட வேறுசத்தியமான உலகம் சிறிதுமில்லை. வெளிவஸ்துக்கள் மாயையினாற் கற்பிக்கப்பட்டனவாம். கண்ணாடியினுள் தோற்றுதலையொத்து அத்வைதமான என்னிடத்துத் தோற்றுகின்றது. ஆதலாற் சிவம் யான். (௪)

नाहं जातो न प्रवृद्धो न नष्टो देहस्योक्ताः प्राकृताः सर्वधर्माः ।
कर्तृत्वादिश्चिन्मयस्यास्ति नाहंकारस्यैव ह्यात्मनो मे शिवोऽहम् ॥५॥

யான் பிறந்தவனல்லன்; வளர்ந்தவ னல்லன்; நசித்தவனல்லன்; பிராகிருதமான சகல தர்மங்களும் தேகத்திற்குச் சொல்லப் படுகின்றன. * கர்த்திருத்துவாதிகள் சின்மய ஆத்மா

---

* ஆப்தன் = உண்மையுரைப்பவன். * தேசிகன் = ஆசான். * உண்மையறிவின்பவடிவ.
* செய்பவனெனுந்தன்மை முதலியன.

வாகிய எனக்கில்லை. அகங்காரத்திற்கேயாம். (ஆதலால்) சிவம் யான். (௫)

नाहं जातो जन्ममृत्यू कुतो मे नाहं प्राणः क्षुत्पिपासे कुतोमे ।
नाहं चित्तं शोकमोहौ कुतो मे नाहं कर्ता बंधमोक्षौ कुतो मे ॥६॥

யான் பிறந்தவனல்லன்; எனக்கு பிறப் பிறப்பு எங்கிருந்துண்டாம்? யான் பிராணனல்லன், எனக்குப்பசிதாகம் எங்கிருந்துண்டாம்? யான் சித்தமல்லன்; சோகமோகங்கள் எனக்கு எங்கிருந்துண்டாம். யான் கர்த்தாவல்லன்; எனக்குப்பந்த மோக்ஷங்கள் எங்கிருந்துண்டாகும்? (௬)

॥ इति श्रीमच्छंकराचार्यविरचितमात्मपंचकं संपूर्णम् ॥

இவ்வாறு ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசாரியஸ்வாமிகள் அருளிய

ஆத்மபஞ்சகம்

முடிந்தது.

---

## ॥ मनीषापञ्चकम् ॥

## மனீஷா பஞ்சகம்.

सत्याचार्यस्य गमने कदाचिन्मुक्तिदायकम् ।
काशीक्षेत्रं प्रति सह गौर्या मार्गे तु शंकरम् ॥ १ ॥
अंत्यवेषधरं दृष्ट्वा गच्छ गच्छेति चाब्रवीत् ।
शंकरः सोपि चांडालस्तं पुनः प्राह शंकरम् ॥ २ ॥
अन्नमयादन्नमयमथवा चैतन्यमेव चैतन्यात् ।
द्विजवरदूरीकर्तुं वांछसि किं ब्रूहि गच्छ गच्छेति ॥ ३ ॥

ஒருசமயம் முக்திதரும் காசிக்ஷேத்திரத்தை நோக்கிஆசாரியர் போய்க்கொண்டிருக்குங்கால் வழியில் சண்டாளவேஷந்தரித்துள்ள சங்கரனைக் கௌரியோடுகண்டு (போ போ விலகு விலகு) என்று சொன்னார். (அப்போது சங்கரன்) "பிராஹமணனைத்

தமா! போ போ வென்று விலக விரும்புவது * அந்நமயத்தினின்றும் அந்நமயத்தினையா? அல்லது சைதன்னியத்தினின்றும் சைதன்னியத்தினையா? எதனைச் சொல்லு. (௧. ௨. ௩.)

किं गंगांबुनि बिंबितेंबरमणौ चंडालवाटीपयः
पूरेचांतरमस्ति कांचनघटीमृत्कुंभयोर्वांबरे ।
प्रत्यग्वस्तुनि निस्तरंगसहजानंदावबोधांबुधौ
विप्रोयं श्वपचोयमित्यपि महान् कोयं विभेदभ्रमः ॥ ४ ॥

கங்கா ஜலத்திலும் சண்டாளவீதியில் நிறைந்துள்ள ஜலத்திலும் பிரதிபிம்பித்த சூரியனிடத்தும், பொற்குட மட்குடங்களிலுள்ள ஆகாயத்தினிடத்தும் பேதமுண்டா? பிரத்தியக்கு வஸ்துவாகிய நிஸ்தரங்க ஸஹஜாநந்த ஞானசமுத்திரத்தில் பிராஹ்மணன் இவன், சண்டாளன் இவன் என்னும் பெரிய இப் பேதப்பிரமம் யாது? (என்றார்.) (௪)

जाग्रत्स्वप्नसुषुप्तिषु स्फुटतरा या संविदुज्जृंभते
या ब्रह्मादिपिपीलिकांततनुषु प्रोता जगत्साक्षिणी ।
सैवाहं न च दृश्यवस्त्विति दृढप्रज्ञापि यस्यास्ति चे
च्चांडालोस्तु स तु द्विजोस्तु गुरुरित्येषा मनीषा मम ॥ ५ ॥

(சங்கரர் வாக்கியம்) ஜாக்கிர சொப்பன சுழுத்திகளில் மிக வெளிப்படையாக எந்தச் சம்வித்து (ஞானம்) விரிகின்றதோ, எது பிரஹ்மா முதல் எறும்புக் கடையான சரீரங்களில் பிரவேசித்ததான ஜகத்சாக்ஷியோ, அதுவே யான், திருசியவஸ்து வல்லன் என்னும் திடப்பிரஞ்ஞை ஒருவனுக்கிருக்குமாயின் அவன் சண்டாளனுகுக, பிராஹ்மணனுகுக, (அவன் எனக்கு) குருவாவன் என்பது எனது நிச்சயம். (௫)

---

* அந்ந விகாரமான ஸ்தூல சரீரத்தினின்றும்,

* சம்வித்துச்=சேதனம்.

ब्रह्मैवाहमिदं जगच्च सकलं चिन्मात्रविस्तारितं
सर्वं चैतदविद्यया त्रिगुणया शेषं मया कल्पितम् ।
इत्थं यस्य दृढा मतिः सुखतरे नित्ये परे निर्मले
चांडालोस्तु स तु द्विजोस्तु गुरुरित्येषा मनीषा मम ॥ ६ ॥

பிரஹ்மமே யான் இச்சகத்து யாவும் சின்மாத்திரத்தினல் விஸ்தரிக்கப் பட்டதாம். இவ்வெல்லாம் முக்குணமான அவித்தையினைக்கொண்டு என்னால் முற்றும் கற்பிக்கப் பட்டதாம். இவ்வாறு எவனுக்கு மதியானது *சுகதரமும் நித்தியமும் பரமுமான நிர்மலத்தில் (ஆத்மாவில்) இருக்கின்றதோ, அவன் சண்டாளனாகுக, பிராஹ்மணனாகுக, குருவாவன் என்பது எனது நிச்சயம். (சு)

शश्वन्नश्वरमेव विश्वमखिलं निश्चित्य वाचा गुरो
नित्यं ब्रह्म निरंतरं विमृशता निर्व्याजशांतात्मना ।
भूतं भावि च दुष्कृतं प्रदहता संविन्मये पावके
प्रारब्धाय समर्पितं स्ववपुरित्येषा मनिषा मम ॥ ७ ॥

ஓயாதழிவுடையதேயாம் உலகமுழுவதுமென்று குரவன் வாக்கியத்தால் நிச்சயித்து, (எவனுக்கு) யாதொரு களங்கமுமின்றிய சாந்தாந்தக்கரணத்தால் நித்தியமான பிரஹ்மத்தை ஆராயுந்தன்மையிருக்கின்றதோ, சென்றதும வருவதுமான பாபம் சம்வித்து(ஞான)மயமான நெருப்பில் தகிக்கப் பட்டதன்மையிருக்கின்றதோ, தன் சரீரம் பிராரப்தத்தின் பொருட்டு கொடுக்கப்பட்டிருக்கின்றதோ, (அவன் குருவாவன்) என்னுமிது எனது நிச்சயம். (எ)

या तिर्यङ्नरदेवताभिरहमित्येतः स्फुटागृह्यते
यद्भासा हृदयाक्षदेहविषया भांति स्वतोऽचेतनाः ।
तां भास्यैः पिहितार्कमंडलनिभां स्फूर्तिं सदा भावय
न्योगी निर्वृतमानसो हि गुरुरित्येषा मनीषा मम ॥ ८ ॥

---

* மிக்க இன்பமும்.

எந்த திரியக்கு (பசுபக்ஷியாதி) நரன் தேவதை இவர்களால் யானென்று உள்ளே தெளிவாய்க் கிரகிக்கப் படுகின்றதோ, எதன் விளக்கத்தால் இதய விந்திரிய தேகவிஷயங்களான அசேதனங்கள் இயல்பாக விளங்குகின்றனவோ, அந்த பாஸியங் (விளக்கப் படுபவை) களால் மறைக்கப்பட்ட சூரியமண்டலத்திற்குச் சமானமான ஸ்பூர்த்தியினை (விளக்கத்தினை) எப்போதும் பாவித்து யோகி களித்தமனத்தினனாய்க் குருவாகின்றானென்னு மிது எனது நிச்சயம். (அ)

यत्सौख्यांबुधिलेशलेशत इमे शक्रादयो निर्वृता
यश्चित्ते नितरां प्रशांतकलने लब्ध्वा मुनिर्निर्वृतः ।
यस्मिन्नित्यसुखांबुधौ गलितधीर्ब्रह्मैव न ब्रह्मविद्
यः कश्चित्स सुरेंद्रवंदितपदो नूनं मनीषा मम ॥ ९ ॥

எந்தச் சுக சமுத்திரத்தின் இலேசலேசத்தினால் இவ்விந்திரன் முதலியோர் சுகமுடையவராகின்றனரோ, (அதனை) எந்த முனிவர் எப்போதும் கலக்க முற்றுமொழிந்த சித்தத்தில் அடைந்து சுகமுடையவராவரோ, எவர் எந்த நித்திய சுகக்கடலில் கரைந்த புத்தியினராய்ப் பிரஹ்மவித்து (பிரஹ்மத்தை யறிந்தவர்) ஆகாது பிரஹ்மமேயாகின்றனரோ, அவர் நிச்சயமாக தேவேந்திரனால் வணங்கப்படும் பதங்களையுடையவர் என்பது எனது விவேகம். (௯)

॥ इति श्रीमच्छंकराचार्यविरचित मनीषापंचकं संपूर्णम् ॥

இவ்வாறு ஸ்ரீ சங்கரபகவத்பாதரருளிய
மநீஷா பஞ்சகம்
முடிந்தது.

---

## ॥ निर्वाणषट्कम् ॥

## நிர்வாண ஷட்கம்.

मनोबुद्ध्यहंकारचित्तानि नाहं न च श्रोत्रजिह्वे न च घ्राणनेत्रे ।
न च व्योम भूमिर्न तेजो न वायुश्चिदानंदरूपः शिवोऽहं शिवोहं ॥ १ ॥

யான் மனோபுத்தி யகங்கார சித்தங்களல்லன். சுரோத்திரமும் சிங்குவையுமல்லன். கிராணமும் நேத்திரமுமல்லன். ஆகாயமும் பூமியுமல்லன். தேயுவுமல்லன். வாயுவல்லன். சிதாநந்த (ஞானசுக)வடிவ சிவம் யான்; சிவம் யான். (க)

न च प्राणसंज्ञो न वै पंचवायुर्न वा सप्तधातुर्न वा पंचकोशः ।
न वाक्पाणिपादं न चोपस्थपायुश्चिदानंदरूपः शिवोऽहं शिवोहं ॥२॥

பிராணப்பெயருடையனல்லன். பஞ்சவாயுவுமல்லன்.* சப்ததாதுவல்லன். பஞ்சகோசமல்லன். வாக்குப்பாணிபாதமல்லன். உபஸ்தபாயுவ (மூத்திரத்துவார மலத்துவாரங்களா) ல்லன். சிதாநந்தவடிவ சிவம் யான்; சிவம் யான். (உ)

न मे द्वेषरागौ न मे लोभ मोहौ मदो नैव मे नैव मात्सर्यभावः ।
न धर्मो न चार्थो न कामो न मोक्षश्चिदानंदरूपः शिवोऽहं शिवोहं ॥३॥

எனக்குத்துவேஷ ராகங்களில்லை; எனக்கு லோபமோகங்களில்லை; மதமில்லை; எனக்கு மாற்சரியத்தன்மையி ல்லவேயில்லை; தர்மமில்லை; அர்த்தமில்லை; காமமில்லை; மோக்ஷமில்லை. சிதாநந்தவடிவ சிவம் யான்; சிவம் யான். (ங)

न पुण्यं न पापं न सौख्यं न दुःखं न मंत्रो न तीर्थं न वेदा न यज्ञाः ।
अहं भोजनं नैव भोज्यं न भोक्ता चिदानंदरूपः शिवोऽहं शिवोहं ॥४॥

புண்ணியமில்லை; பாபமில்லை; சௌக்கியமில்லை; துக்கமில்லை; மந்திரமில்லை; தீர்த்தமில்லை; வேதங்களில்லை; யஞ்ஞங்களில்லை. யான் *போஜனமல்லன்; *போஜ்யமல்லன்; *போக்தாவல்லன்; சிதாநந்தவடிவ சிவம் யான்; சிவம் யான். (ச)

---

* புசிக்கப்பட்ட அன்னம் சூக்ஷ்மம் மத்யமம் தூலம் என மூன்று பாகமாகின்றது அதில் மத்தியபாகம் க இரசம், உ இரத்தம், ங மாமிசம், ச மேதை (கொழுப்பு,) ரு மஜ்ஜை (எலும்பிலுள்ள மூளை), சு எலும்பு, எ வீரியம்.

* போஜனம் = புசிப்பு. * போஜ்யம் = புசிக்கப்படுவது * போக்தா = புசிப்பவன்

न मृत्युर्न शंका न मे जातिभेदः पिता नैव मे नैव माता च जन्म ।
न बंधुर्न मित्रं गुरुर्नैव शिष्यश्चिदानंदरूपः शिवोऽहं शिवोहं ॥ ५ ॥

எனக்கு மரணமில்லை; சங்கை (நாணம்) இல்லை; ஜாதிபேதமில்லை; எனக்குப் பிதாவில்லை; மாதாவில்லை; பிறப்பில்லை; பந்துவில்லை; மித்திரனில்லை; குருவில்லை; சிஷ்யனில்லை; சிதாநந்தவடிவ சிவம் யான்; சிவம் யான். (௫)

अहं निर्विकल्पो निराकाररूपो विभुर्व्याप्य सर्वत्र सर्वेंद्रियाणि ।
सदासमत्वं नैव मुक्तिर्न बंधश्चिदानंदरूपः शिवोऽहं शिवोहं ॥ ६ ॥

யான் நிர்விகற்பன்; நிராகாரரூபன்; எங்கும் எல்லா இந்திரியங்களையும் வியாபித்து விபுவாயிருக்கின்றேன். எப்போதும் சமத்துவமுண்டு. முக்தியில்லை; பந்தமில்லை. சிதாநந்தவடிவ சிவம் யான்; சிவம் யான். (௬)

इति श्रीमच्छंकराचार्यविरचितं निर्वाणषट्कम् संपूर्णम् ।

இவ்வாறு ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள் அருளிய

நிர்வாண ஷட்கம்.

முடிந்தது.

---

## ॥ परापूजास्तोत्रम् ॥

## பராபூஜை.

पूर्णस्यावाहनं कुत्र सर्वाधारस्य चासनम् ।
स्वच्छस्य पाद्यमर्घ्यं च शुद्धस्याचमनं कुतः ॥ १ ॥

* பூர்ணனுக்கு * ஆவாஹனமேது? இல்லையென்றபடி

---

* பூர்ணன் = எங்கும் நிறைந்தவன்.

* ஆவாஹனம் = கொண்டுவருதல்.

* சர்வாதாரனுக்கு * ஆஸனமேது? ஸ்வச்சனுக்கு * பாத்தியமேது? * அர்க்கியமேது? * சுத்தனுக்கு * ஆசமனமேது. (க)

निर्मलस्य कुतः स्नानं वस्त्रं विश्वोदरस्य च ।
निरालंबस्योपवीतं पुष्पं निर्वासनस्य च ॥ २ ॥

* நிர்மலனுக்கு * ஸ்நானமேது? * விசுவோதரனுக்கு (உலகைத்தன்னுள் வைத்தவனுக்கு) * வஸ்திரமேது? * நிராலம்பனுக்கு உபவீதம் (பூணூல்) ஏது? வாசனையின்றியவனுக்குப் புஷ்பமேது? (உ)

निर्लेपस्य कुतो गंधो रम्यस्याभरणं कुतः ।
नित्यतृप्तस्य नैवेद्यस्तांबूलं च कुतो विभोः ॥ ३ ॥

பூச்சு (பற்று) இன்றியவனுக்கு * கந்தமேது? இரம்மிய (எல்லோராலும் விரும்பப்படுபவ)னுக்கு * ஆபரணமேது? * நித்தியத்திருப்தனுக்கு * நைவேத்தியமேது. * விபுவுக்குத் தாம்பூலமேது? (ஙா)

---

* சர்வாதாரன = எல்லாவற்றிற்கும் ஆதாரமாயுள்ளவன்.
* ஆஸனம் = இருப்பிடம்.
* பாத்தியம் = பாதங்கழுவுநீர்.
* அர்க்கியம் = கைகழுவுநீர்.
* சுத்தன் = இயல்பாகவே அவித்யாதிமலமின்றியவன்
* ஆசமனம் = சுத்தியின்பொருட்டுக் குடிக்கும் நீர்.
* நிர்மலன் = அழுக்கின்றியவன்.
* ஸ்நானம் = நீராடல்.
* விசுவோதரன் = உலகத்தை வயிற்றிலுடையவன் அதாவது தனதேகதேசத்தடக்கியுள்ளவன்.
* வஸ்திரம் = உடை
* நிராலம்பன் = பற்றுக்கோடின்றியவன்.
* கந்தம் = பூசிக்கொள்ளப்படும் சந்தனாதி.
* ஆபரணம் = அலங்காரம்.
* நித்தியத்திருப்தன் = ஒருவிருப்பமுமில்லாமையால் என்றும் சந்தோ[illegible]வன்
* நைவேத்தியம = உணவுக்காகக்கொடுக்கப்படுவது.
* விபு = வியாபகம்

प्रदक्षिणा ह्यनंतस्य ह्यद्वयस्य कुतो नतिः ।
वेदवाक्यैरवेद्यस्य कुतः स्तोत्रं विधीयते ॥ ४ ॥

அநந்த(எல்லையற்றவ)னுக்குப் *பிரதக்ஷிணமேது? * அத்வயனுக்கு நமஸ்கார(வணக்க)மேது? வேதவாக்கியங்களால் அறியப்படாதவனுக்கு ஸ்தோத்திரம் எவ்வாறு விதிக்கப்படும்? (௪)

स्वयं प्रकाशमानस्य कुतो नीराजनं विभोः ।
अंतर्बहिश्च पूर्णस्य कथमुद्वासनं भवेत् ॥ ५ ॥

சுவயமா(தானே)ப் பிரகாசிக்கின்ற விபுவுக்கு நீராஜனம் (தீபாராதனை) ஏது? உள்ளும் வெளியும் நிறைந்தவனுக்கு உத்வாஸனம் (*விசர்ஜனம்) ஏது? (௫)

एवमेव परापूजा सर्वावस्थासु सर्वदा ।
एकबुद्ध्या तु देवेशे विधेया ब्रह्मवित्तमैः ॥ ६ ॥

இத்தன்மையாகவே பராபூஜை தேவேசனிடத்துப் பிரஹ்மவித்துச்சிரேஷ்டர்களால் எப்போதும் எல்லா அவஸ்தைகளிலும் ஒருமைப்புத்தியோடு விதிக்கத்தக்கதாம். (இதனால் பிரஹ்மவித்தல்லாதவர்கட்கு இப்பூஜை ஏற்றதன்றென்பது சித்தித்தது.) (௬

॥ इति परापूजा समाप्ता ॥

இவ்வாறு ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசாரியஸ்வாமிகள் அருளிச்செய்த

பராபூஜை.

முடிந்தது.

---

* பிரதக்ஷிணம் = வலம்வருதல்.

* இரண்டாவதில்லாதவன்.

* விஸர்ஜனம் = அவ்விடத்தினின்று வேறிடத்துக்கொண்டுபோதல்.

## ॥ गुर्वष्टकम् ॥

### * குர்வஷ்டகம்.

शरीरं सुरूपं ततो वा कलत्रं यशश्चारु चित्रं धनं मेरुतुल्यम् ।
मनश्चेन्न लग्नं हरेरंघ्रिपद्मे ततः किं ततः किं ततः किं ततः किम् ॥१॥

நல்லவழகிய சரீரமும், அதுபோல களத்திரமும் (மனைவியும்), அழகிய கீர்த்தியும் (புகழும்), மேருவுக்குச் சமமாகிய பலவகைத்தனமு மிருந்து, மனதானது ஹரியின் (குருவின்) பாதகமலங்களில் பற்றவில்லையாயின், அதன்பின் என்ன? பயன் அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? (க)

कलत्रं धनं पुत्रपौत्रादिसर्वं गृहं बांधवाः सर्वमेतद्धि जातम् ।
गुरोरंघ्रिपद्मे मनश्चेन्न लग्नं ततः किं ततः किं ततः किं ततः किम् ॥२॥

களத்திரம் தனம் புத்திரபௌத்திராதியாவும், வீடு பந்துக்கள் இவ்வெல்லாமுண்டாயிருந்தும் குருவின் பாதகமலங்களில் மனம் பற்றவில்லையாயின், அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? (உ)

षडंगादिवेदो मुखे शास्त्रविद्या कवित्वादि गद्यं सुपद्यं करोति ।
गुरोरंघ्रिपद्मे मनश्चेन्न लग्नं ततः किं ततः किं ततः किं ततः किम् ॥३॥

முகத்தில் ஆறங்கமுதலியவற்றோடு கூடிய வேதங்களும், சாஸ்திரவித்தையும், கவித்துவமுதலியனவு மிருக்கின்றன. கத்தியம் (வசனம்) பத்தியம்(செய்யுள்) செய்கின்றான். (இவையிருந்தும்) குருவின்பாதகமலங்களில் மனம்பற்றவில்லையாயின், அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன?

(ந)

विदेशेषु मान्यः स्वदेशेषु धन्यः सदाचारवृत्तेषु मत्तो न चान्यः ।
गुरोरंघ्रिपद्मे मनश्चेन्न लग्नं ततः किं ततः किं ततः किं ततः किम् ॥४॥

---

* குரு + அஷ்டகம் = குர்வஷ்டகம் என்பது சம்ஸ்கிருதசந்தி.

பிறதேசங்களில் மதிக்கப்படுபவனாய், தன்தேசத்தில் தன்னியனாய் (பாக்கியசாலியாய்), சதாசார நடையினருள் பத்தனாய் (தனக்குச்சமானன்) வேறொருவனில்லாதவனாயிருக்கின்றான். (இவ்வாறிருந்தும்) குருவின் பாதகமலங்களில் மனம்பற்றவில்லையாயின், அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? (௪)

क्षमामंडले भूपभूपालवृंदैः सदा सेवितं यस्य पादारविंदम् ।
गुरोरंघ्रिपद्मे मनश्चेन्न लग्नं ततः किं ततः किं ततः किं ततः किम् ॥५॥

பூமண்டலத்தில் இராஜராஜர்களின் கூட்டங்களால் எவனுடைய பாதாரவிந்தம் எப்போதும் சேவிக்கப்படுகிறதோ, (அவனுக்கு) குருவின் பாதகமலங்களில் மனம்பற்றவில்லையாயின், அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? (௫)

यशो मे गतं दिक्षु दानप्रतापाज्जगद्वस्तु सर्वं करे यत्प्रसादात् ।
गुरोरंघ्रिपद्मे मनश्चेन्न लग्नं ततः किं ततः किं ततः किं ततः किम् ॥६॥

தானப்பிரதாபத்தால் என்கீர்த்தி பத்துத்திக்கிலும் சென்றிருக்கின்றது. எவருடைய பிரசாதத்தால் உலகவஸ்துக்கள் யாவும் கையிலிருப்பனவாயுளவோ, அத்தன்மைய குருவின் பாதகமலங்களில் மனம்பற்றவில்லையாயின், அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன (௬)

न भोगे न योगे न वा वाजिराजौ न कांतासुखे नैव वित्तेषु चित्तम् ।
गुरोरंघ्रिपद्मे मनश्चेन्न लग्नं ततः किं ततः किं ततः किं ततः किम् ॥७॥

சித்தம் போகத்திலில்லை, யோகத்திலில்லை. * குதிரைகூட்டங்களிலில்லை. ஸ்திரீசுகத்திலுமில்லை; திரவியங்களிலுமில்லை. (அப்படியிருந்தும்) குருவின் பாதகமலங்களில் மனம்பற்றவில்லையாயின், அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? (௭)

* குதிரைக்கூட்டமென்பது மற்றைய இரதகஜபதாதிகட்கும் உபலக்ஷணமாம்.

अरण्ये न वा स्वस्य गेहे न कार्ये न देहे मेना वर्तते मेत्वनर्घ्ये ।
गुरोरंघ्रिपद्मे मनश्चेन्न लग्नं ततः किं ततः किं ततः किं ततः किम् ॥८॥

காட்டில் அல்லது வீட்டில் என்மனம் இல்லை, காரியத்தி லில்லை அல்லது தேகத்திலில்லை. (அப்படியிருந்தும்) விலைமதிக் கப்படாத குருவின்பாதகமலங்களில் மனம்பற்றவில்லையாயின், அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? (அ)

अनर्घ्याणि रत्नानि भुक्तानि सम्यक्समालिंगिता कामिनी यामिनीषु ।
गुरोरंघ्रिपद्मे मनश्चेन्न लग्नं ततः किं ततः किं ततः किं ततःकिम् ॥९॥

விலைமதிக்கப்படாத இரத்தினங்கள் அநுபவிக்கப்பட்டன. இரவுகளில் ஸ்திரீ செவ்வையாய் ஆலிங்கனம் செய்யப்பட்டிருக் கின்றனள். (அவ்வாறிருந்தும்) குருவின் பாதகமலங்களில் மனம்பற்றவில்லையாயின்? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? (கூ

गुरोरष्टकं यःपठेत्पुण्यदेही यतिर्भूपतिर्ब्रह्मचारी च गेही ।
लभेद्वांछितार्थं पदं ब्रह्मसंज्ञं गुरोरुक्तवाक्ये मनो यस्य लग्नम् ॥१०॥

குருவின் அஷ்டகத்தை எந்தப் புண்ணிய தேகியாயுள்ள சந்நியாசி, அரசன், பிரஹ்மசாரி, கிருகஸ்தன் படிக்கின்றானோ, எவனுக்குக் குரவன் உபதேசித்தவாக்கியத்தில் மனது பற்றியி ருக்கின்றதோ, அவன் (தான்)விரும்பிய பிரஹ்மமென்னும் பெய ரையுடைய பதத்தையடைகின்றான். (கo)

इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यश्रीमच्छंकराचार्यविरचितं गुर्वष्टकं समाप्तम् ।

இவ்வாறு ஸ்ரீமத் சங்கராசாரியஸ்வாமிகள் அருளிச்செய்த

குர்வஷ்டகம்.

முடிந்தது.

---

# ॥ श्री दक्षिणामूर्तिस्तोत्रम् ॥

## ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியஷ்டகம்.

विश्वं दर्पणदृश्यमाननगरीतुल्यं निजांतर्गतम्
पश्यन्नात्मनि मायया बहिरिवोद्भूतं यथा निद्रया ॥
यः साक्षीकुरुते प्रबोधसमये स्वात्मानमेवाद्वयं
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ १ ॥

கண்ணாடியிற் காணப்படும் நகரம்போலத் தன்னுள்ளிருப்பதான ஜகத்தை நித்திரையினால் (உள்ளிருக்கும் சொப்பனப்பிரபஞ்சம் வெளியிருப்பதாகக்) காண்பதுபோல் தன்னிடத்து மாயையினால் வெளியில் வெளிப்பட்டிருப்பதுபோற் கண்டு (விழித்தபோது சொப்பனம் பிரபஞ்சமில்லாத தன்னையே அறிவது போல)ஞானோதயகாலத்தில் அத்வயமாக (த்வைதமாகிய பிரபஞ்சமின்றியதாக)த் தனது ஆத்மாவை எவன் சாக்ஷாத்கரிக்கின்றானோ, அந்தக் குருமூர்த்தியான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம்.
(க)

बीजस्यांतरिवांकुरो जगदिदं प्राङ्निर्विकल्पं पुन
र्मायाकल्पितदेशकालकलनावैचित्र्यचित्रीकृतम् ॥
मायावीव विजृंभयत्यपि महायोगीव यः स्वेच्छया
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ २ ॥

எவன் மாயாவியினைப்போலவும், மகாயோகியினைப்போலவும், தனது இச்சையினால் (சங்கற்பத்தால்) சிருஷ்டிக்குமுன் வித்தினுள் முளையினைப்போல *நிர்விகற்பமா(பெயர் ஜாதி முதலிய வேற்றுமை யில்லாததா)யிருந்ததான ஜகத்தை மறுபடியும்(தனது) மாயாகற்பிதமான தேசகாலங்களின் கலக்கத்தால்

* போக்தா போக்கியமுதலிய விகற்பமின்றி ஆத்மாமாத்திரமிருந்ததென்பற்கு "आत्मा वा इदमेक एव अग्र आसीत्—சிருஷ்டிக்குமுன் இது (உலகம்) ஒரே ஆத்மாவா யிருந்தது", "सदेव सोम्येदमग्र आसीत्—சௌமியனே! இது (உலகம்) சிருஷ்டிக்குமுன் சத்தாகவே இருந்தது" என்னும் இவைமுதலியன சுருதிகளாம்.

விசித்திரத்தன்மையாக (பற்பலவிதமாக) சித்திரிக்கப்பட்டதாக விரிக்கின்றானோ, அந்த ஸ்ரீ குருமூர்த்தியாகிய தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம் (௨)

यस्यैव स्फुरणं सदात्मकमसत्कल्पार्थकं भासते
साक्षात्तत्त्वमसीति वेदवचसा यो बोधयत्याश्रितान् ॥
यत्साक्षात्करणाद्भवेन्न पुनरावृत्तिर्भयांभोनिधौ
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ३ ॥

எதனுடைய சத்துவடிவமானவிளக்கம் (சைதன்னியம்) அசத்துக்குச்சமமானபொருளாகத்தோற்றுகின்றதோ, (தன்னை) ஆசிரயி(அடு)த்தவர்களுக்குச் சாக்ஷாத் தத்துவமஸியென்னும் வேதவாக்கியத்தால் எது அறிவிக்கின்றதோ, எதனைச் சாக்ஷாத்கரித் (அபரோக்ஷமாயறி)தலால் சம்சாரசமுத்திரத்தில் மறுபடியும் திரும்புதல் உண்டாகிறதில்லையோ, அந்த ஸ்ரீ குருமூர்த்தியாகிய தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம். (௩)

नानाछिद्रघटोदरस्थितमहादीपप्रभाभास्वरं
ज्ञानं यस्य तु चक्षुरादिकरणद्वारा बहिः स्पंदते ॥
जानामीति तमेव भांतमनुभात्येतत्समस्तं जगत्
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ४ ॥

* பலதுவாரங்களையுடைய குடத்தின் உள்ளே வைக்கப்பட்டுள்ள பெரியதீபத்தின் பிரபையை(பிரகாசத்தினை)ப்போல(பலதுவாரங்களுள்ள தேககடத்தில் சொப்பிரகாசமாய்) விளங்குந் தன்மையதாகிய எவனுடைய ஞானம் (சைதன்னியம்) நேத்திரமுதலிய(துவாரமாகிய) கரணங்களின் வழியாக வெளியில் (விஷயதேசத்தில்) செல்லுகின்றதோ, யான் அறிகிறேனென்று (சாக்ஷித்தன்மையாக)விளங்குகின்ற அவனையே அநுசரித்து இந்தச் சமஸ்தஜகத்தும எவனால் விளங்குகின்றதோ, அந்தக் குருமூர்த்தியாகிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம்.(௪)

---

* இதனை ஸ்ரீ விசாரசந்திரோதயம் ௭௧-வது விடையிற் காண்க.

देहं प्राणमपींद्रियाण्यपि चलां बुद्धिं च शून्यं विदुः
स्त्रीबालांधजडोपमास्त्वहमिति भ्रांता भृशं वादिनः ॥
मायाशक्तिविलासकल्पितमहाव्यामोहसंहारिणे
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ५ ॥

* தேகத்தினையும், பிராணனையும், இந்திரியங்களையும், சலமுடைய (கணத்திற்றோன்றிநசிக்கும்) புத்தியினையும், சூனியத்தினையும் யானென்று (ஆத்மவடிவமாக) அறிகின்றனர், ஸ்திரீ பாலர் குருடர் ஜடர் இவர்களுக்குச் சமமாக மிகப் பிராந்தியுடைய வாதிகள் (சார்வாகர்முதலிய சாஸ்திரகர்த்தாக்கள்). (ஆதலால்) மாயாசக்தியின் விலாசத்தாற் கற்பிக்கப்பட்ட (அப்)பெரும் மயக்கத்தினைக் கெடுப்பவரான அந்த ஸ்ரீகுருமூர்த்திவடிவ ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம். (௫)

राहुग्रस्तदिवाकरेंदुसदृशो मायासमाच्छादना-
त्सन्मात्रः करणोपसंहरणतो योऽभूत्सुषुप्तः पुमान् ॥
प्रागस्वाप्समिति प्रबोधसमये यः प्रत्यभिज्ञायते
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ६ ॥

எந்தப்புருஷன் (பிரத்தியக்வடிவ பரமேசுவரன்) கரணங்களொடுங்கியதனால் மாயை செவ்வையாய் மறைப்பதனால் இராகுவினால் விழுங்கப்பட்ட சூரியசந்திரர்களைப் போன்றவனாய், சத்தாமாத்திரனாய்ச், சுழுத்தியடைந்தவனாகின்றானோ, எவன் விழித்தகாலத்து முன் யான் தூங்கினேனென்று நினைவோடு (தன்னை) அறிகின்றானோ, அந்த ஸ்ரீ குருமூர்த்தியாகிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம். (௬)

बाल्यादिष्वपि जाग्रदादिषु तथा सर्वास्ववस्थास्वपि
व्यावृत्तास्वनुवर्तमानमहमित्यंतः स्फुरंतं सदा ॥

---

* இதனால் தேகாத்மவாதியான சார்வாகன்முதல் சூனியாத்மவாதியான மாத்தியமிகபௌத்தனீறான வாதிகள்மதம் மறுக்கப்பட்டது.

स्वात्मानं प्रकटीकरोति भजतां यो मुद्रया भद्रया
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ७ ॥

*பாலிய * முதலியவற்றிலும், * ஜாக்கிரமுதலியவற்றிலும், அவ்வாறே * (மற்றைய) வெவ்வேறு பிரிக்கப்பட்டனவாகிய எல்லா அவஸ்தைகளிலும் தான் எப்போதும் தொடர்ந்து நிற்ப தாய், யானென்று உள்ளே விளங்குவதான தனதாத்மாவை எவர் தன்னைப்பஜிப்பவர்களுக்குப் பத்திரையாகிய முத்திரை (சின்முத்திரை)யினால் வெளிப்படச்செய்கின்றனரோ, அந்த ஸ்ரீ குருவாகிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம். (எ)

विश्वं पश्यति कार्यकारणतया स्वस्वामिसंबंधतः
शिष्याचार्यतया तथैव पितृपुत्राद्यात्मना भेदतः ॥
स्वप्ने जाग्रति वा य एष पुरुषो मायापरिभ्रामित-
स्तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ८ ॥

எந்த இப்புருஷன் மாயையினால் மயக்கப்பட்டவனாய்ச் சொப்பனத்திலாவது, ஜாக்கிரத்திலாவது, உலகத்தைக் காரியகா ரணத்தன்மையாகவும், உடைமை உடையானென்னும் சம்பந்தத் தன்மையாகவும், சிஷ்யன் குருவெனுந்தன்மையாகவும், அப்படி யே பிதா புத்திரன்முதலிய வடிவமாகவும், பேதமாகக் காண் கின்றானோ, அந்த ஸ்ரீ குருமூர்த்தியான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம். (அ)

भूरंभांस्यनलोऽनिलोंबरमहर्नाथो हिमांशुः पुमा-
नित्याभाति चराचरात्मकमिदं यस्यैव मूर्त्यष्टकम् ॥

---

*பால்யம்=சைசவம். * முதலியவென்பதனால் கௌமார யௌவன விருத்தாவஸ்தைகளும் கொள்ளப்படும். * ஜாக்கிரமுதலியவென்பதனால் சொப்பன சுழுத்தி ஜனன மரண மூர்ச்சாவஸ்தைகளும் கொள்ளப்படும். * மற்றைய அவஸ்தைகளாவன காணுடல் கேட்டல் முதலியவடிவினதும், கர்த்திருத்துவபோக்திருத்துவமுதலியனவுமான அவஸ்தைகள்.

नान्यत्किंचनविद्यते विमृशतां यस्मात्परस्माद्विभोः
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ९ ॥

பூமி, ஜலம், அக்கினி, வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், புருஷன் என்னும் சராசரவடிவமான இது எவனுடைய * மூர்த்தியஷ்டகமாய் விளங்குகின்றதோ, செவ்வையாய் ஆராய்ச்சிசெய்கிறவனுக்கு எந்தப்பரமாகிய விபுவைவிட வேறுபொருள் சிறிதுமில்லையோ, அந்த ஸ்ரீ குருமூர்த்தியாகிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம். (கூ)

सर्वात्मत्वमिति स्फुटीकृतमिदं यस्मादमुष्मिंस्तवे
तेनास्य श्रवणात्तथार्थमननाद्ध्यानाच्च संकीर्तनात् ॥
सर्वात्मत्वमहाविभूतिसहितं स्यादीश्वरत्वं स्वतः
सिद्ध्येतत्पुनरष्टधा परिणतं चैश्वर्यमव्याहतम् ॥ १० ॥

எதனால் இந்தஸ்தோத்திரத்தில் சர்வாத்மத்தன்மை என்னும் இது விளக்கப்பட்டுளதோ, அதனால் இதன் சிரவணத்தினாலும், இதன் அர்த்தத்தை மனனஞ்செய்வதனாலும், நிதித்தியாசனஞ் செய்வதனாலும், செவ்வையாய்ப்படித்தலாலும் சர்வாத்ம

---

* பரமேசுவரன் அஷ்டமூர்த்திவடிவினராய் விளங்குகின்றனர் என்பதை அநேகம் சுருதிகளோடு தேவார திருவாசகங்களும் கூறுகின்றன :—

தேவாரம்.

பட்டிசைந்த அல்குலாள் பாவையாளோர் பாகமா
யொட்டிசைந்த தன்றியு மூச்சியாளொருத்தியாய்க்
கொட்டிசைந்த வாடலாய்க்கூடலாலவாயிலாய்
எட்டிசைந்த மூர்த்தியாயிருந்தவாறி தெங்ஙனே.”

திருவாசகம்.

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாயமைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகேழெனத்திசைபத்தெனத்தானொருவனுமே
பலவாகிநின்றவாதோணோக்கமாடாமோ.

தன்மையாகிய மகாவிபூதியோடுகூடிய ஈசுவரத்தன்மை தானே யுண்டாம். மறுபடியும் (மாயையினால்) எட்டுவிதமாகப் பரிணமித்ததும்; கெடாததுமான (*அணிமாதி)ஐசுவரியமும் சித்திக்கும். (௧௦)

इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्रीमच्छंकराचार्यविरचितं दक्षिणामूर्तिस्तोत्रं संपूर्णम् ॥

இவ்வாறு ஸ்ரீமத் சங்கராசாரியஸ்வாமிகள் அருளிச்செய்த

தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்

முடிந்தது.

---

* அணிமாதிகள் அ. அவை க. அணிமா உ. மகிமா ந. கரிமா ச. இலகிமா ரு. பிராப்தி சு. பிராகாமியம் எ. ஈசத்துவம் அ. வசித்துவம். என்பன அவற்றுள்,

அணிமா=மிகச்சிறியஉயிர்கடோறும் தான் பரமகாஷ்டையணுவாய்ப்புகுந்து வாழ்தல்.

மகிமா=பிருதிவிமுதல் நாதமீறாகச் சொல்லப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களினுள்ளும் புறம்பும் நீங்காது மகத்தாய் நிறைந்திருத்தல்.

லகிமா=மேருபோன்ற பாரமுள்ள யோகியை யெடுக்குங்கால் துரும்பைப்போல் இல்குவாக (இலேசாக) விருத்தல்.

கரிமா=துரும்பைப்போலிருக்கும் யோகியை யெடுக்குங்கால் மேருவைப்போல் குருத்துவ (பார)மாக விருத்தல்.

பிராப்தி=பாதாளத்திருப்போன் பிரஹ்மலோகத்திலும், பிரஹ்மலோகத்திருப்போன் பாதாளத்திலுஞ்செல்லுதல்.

பிராகாமியம்=பரகாயப்பிரவேசஞ்செய்தல் ஆகாயகமனம்புரிதல் இச்சித்த சகலபோகங்களும் இருந்தவிடத்துக் கிடைக்கப்பெறுதல். அல்லது தன் தேகவொளியால் மண்ணிலுள்ள பொருள்களையும் விண்ணிலுள்ள பொருள்களையும் திரிகால நிலைகளையுமறிதல்.

ஈசத்துவம்=தன்னிச்சையில் முத்தொழிலும் புரிந்து சூரியாதிகள் தன்னேவல் கேட்க விளங்குதல்.

வசித்துவம்=அசுரர், பறவை, மிருகம், பூதம், மனிதர், இந்திரன் முதலிய திக்குப்பாலர்களை வசப்படுத்துதல்.

இவைகள் அஷ்டமாசித்திகளாம்.

## धन्याष्टकम् ।

## தன்யாஷ்டகம்.

तज्ज्ञानं प्रशमकरं यदिंद्रियाणां
तज्ज्ञेयं यदुपनिषत्सु निश्चितार्थम् ॥
ते धन्या भुवि परमार्थनिश्चितेहाः
शेषास्तु भ्रमनिलये परिभ्रमंति ॥ १ ॥

இந்திரியங்களின் ஆசையையொழிப்பது எதுவோ அது ஞானம். உபநிடதங்களில் நிச்சயிக்கப்பட்டபொருள் எதுவோ அது ஞேயம். * பரமார்த்தநிச்சித விருப்பமுடைய அவர்களே உலகத்தில் தன்னியர் (பாக்கியசாலிகள்). மற்றையோர் மயக்கநிலையில் சுழல்கின்றனர். (க)

आदौ विजित्य विषयान्मदमोहराग-
द्वेषादिशत्रुगणमाहृतयोगराज्याः ॥
ज्ञात्वाऽमतं समनुभूय परात्मविद्या -
कांतासुखा बत गृहे विचरंति धन्याः ॥ २ ॥

முதலில் விஷயங்களையும், மதமோகராகத்துவேஷாதி * சத்துருகணத்தையும் செவ்வையாய் வென்று, யோகராஜ்ஜியத்தைக் கைக்கொண்டவர்கள். கருதப்படாததனை அறிந்து, செவ்வையாயநுபவித்து, பரமாத்மவித்தையாகிய காந்தை (ஸ்திரீ)யின் சுகமுடையவர்களாய் ஆச்சரியம்! வீட்டில் சஞ்சரிக்கின்றனர் தன்னியர்கள். (உ)

त्यक्त्वा गृहे रतिमतो गतिहेतुभूता -
मात्मेच्छयोपनिषदर्थरसं पिबंतः ॥
वीतस्पृहा विषयभोगपदे विरक्ता -
धन्याश्चरंति विजनेषु विरक्तसंगाः ॥ ३ ॥

---

* உண்மைப்பொருளின் நிர்ணயம்.

* சத்துருகணம் = பகைக்கூட்டம்.

கிருகத்தில் * இரதியினைவிட்டு அதன்பின் * கதிக்கு ஏதுவ டிவ ஆத்மவிருப்பத்தால் உபநிஷதார்த்த ரஸத்தைப் பருகுகின்ற வர்களாய், ஆசையொழிந்தவர்களாய், விஷயபோகபதத்தில் விரக்தர்களாய், ஜனங்களில்லாதவிடத்து * விரக்தசங்கமுடையவர்களாய்ச் சஞ்சரிக்கின்றனர் தன்னியர்கள். (ந)

त्यक्त्वा ममाहमिति बंधकरे पदे द्वे
मानावमानसदृशाः समदर्शिनश्च ॥
कर्तारमन्यमवगम्य तदर्पितानि
कुर्वंति कर्मपरिपाकफलानि धन्याः ॥ ४ ॥

யான் எனதென்னும் பந்தத்தைத்தரும் இரண்டுபதங்களையும்விட்டு, மானாவமானமொத்தவர்களாய், சமநோக்குடையவர்களாய்ச், செய்பவன் வேறெனவுணர்ந்து, கர்மபரிபாகபலங்களை அவனிடத்தொப்புவித்தவர்களாய்ச்செய்கின்றனர் தன்னியர். (ச)

त्यक्त्वैषणात्रयमवेक्षितमोक्षमार्गा
भैक्ष्यामृतेन परिकल्पितदेहयात्राः ॥
ज्योतिः परात्परतरं परमात्मसंज्ञं
धन्या द्विजा रहसि हृद्यवलोकयंति ॥ ५ ॥

* ஈஷணைமூன்றும் விட்டு மோக்ஷமார்க்கத்தை நோக்கியவர்களாய், பிக்ஷான்னமாகிய அமிருதத்தினால் கற்பிக்கப்பட்ட தேகயாத்திரை (தேகநிர்வாகத்தை) யுடையாராய், ஜோதியும் பராத்பரதரமும் (மேலானவற்றிற்கு மிகமேலானதும்) பரமாத்மா வென்னும் பெயரையுடையதுமான வஸ்துவினை, இரகசியமாக இதயத்தில் காண்கின்றனர் * துவிஜர்களாகியதன்னியர்கள். (ரு)

नासन्न सन्न सदसन्न महन्न चाणु
न स्त्री पुमान्न च नपुंसकमेकबीजम् ॥

---

* இரதியினை = இன்பத்தினை. * கதி = மோக்ஷம். * விரக்தசங்கம் = துறந்தவர்கூட்டம்.

* தாரம், புத்திரன், தன மெனிபவற்றி லுண்டாம் பிரியம் ஈஷணை யெனப்படும். * துவிஜர் = இருபிறப்பாளர்.

यैर्ब्रह्म तत्त्वमनुपासितमेकचित्ता
धन्या विरेजुरितरे भवपाशबद्धाः ॥ ६ ॥

அசத்தல்லாததும், சத்தல்லாததும், சதசத்தல்லாததும், மகத்தல்லாததும், அணுவல்லாததும், ஸ்திரீயல்லாததும், புருஷனல்லாததும், நபுஸ்கம்(அலி)அல்லாததும், ஏகமும், காரணமுமான பிரஹ்மதத்துவம் எவர்களால் உபாசிக்கப்பட்டதாகின்றதோ, அவர்கள் * ஏகசித்தமுடைய தன்னியர்களாய் விளங்குகின்றனர். மற்றையோர் * பவபாசத்தில் கட்டுப்பட்டவராவர். (சா)

अज्ञानपंकपरिमग्नमपेतसारं
दुःखालयं मरणजन्मजरावसक्तम् ॥
संसारबंधनमनित्यमवेक्ष्य धन्या
ज्ञानासिना तदवशीर्य विनिश्चयंति ॥ ७ ॥

அஞ்ஞானச்சேற்றில் செவ்வையாயமூழ்ந்தியதும், சாரமற்றதும், * துக்காலயமும், மரணம், ஜன்மம், ஜரை (மூப்பு) என்பவற்றால் பற்றப்பட்டதுமான, சம்சாரபந்தனத்தை, அநித்தியமெனக்கண்டு, ஞானவாளால் அதனையறுத்துச் செவ்வையாய் நிச்சயிக்கின்றனர் தன்னியர்கள். (எ)

शांतैरनन्यमतिभिर्मधुरस्वभावै-
रेकत्वनिश्चितमनोभिरपेतमोहैः ॥
साकं वनेषु विजितात्मपदस्वरूपं
शास्त्रेषु सम्यगनिशं विमृशंति धन्याः ॥ ८ ॥

சாந்தர்களும், அந்நியமில்லாதமதியினரும், * மதுரஸ்வபாவமுடையவர்களும், ஏகத்துவத்தைநிச்சயித்தமனதுடையவர்களும், மோகநீங்கியவர்களுமான பெரியோர்களோடு கூட வனங்

* ஏகசித்தம் = ஒருமனமுடைய. * பவபாசம் = பிறவிக்கயிறு.
* துக்கம் தங்குமிடம். * இனியவியல்பினரும்.

களில் செவ்வையாய் ஜயிக்கப்பட்ட ஆத்மபதசொருபத்தினைச் சாஸ்திரங்களில் இடைவிடாது நன்காராய்கின்றனர் தன்னியர்கள். (௮

अहिमिव जनयोगं सर्वदा वर्जयेद्यः
कुणपमिव सुनारीं त्यक्तुकामो विरागी ॥
विषमिव विषयान्या मन्यमानो दुरंतान्
जयति परमहंसो मुक्तिभावं समेति ॥ ९ ॥

எவன் எப்போதும் ஜனசங்கத்தைப் * பாம்பினைப்போல நீக்குகின்றானோ, நல்ல *நாரியைப்பிணத்தினைப்போல விடவிரும்பியவனானவனோ, விராகமுடையவனானவனோ, *தீயமுடிவினையுடைய விஷயங்களை விஷம்போல மதிப்பவனாய் ஜயிக்கின்றானோ, அப்பரமஹம்ஸன் முக்தித்தன்மையை அடைகின்றான். (௯)

संपूर्णं जगदेव नंदनवनं सर्वेऽपि कल्पद्रुमा
गांगं वारि समस्तवारिनिवहः पुण्याः समस्ताः क्रियाः ॥
वाचः प्राकृतसंस्कृताः श्रुतिशिरो वाराणसी मेदिनी ।
सर्वावस्थितिरस्य वस्तुविषया दृष्टे परब्रह्मणि ॥ १० ॥

பிரஹ்மத்தையறிந்தபோது, ஜகத்துமுழுவதும் நந்தனவனம்; எல்லாமும் கல்பவிருக்ஷங்கள்; சகலநீரோட்டமும் கங்காஜலம்; எல்லாச்செய்கைகளும் புண்ணியங்கள்; * பிராகிருத சமஸ்கிருதவாக்குகள் சுருதிசிரசு; * மேதினி * வாராணசி; சர்வநிலையும் இவனுக்கு வஸ்துவாகிய விஷயங்களாம். (௧௦)

इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्रीमच्छंकराचार्यविरचितं धन्याष्टकस्तोत्रं संपूर्णम् ॥

இவ்வாறு ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவிராஜகாசாரிய சங்கராசாரியஸ்வாமிகள் அருளிச்செய்த தன்னியாஷ்டகம்,
முடிந்தது.

---

* பாம்பினின்றும் பயந்து விலகுவதுபோல ஜனக்கூட்டத்தினின்றும் பயந்து விலகுகின்றானோ,

* பெண்ணை.

* முடிவில்தீமையைத்தரும் விஷயங்களை.

* நர்களால் பிரகிருதத்தில்,பேசப்படும் பாஷைகள் யாவும் பிராகிருதமெனப்படும். * பூமி. * காசியானது வரணை, அசியென்னும் இரண்டு நதிகளினிடையிலிருத்தலால் வாராணசி யெனப்படுகின்றது.

## ॥ विज्ञाननौका ॥

### விஞ்ஞானநௌகா (விஞ்ஞானக்கப்பல்).

तपोयज्ञदानादिभिः शुद्धबुद्धिर्विरक्तो नृपादौ पदे तुच्छबुद्ध्या ।
परित्यज्य सर्वं यदाप्नोति तत्त्वं परं ब्रह्म नित्यं तदेवाहमस्मि॥ १ ॥

தவம், யாகம், தானமுதலியவற்றுல் சுத்தமான புத்தியுடையனுய், இராஜ்பாதிபதங்களில் துச்சம் (வெறுமையானது) என்னும் புத்தியினுல் இச்சையொழிந்தவன், எல்லாவற்றையும் விட்டு, நித்தியமாயும் * பரப்பிரஹ்மமாயுமுள்ள எத்தத்துவத்தையடைகின்றுனே அதுவே யான். (க)

दयालुं गुरुं ब्रह्मनिष्ठं प्रशांतं समाराध्य मत्या विचार्य स्वरूपम् ।
यदाप्नोति तत्त्वं निदिध्यासविद्वान्परं ब्रह्म नित्यं तदेवाहमस्मि ॥२ ॥

தயையுடையவரும் மிகச்சாந்தரும் பிரஹ்மநிஷ்டருமாகிய குருவைச் செவ்வையாய் ஆராதித்து, புத்தியினுல் சொரூபத்தை விசாரித்து நிதித்தியாசனஞ்செய்து, * வித்வான் எந்தப் பிரஹ்மமும் நித்தியமுமாகிய தத்துவத்தை யடைகின்றுனே அதுவே யான். (உ)

यदानंदरूपं प्रकाशस्वरूपं निरस्तप्रपञ्चं परिच्छेदशून्यम् ।
अहंब्रह्मवृत्त्यैकगम्यं तुरीयं परंब्रह्म नित्यं तदेवाहमस्मि ॥ ३ ॥

ஆநந்தவடிவமும், பிரகாசசொரூபமும், பிரபஞ்சமொழிந்ததும், * பரிச்சேதமின்றியதும், யான் பிரஹ்மமென்னும் விருத்தியொன்றினுலேயே அறியத்தக்கதும், * துரியமும் நித்தியமுமான பரப்பிரஹ்மம் எதுவோ, அதுவே யான். (ங)

---

* அதற்குமேல் பெரிதொன்றில்லாமையால் பரப்பிரஹ்மமாம்.

* ஞானி.

* தேசகாலவஸ்துக்களால் சேதிக்கப்படாததும்.

* ஜாக்கிராதியவஸ்தை மூன்றற்கும் சாக்ஷியான நான்காவதும்.

यदज्ञानतो भाति विश्वं समस्तं विनष्टं च सद्यो यदात्मप्रबोधे ।
मनोवागतीतं विशुद्धं विमुक्तं परं ब्रह्म नित्यं तदेवाहमस्मि ॥ ४ ॥

எதனையறியாததினால் சகலஜகத்தும் விளங்குகின்றதோ, எவ்வாத்மாவைச் செவ்வையாயறிந்தபோது(யாவும்) உடனே நஷ்டமாகின்றதோ, அப்படிப்பட்ட மனோவாக்கிற் கப்பாற்பட்டதும், மிகச்சுத்தமானதும், (சகலபாசங்களினின்றும்) விடுபட்டதும், நித்தியமு (துரியமு)மான பரப்பிரஹ்மம் எதுவோ, அதுவே யான். (௪)

निषेधे कृते नेति नेतीति वाक्यैः समाधिस्थितानां यदाभाति पूर्णम् ।
अवस्थात्रयातीतमेकं तुरीयं परं ब्रह्म नित्यं तदेवाहमस्मि ॥ ५ ॥

நேதிநேதி (இத்தன்மையதன்று, இத்தன்மையதன்று)என்னும் வாக்கியங்களால்(யாவும்) நிஷேதிக்கப்பட்டபோது சமாதியில் நிலைத்தவர்களுக்கு எந்தப்பூர்ணம் விளங்குகின்றதோ, அந்த அவஸ்தாத்திரயங்கட் கப்பாற்பட்டதும், ஏகமும், துரியமும், நித்தியமுமான பரப்பிஹ்மமே யான். (௫)

यदानंदलेशैः समानंदि विश्वं यदा भाति सत्त्वे तदा भाति सर्वम् ।
यदालोचने रूपमन्यत्समस्तं परं ब्रह्म नित्यं तदेवाहमस्मि ॥ ६ ॥

எதன் ஆநந்த *லேசங்களால் ஜகத்து நல்லாநந்தமுடையதாகின்றதோ, எச்சத்துவம் விளங்கியபோது எல்லாம்விளங்குகிறதோ, எதன் ஆலோசனையில் (சங்கற்பத்தில்) மற்றெல்லாவுருவமும் உண்டாகின்றதோ, அந்தநித்தியமான பரப்பிரஹ்மமே யான். (௬)

अनंतं विभुं सर्वयोनिं निरीहं शिवं संगहीनं यदोंकारगम्यम् ।
निराकारमत्युज्ज्वलं मृत्युहीनं परं प्रह्म नित्यं तदेवाहमस्मि ॥ ७ ॥

*லேசம்=அற்பம்.

* அநந்தமும், * விபுவும், * சர்வயோனியும், இச்சையின்றியதும், சிவமும், * சங்கமின்றியதும், ஓங்காரத்தால் அறியத்தக்கதும், நிராகாரமும், மிகத்தூயதும் * மிருத்தியுவில்லாததும் எதுவோ, அந்தநித்தியமான பரப்பிரஹ்மமே யான். (௭)

यदानंदसिंधौ निमग्नः पुमान्स्यादविद्याविलासः समस्तप्रपंचः ।
यदा न स्फुरत्यद्भुतं यन्निमित्तं परं ब्रह्म नित्यं तदेवाहमस्मि ॥ ८ ॥

எவ்வாநந்தசமுத்திரத்தில் புருஷன் மூழ்கியவனாகின்றானோ, * அவித்தியாவிலாசமான சகலப்பிரபஞ்சமும் எப்போது (எதில் மூழ்கியபோது) அற்புதமாய் விளங்குகிறதில்லையோ, எது நிமித்தமோ அந்தநித்தியமான பரப்பிரஹ்மம் யான். (௮)

स्वरूपानुसंधानरूपां स्तुतिं यः पेठदादराद्भक्तिभावो मनुष्यः ।
शृणोति ह वा नित्यमुद्युक्तचित्तो भवेद्विष्णुरत्रैव वेदप्रमाणात् ॥९॥

எந்தப்பத்தியுள்ளமனிதன் சுவசொரூபாநுசந்தானவடிவஸ்துதியை இங்கு நித்தியமும் முயற்சியுடைய சித்தமுள்ளவனாய்ப் படிக்கின்றானோ, அல்லது கேட்கின்றானோ, அவன் இவ்விடத்திலேயே விஷ்ணு(வியாபகவஸ்து)வாகின்றான் ; வேதப்பிரமாணமிருத்தலின். (௯)

विज्ञाननावं परिगृह्य कश्चित्तरेद्यदज्ञानमयं भवाब्धिम् ।
ज्ञानासिनायो हि विच्छिद्य तृष्णां विष्णोः पदं याति स एव धन्यः १०

---

* அநந்தம் = மூவிதபரிசேதமின்றியது.

* விபு = வியாபகம்.

* சர்வயோனி = உலககாரணம்.

* சங்கம் = சம்பந்தம்.

* மிருத்தியு = மரணம்.

* அவித்தியாவிலாசம் = அஞ்ஞானகாரியம்.

எவன் விஞ்ஞானமென்னும் கப்பலைக்கொண்டு யாதொரு அஞ்ஞானமய *பவசாகரத்தைக் கடக்கின்றானோ, எவன் ஞானமென்னும் வாளால் ஆசையைச் சேதித்து, விஷ்ணுவின் பதத்தையடைகின்றானோ அவனே தன்னியன். (௫0)

॥ इति श्रीमत् शंकराचार्य विरचिता विज्ञाननौका संपूर्णा ॥

இவ்வாறு ஸ்ரீமத் சங்கராசாரியஸ்வாமிகள் அருளிச்செய்த

விஞ்ஞானநௌகா

முடிந்தது.

---

## ॥ ब्रह्मस्तोत्रम् ॥

## பிரஹ்மஸ்தோத்திரம்.

स्थानं न मानं न च नादबिन्दू रूपं न रेखा न च धातुवर्णः ।
दृष्टा न दृश्यं श्रवणं प्रयोगस्तस्मै नमो ब्रह्मनिरञ्जनाय ॥ १ ॥

ஸ்தானமில்லை, மானமில்லை, நாதபிந்துக்களில்லை, ரூபமில்லை, இரேகை(கீற்று)இல்லை, தாதுக்களோடுகூடியவர்ணங்(எழுத்துக்)களில்லை, திருஷ்டாவில்லை, திருசியமில்லை, சிரவணமில்லை, பிரயோகமில்லை, அத்தன்மைய பிரஹ்மமாகிய நிரஞ்சனத்திற்கு நமஸ்காரம். (௧)

शीतं न चोष्णं न च वेगशाली वेगो न च स्पर्शसमाश्रयश्च ।
शुष्कं न शोषो न च तस्य कर्ता तस्मै नमो ब्रह्मनिरञ्जनाय ॥ २ ॥

குளிர்ச்சியுமன்று, உஷ்ணமுமன்று, வேகசுபாவமுடையதுமன்று, வேகமுமன்று, ஸ்பரிசத்தைச்செவ்வையாயாசிரயிப்பதுமன்று, உலர்ந்ததுமன்று, உலர்ச்சியுமன்று, அதனை(உலர்ச்சியை)ச்செய்வதுமன்று, அத்தன்மைய பிரஹ்மமாகிய நிரஞ்சனத்திற்கு நமஸ்காரம். (௨)

---

* பவசாகரம் = பிறவிக்கடல்.

श्वेतो न पीतो न च रक्त एतो रौप्यं न रत्नं न सुवर्णवर्णः ।
चन्द्रार्कवह्निर्न च नोयास्तौ तस्मै नमो ब्रह्मनिरञ्जनाय ॥ ३ ॥

வெண்மையன்று, மஞ்சளன்று, சிவப்பன்று, வெள்ளியுமன்று, இரத்தினமுமன்று, * சுவர்ணவர்ணமுமன்று, சந்திர சூரியவன்னியுமன்று, உதயமும் அஸ்தமுமன்று, அத்தன்மைய பிரஹ்மமாகிய நிரஞ்சனத்திற்கு நமஸ்காரம். (௩)

तिक्तः कषायो न कटुर्नचाम्लो माधुर्यभागो न रसाः समग्राः ।
क्लेदो न तत् कर्म न चास्यकर्ता तस्मै नमो ब्रह्मनिरञ्जनाय ॥ ४ ॥

உறைப்பன்று, துவர்ப்பன்று, கைப்பன்று, புளிப்பன்று, மாதுர்யபாகமுடையதன்று, எல்லாரஸங்களுமன்று, ஈரமன்று, அக்கர்மமன்று, அதன்கர்த்தாவுமன்று, அத்தன்மைய பிரஹ்மமாகிய நிரஞ்சனத்திற்கு நமஸ்காரம். (௪)

वृक्षो न मूलं न च बीजथूरः शाखा न पत्रं न च पर्व्व वल्ली ।
छाया न गन्धो न फलं न पुष्पं तस्मै नमो ब्रह्मनिरञ्जनाय ॥ ५ ॥

விருக்ஷமன்று, வேரன்று, வித்துமன்று, கிளையுமன்று, இலையுமன்று, கணுவுமன்று, கொம்புமன்று, நிழலுமன்று, மணமுமன்று, பழமுமன்று, புஷ்பமன்று, அத்தன்மைய பிரஹ்மமாகிய நிரஞ்சனத்திற்கு நமஸ்காரம். (௫)

ऊर्ध्वं न चाधो न शिवो न शक्तिः पुमान्ननारि न च लिङ्गमूर्तिः ।
ब्रह्मा न विष्णुर्न च रुद्रदेवास्तस्मै नमो ब्रह्मनिरञ्जनाय ॥ ६ ॥

மேலுமன்று, கீழுமன்று, சிவமுமன்று, சக்தியுமன்று, புருஷனுமன்று, ஸ்திரீயுமன்று, லிங்கமூர்த்தியுமன்று, பிரஹ்மாவுமன்று, விஷ்ணுவுமன்று, ருத்திரதேவர்களுமன்று, அத்தன்மைய பிரஹ்மமாகிய நிரஞ்சனத்திற்கு நமஸ்காரம். (௬)

---

* பொன்னிறம்.

अखंडखंडो न मुहूर्तदण्डो कालो न जीवो न गुरुर्नशिष्यः ।
ग्रहा न तारा न च मेघमाला तस्मै नमो ब्रह्मनिरञ्जनाय ॥ ७ ॥

அகண்டமும், கண்டமுமன்று, *முகூர்த்தமும் *தண்டமுமன்று, காலமுமன்று, ஜீவனுமன்று, குருவுமன்று, சிஷ்யனுமன்று, கிரகங்களுமன்று, நக்ஷத்திரங்களுமன்று, மேகமாலையுமன்று, அத்தன்மைய பிரஹ்மமாகிய நிரஞ்சனத்திற்கு நமஸ்காரம். (எ)

वेदो न शास्त्रं न च शौचसंध्ये ध्यानं न जप्यो न च मंत्रजापः ।
होमो न होम्यं न च देवपूजे तस्मै नमो ब्रह्मनिरञ्जनाय ॥ ८ ॥

வேதமுமன்று, சாஸ்திரமுமன்று, சௌசமும் சந்தியுமன்று, தியானமுமன்று, ஜபிக்கப்படுவதுமன்று, மந்திரஜபமன்று, ஓமமன்று, ஓமிக்கப்படுவதன்று, தெய்வமும் பூஜையுமன்று, அத்தன்மைய பிரஹ்மமாகிய நிரஞ்சனத்திற்கு நமஸ்காரம். (அ)

स्वर्गो न पृथ्वी नगरं न पल्ली जातावपिस्तो न च भेदभिन्नौ ।
न चाहं न च त्वं न पृथक् पृथक् त्वं तस्मै नमो ब्रह्मनिरञ्जनाय ॥९॥

சுவர்க்கமுமன்று, பிருதிவியுமன்று, நகரமுமன்று, *பள்ளியுமன்று, ஜாதியிலும்பேதமும் பேதமின்றியதுமாகிய இரண்டுமன்று, நானன்று, நீயன்று, வேறுபட்டதுமன்று, வேற்றுமையுமன்று, அத்தன்மைய பிரஹ்மமாகிய நிரஞ்சனத்திற்கு நமஸ்காரம். (கூ)

गम्भीरधीरं न च भावशून्यमसारसारं न च पापपुण्यम् ।
व्यक्तं न चाव्यक्तमनन्तमन्तं तस्मै नमो ब्रह्मनिरञ्जनाय ॥ १० ॥

---

* முகூர்த்தம் = இரண்டுநாழிகை யளவினதாகிய காலம் அதாவது நாற்பத்தெட்டு நிமிஷம்.

* தண்டம் = ஒருநாழிகை யளவினதாகியகாலம் அதாவது இருபத்தெட்டு நிமிஷம்.

* சிற்றூர்.

அழமும் அழமின்மையுமன்று, இருப்பும் இன்மையுமன்று, அசாரமும் சாரமுமன்று, பாபமும் புண்ணியமுமன்று, வெளிப்படையானதும் வெளிப்படையல்லாததுமன்று, அநந்தமும் அந்தமுமன்று, அத்தன்மைய பிரஹ்மமாகிய நிரஞ்சனத்திற்கு நமஸ்காரம். (கo)

इति श्रीपरमहंसपरिव्राजकाचार्य श्रीशंकराचार्यविरचितं ब्रह्मस्तोत्रं संपूर्णम्

இவ்வாறு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அருளிச்செய்த.

பிரஹ்மஸ்தோத்திரம்.

முடிந்தது.

---

## ॥ निर्वाणदशकम् ॥

## நிர்வாணதசகம். (தசசுலோகி)

नभूमि र्न तोयं न तेजो न वायु र्न खं नेंद्रियं वा न तेषां समूहः ।
अनैकांतिकत्वात्सुषुप्त्येकसिद्धस्तदेकोऽवशिष्टः शिवः केवलोहम् ॥ १ ॥

யான் பூமியல்லன்; நீரல்லன்; தேயுவல்லன்; வாயுவல்லன்; ஆகாயமல்லன்; இந்திரியமல்லன்; அவற்றின்சமூக(கூட்ட)மல்லன்; அவை வியபிசாரியா(பிறழ்ச்சியுடையனவா)யிருத்தலின், ஆதலால் (இவையொழிந்தவிடத்து) மிஞ்சியிருப்பவனும், சுழுத்தியில்முக்கியமாகச் சித்தித்திருப்பவனும், கேவலமும், ஏகமுமான சிவம் யான். (க)

न वर्णा न वर्णाश्रमाचारधर्मा न मे धारणा ध्यानयोगादयोऽपि ।
अनात्माश्रयोहंममाध्यासहीनात्तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ २ ॥

அநாத்மாசிரயமான யானெனதென்னும் அத்தியாசம்(ஞானத்தால்) கெட்டமையால் எனக்கு வர்ணங்களில்லை; வர்ணாசிரமாசாரதர்மங்களில்லை; தாரணைத்தியானயோகமுதலியனவில்லை; அந்த மிஞ்சிநின்ற ஏகமும் கேவலமுமான சிவம் யான். (உ)

न माता पिता वा न देवा न लोका न वेदा न यज्ञा न तीर्थं ब्रुवंति ।
सुषुप्तौ निरस्तातिशून्यात्मकत्वात्तदेको ऽवशिष्टः शिवः केवलोहम् ॥३॥

சுழுத்தியில் * விலக்கப்பட்ட அதிசூனியசொரூபமாயிருத்தலின் (எனக்கு) மாதா இல்லை, பிதா இல்லை, தேவர்களில்லை. உலகங்களில்லை; வேதங்களில்லை. யஞ்ஞங்களில்லை ; தீர்த்தமில்லையென்று சொல்லுகின்றனர். ஆதலால் எஞ்சிநிற்கும் ஏகமும் கேவலமுமான சிவம் யான். (௩)

न सांख्यं न शैवं न तत्पांचरात्रं न जैनं न मीमांसकादेर्मतं वा ।
विशिष्टानुभूत्या विशुद्धात्मकत्वात्तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ।४

அது (ஜகத்காரணமானவஸ்து) சாங்கியர்கொள்கையினதன்று ; சைவர்கொள்கையினதன்று ; பாஞ்சராத்திரிகள் (வைஷ்ணவர்) கொள்கையினதன்று ; ஜயினர்கொள்கையினதன்று ; மீமாம்ஸகர்முதலியோர் கொள்கையினதன்று ;* விசிஷ்டாநுபூதியினால் விசுத்தவடிவமாயிருத்தலின், ஆதலால் எஞ்சிநிற்கும் ஏகமும் கேவலமுமான சிவம் யான். (௪)

न शुक्लं न कृष्णं न रक्तं न पीतं न कुब्जं न पीनं न ह्रस्वं न दीर्घं ।
अरूपं तथा ज्योतिराकारकत्वात्तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ।५

அது ஜோதி (சொப்பிரகாச) வடிவமாயிருத்தலால் வெண்மையன்று; கருமையன்று; சிவப்புமன்று ; மஞ்சளன்று ; அணுவன்று ; மகத்தன்று ; குறுமையன்று ; நெடுமையன்று; அரூபமாம், ஆதலால் எஞ்சிநிற்கும் ஏகமும் கேவலமுமான சிவம் யான். (௫)

---

* அதிசூனியத்தன்மை நீக்கப்பட்ட சொரூபமாயிருத்தலின்.

* விசேஷமான சிஷ்டர் (பெரியோர்) அநுபவத்தினால் என்றும், சவிகற்ப அனுபவத்தினும் வேறான மகாவாக்கிய ஜந்திய அகண்டாகார அனுபவத்தினால் என்றும் பொருள் செய்வர்.

न चोर्ध्वं न चाधो न चांत र्न बाह्यं न मध्यं न तिर्यङ् न पूर्वा परा दिक् ।
वियद्व्यापकत्वादखंडैकरूपस्तदेकोऽवशिष्टः शिवः केवलोहम् ॥ ६ ॥

அது ஆகாயம்போல அல்லது ஆகாயத்தைவிட வியாபகமாயிருத்தலால் மேலிருப்பதன்று ; கீழிருப்பதன்று ; உள்ளிருப்பதன்று; வெளியிருப்பதன்று; இடையிலிருப்பதன்று; குறுக்காயிருப்பதன்று ; முன் பின் திக்கன்று, ஆதலால் எஞ்சிநிற்கும் ஏகமும் கேவலமுமான சிவம் யான். (சூ)

न शास्ता न शास्त्रं न शिष्यो न शिक्षा न च त्वं न चाहं न चायं प्रपंचः ।
स्वरूपाववोधाद्विकल्पासहिष्णुस्तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥७

அது (உபதேசஞ்செய்யும்)சாஸ்தாவன்று; (உபதேசக்கருவியான) சாஸ்திரமன்று; (உபதேசஞ்செய்யப்படும்) சிஷ்யனன்று; (உபதேசக்கிரியையான) சிக்ஷையன்று ; (கேட்கும்) நீயுமன்று ; (சொல்லும்) யானுமன்று ; இப்பிரபஞ்சமுமன்று ; விகற்பத்தைச் சகியாத ஸ்வரூபஞானவடிவினது. ஆதலால் எஞ்சி நிற்கும் ஏகமும் கேவலமுமான சிவம் யான். (எ)

न जाग्रन्न मे स्वप्नको वा सुषुप्तिर्न विश्वो न वा तैजसः प्राज्ञको वा ।
अविद्यात्मकत्वात्त्रयाणां तुरीयंतदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥८

எனக்கு ஜாக்கிரமில்லை ; சொப்பனமில்லை ; சுழுத்தியில்லை; விசுவனல்லன் ; தைஜஸனல்லன் ; பிராஞ்ஞனல்லன் ; மூன்றும் அவித்தைவடிவமாயிருத்தலால், துரியனுவன் ஆதலால் எஞ்சி நிற்கும் ஏகமும் கேவலமுமான சிவம் யான். (அ)

अपि व्यापकत्वादहितत्वप्रयोगात् स्वतः सिद्धभावादनन्याश्रयत्वात् ।
जगत्तुच्छमेतत्समस्तं तदन्यस्तदेकोऽवशिष्टः शिवः केवलोहम् ॥९॥

ஆத்மா வியாபகமாயிருப்பதாலும், புருஷார்த்தத்தன்மைப் பிரயோகத்தினாலும் (வேதத்தில் புருஷார்த்தமாக இதனை யுபதேசித்திருப்பதாலும்) இயல்பாகச் சித்தித்துள்ள இருப்புவடி

வாயிருத்தலாலும், வேறொன்றை ஆசிரயிக்காத தன்மையினாலும், அதனின்வேறாகிய இந்தச் சகல ஜகத்தும் துச்சமாம், ஆதலால் எஞ்சியிருக்கும் ஏகமும் கேவலமுமான சிவம் யான். (௯)

न चैकं तदन्यद्द्वितीयं कुतः स्यान्न चाकेवलत्वं न वा केवलत्वात् ।
न शून्यं न चाशून्यमद्वैतकत्वात्कथं सर्ववेदान्तसिद्धं ब्रवीमि ॥१०॥

ஒன்றன்று; அதனின்வேறான இரண்டாவது எவ்வாறிருக்கும்? கேவலத்தன்மையில்லை; அகேவலத்தன்மையில்லை. சூநியமன்று; சூநியமல்லாததன்று; அத்வைதமாயிருத்தலால் சர்வவேதாந்தசித்தமான அதனை எவ்வாறு யான் சொல்லுவேன்? (௧௦)

॥ इति श्रीमच्छंकराचार्यविरचितं निर्वाणदशकस्तोत्रं संपूर्णम् ॥

இவ்வாறு ஸ்ரீமத்சங்கராசாரியசுவாமிகள் அருளிச்செய்த

நிர்வாணதசகம்.

முடிந்தது.

---

## ॥ हस्तामलकस्तोत्रम् ॥

## ஹஸ்தாமலகம்.

कस्त्वं शिशो कस्यकुतोऽसि गंता किं नाम ते त्वं कुत आगतोऽसि ।
एतन्मयोक्तं वद चार्भक त्वं मत्प्रीतये प्रीतिविवर्धनोऽसि ॥ १ ॥

சிசுவே! நீ யார்? யாருடையவன்? எங்குபோகிறாய்? உன் பெயர்யாது? நீ எங்கிருந்துவந்தாய்? குழந்தாய் நீ பிரீதியைவிசேஷமாய் விருத்திசெய்பவனாயிருக்கிறாய் எனது பிரீதியின்பொருட்டு யான்கேட்ட இதனைச்சொல்லுவாயாக. (௧)

हस्तामलक उवाच ।

नाहं मनुष्यो न च देवयक्षौ न ब्राह्मण क्षत्रिय वैश्य शूद्राः ।
न ब्रह्मचारी न गृही वनस्थो भिक्षुर्न चाहं निजबोधरूपः ॥ २ ॥

ஹஸ்தாமலகர்சொல்லலாயினர் :—

யான் மனுஷ்யனல்லன் ; தேவனும் யக்ஷ(இயக்க)னுமல்லன்; பிராஹ்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களுமல்லன் ; பிரஹ்மசாரியல்லன்; கிருகஸ்தனல்லன்; வானப்பிரஸ்தனல்லன் ; பிக்ஷுகன்(சந்நியாசி)அல்லன் யான் நிஜபோதவடிவன். (௨)

निमित्तं मनश्चक्षुरादिप्रवृत्तौ निरस्ताखिलोपाधिराकाशकल्पः ।
रविर्लोकचेष्टानिमित्तं तथा यः स नित्योपलब्धिस्वरूपोऽहमात्मा ॥३॥

மனம் (அந்தக்கரணம்) சக்ஷு (நேத்திர) முதலியவற்றின் பிரவிருத்தியில், உலகத்தின்சேஷ்டை(செய்கை)க்குச் சூரியன் நிமித்தமாதல்போல எவன் நிமித்தமாகின்றானோ, எவன் ஆகாயத்தினைப்போல (புத்தியாதி) சகலவுபாதிகளும் நீங்கியவனாயிருக்கின்றானோ, அந்த நித்தியஞானவடிவ ஆத்மா யான். (௩)

यमग्न्युष्णवन्नित्यबोधस्वरूपं मनश्चक्षुरादीन्यबोधात्मकानि ।
प्रवर्तंत आश्रित्य निष्कंपमेकं स नित्योपलब्धिस्वरूपोहमात्मा ॥४॥

அக்கினியும் உஷ்ணமும்போல நித்தியபோத(சைதன்னிய) ஸ்வரூபமும், நிஷ்கம்பமும் (சலிப்பின்றியதும்) ஏகமுமான எதனை ஆசிரயித்து, அபோத(ஜட)வடிவமான மனம் சக்ஷு முதலியன பிரவர்த்திக்கின்றனவோ அந்த அசைவின்றிய நித்திய ஞானஸ்வரூபமான ஆத்மா யான். (௪)

मुखाभासको दर्पणे दृश्यमानो मुखत्वात्पृथक्त्वेन नैवास्ति वस्तु ।
चिदाभासको धीषु जीवोऽपि तद्वत्स नित्योपलब्धिस्वरूपोऽहमात्मा ॥५

கண்ணாடியில்காணப்படும் முகாபாஸம் (முகப்பிரதிபிம்பம்) பிம்பமுகமாயிருத்தலின் எப்படி (உண்மை முகத்தைவிட)வேறு வஸ்து(உண்மைப்பொருள்) அல்லவோ, அதுபோல புத்திகளில் காணப்படும் * சிதாபாஸனாகியஜீவனும், அதாவது சித்தினைப் போலத்தோன்றும் சிற்சாயைகள்யாவும் சித்துத்தன்மையால்

* சித்துப்போலி.

* ஒரே அதிஷ்டான சித்தினைவிட வேறு உண்மைப்பொருளன்று, ஆதலால் அந்த (ஒரேசித்தாகிய) நித்தியஞானவடிவ ஆத்மா யான். (௫)

यथा दर्पणाभाव आभासहानौ मुखं विद्यते कल्पनाहीनमेकम् ।
तथाधीवियोगे निराभासको यः स नित्योपलब्धिस्वरूपोऽहमात्मा ॥६॥

* எப்படிக்கண்ணாடியில்லாதபோது பிரதிபிம்பமுகம் கெடவே கற்பனையின்றிய ஒரே யதார்த்தமுகமிருக்கின்றதோ, அதுபோல புத்தி யுபாதிநசித்தபோது சிதாபாஸன்நசிக்க எந்தச் சித்தொன்றே எப்போதும்போல ஆபாஸமின்றியதாயிருக்குமோ அந்த நித்தியஞானவடிவ ஆத்மா யான். (௬)

मनश्चक्षुरादेर्वियुक्तः स्वयं यो मनश्चक्षुरादेर्मनश्चक्षुरादिः ।
मनश्चक्षुरादेरगम्यस्वरूपः स नित्योपलब्धिस्वरूपोऽहमात्मा ॥ ७ ॥

எது * மனம் சக்ஷுமுதலியவற்றினின்று இயல்பாகவிடுபட்டதாய், * மனம் சக்ஷு முதலியவற்றிற்கு மனம் சக்ஷுமு

---

* கயிற்றினை அறியாதபோது பாம்பு தோற்றுகிறது. கயிற்றையறிந்தபோது பாம்பு தோற்றுகிறதில்லை. ஆதலால் கற்பிதமாகியபாம்புக்கு அதிஷ்டானம் கயிறாம். சித்துத்தோற்றாதபோது பிரபஞ்சம்தோற்றுகிறது சித்துத்தோற்றும்போது பிரபஞ்சம்தோற்றுகிறதில்லை. ஆதலால் கற்பிதபிரபஞ்சமுழுவதற்கும் அதிஷ்டானம் சித்தாம்.

* இதனால் பிரதிபிம்பமுகத்தில் கண்ணாடியாகிய உபாதிகளால் காணப்படும் விகாரங்கள்யாவும் பிம்பமுகத்தினதாகக் காணப்பட்டு கண்ணாடிநீங்கியபோது அவ்விகாரமொன்று மில்லாததாகக்காணப்படுவதுபோல, சிதாபாசனிடத்தில் புத்தியாதிகளாற்காணப்படும் சர்வபந்தமும் ஆத்மாவினிடத்து ஆரோபிக்கப்படுகின்றன. ஞானத்தினால் மித்தையெனக்காணுதலால் அப்புத்தியாதியுபாதிக ணீங்கியவிடத்து ஆரோபிதபந்தமொழிந்து ஆத்மா என்றும்போல சுத்தமாய்ப்பந்தமில்லாததாகவே பிரகாசிக்கிறதென்னும் பொருள் சித்திக்கிறது. சித்திக்கவே ஆத்மா ஏகமாயிருக்க பந்தமோக்ஷங்களின் வியவஸ்தையும் பொருந்துகின்றது.

* இதனால் தேகமுதலியன ஆத்மாவல்லவென்பது அறிவிக்கப்பட்டது.

* மனமுதலியன வெளிப்பதார்த்தங்களையறிவன. அம்மனமுதலிய உட்பதார்த்தங்களையறிவது ஆத்மாவென்று இதனால் அறிவிக்கப்பட்டது.

தலிடனவாய், * மனம் சக்ஷு முதலியவற்றால் அறியமுடியாத சொரூபமுடையதா யிருக்கிறதோ, அந்த நித்தியஞானவடிவ ஆத்மா யான். (௭)

य एको विभाति स्वतः शुद्धचेताः प्रकाशस्वरूपोऽपि नानेव धीषु ।
शरावोदकस्थो यथा भानुरेकः स नित्योपलब्धिस्वरूपोहमात्मा ॥८॥

* எப்படி அநேகஞ்சட்டிஜலங்களில் பிரகாசிக்கும் சூரியன் ஒருவனே, அப்படி எது பற்பலபுத்திகளில் நாநாவைப்போலப் பிரகாசிக்குஞ்சொரூபமாயினும் இயல்பாகச் சுத்தசங்கற்பமுள்ளதாய் ஏகமாய்விளங்குகின்றதோ, அந்த நித்தியஞானவடிவ ஆத்மா யான். (௮)

यथाऽनेकचक्षुः प्रकाशो रविर्न क्रमेण प्रकाशीकरोति प्रकाश्यम् ।
अनेकाधियो यस्तथैकः प्रबोधः स नित्योपलब्धिस्वरूपोहमात्मा ॥९॥

எப்படி அநேக நேத்திரங்களில், பிரகாசமான சூரியன் (ஒவ்வொன்றிலும்) கிரமமாகச் சென்று பிரகாசியாது எல்லா நேத்திரங்களிலும் ஒரே காலத்தில் அதிஷ்டித்து நின்று பிரகாசியங்களை (விளக்கப்படுபவைகளை) விளக்குகின்றதோ. அது போல, எந்த ஒரே சைதன்யம் அநேக புத்திகளை ஏககாலத்தில் அதிஷ்டித்து நிற்கிறதோ, ஒவ்வொன்றிலும் கிரமமாகச் (தனித்தனியே) சென்று பிரகாசிக்கிறதில்லையோ, அந்த நித்திய ஞான வடிவ ஆத்மா யான். (௯)

बिम्बस्वत्प्रभातं यथारूपमक्षं प्रगृह्णाति नाभा (व) तमेवं विवस्वान् ।
यदाभात आभासयत्यक्षमेकः स नित्योपलब्धिस्वरूपोहमात्मा ॥१०॥

---

* மனமுதலியவற்றை இஃதறியினும், இதனைமனமுதலியன அறியமாட்டா, அறியப்படின் சேதனமாகாது ஜடமாமாகலின். சொப்பிரகாசமாகிய அதனைவிளக்கும் வேறுபிரகாசத்தின் அபேக்ஷையில்லை.

* இதனால் மனமுதலியனவநேகமாகலின் அவற்றைத் தனித்தனி விளக்கும் ஆத்மாவும் அநேகமாமென்னும் சங்கை நீக்கப்பட்டது.

எப்படிச்சூரியனால் அதிஷ்டிக்கப்பட்டரூபத்தை நேத்திரம் அறிகின்றதோ, (சூரியனால்) அதிஷ்டிக்கப்படாதபோது (இருளில்) அறிகிறதில்லையோ, அதுபோல சூரியனும் எதனையதிஷ்டித்துநின்று நேத்திரத்தினை யதிஷ்டிக்கின்றானோ அந்த ஏகமான நித்தியஞானவடிவ ஆத்மா யான். (௧0)

यथा सूर्य एकोप्स्वनेकश्चलासु स्थिरास्वप्यनन्यद्विभाव्यस्वरूपः ।
चलासु प्रभिन्नः सुधीष्वेक एव स नित्योपलब्धिस्वरूपोहमात्मा ॥११॥

எப்படிச்சூரியன் அசைவனவும் அசையாதனவுமாகிய ஜலங்களில் அநேகனாயினும் வேற்றுமையாகப்பாவிக்கப்படும் சொரூபமின்றியவனாய் ஏகனாயிருக்கின்றானோ, அதுபோல நாநாவாக வேறுபட்டுள்ள சலமு(அசைவு)டைய புத்திகளில் (நாநாவாகக் காணப்படினும்) எவன் ஒருவனாகவேயிருக்கின்றானோ, அந்த நித்தியஞானவடிவ ஆத்மா யான். (௧௧)

घनच्छन्नदृष्टिर्घनच्छन्नमर्कं यथा निष्प्रभं मन्यते चातिमूढः ।
तथा बद्धवद्भाति यो मूढदृष्टेः स नित्योपलब्धिस्वरूपोहमात्मा ॥१२॥

எப்படி மேகத்தினால் (சூரியனைக்காணாது)மறைக்கப்பட்ட பார்வையினையுடைய அதிமூடன் (தனக்குத்தெரியாதபடி)மேகத்தினால் மறைக்கப்பட்டசூரியனை ஒளியின்றியதாக மதிக்கின்றானோ, அதுபோல (அவித்தையினால்மறைக்கப்பட்டுள்ள) மூடதிருஷ்டிக்கு எது பந்தமுடையதுபோலவிளங்குகின்றதோ அந்த நித்தியஞானவடிவ ஆத்மா யான். (௧௨)

समस्तेषु वस्तुष्वनुस्यूतमेकं समस्तानि वस्तूनि यन्न स्पृशति ।
बियद्वत्सदा शुद्धमच्छस्वरूपं स नित्योपलब्धिस्वरूपोहमात्मा ॥१३॥

ஆகாயத்தினைப்போல எந்த ஒன்று எல்லாவஸ்துக்களிலும் உட்கலந்ததாயிருக்கின்றதோ, எல்லாவஸ்துக்களையும் தீண்டுகிறதில்லையோ, சுத்தமான (இராகாதிமலமின்றிய) * அமூர்த்தவடிவமாயிருக்கின்றதோ, அந்த நித்தியஞானவடிவ ஆத்மா யான். (௧௩)

* அமூர்த்தம்=வடிவமின்மை.

उपाधौ यथा भेदता सन्मणीनां तथा भेदता बुद्धिभेदेषु तेपि ।
यथा चंद्रिकाणां जले चंचलत्वं तथा चंचलत्वं तवापीह विष्णो ॥१४॥

எப்படி நல்லமணிகட்கு (சுத்தமானஸ்படிகங்கட்கு) (கருமையுடையன முதலியவற்றின்சந்நிதியாகிய) உபாதியின்பேதத்தால் (கருப்புஸ்படிகம், சிவப்புஸ்படிகமென்னும் இவைமுதலிய) வேற்றுமை தோற்றுகின்றதோ, அதுபோலப்புத்தியாதி(உபாதி)களாலாகியவேற்றுமைகளில் * விஷ்ணுவே(வியாபகமானவரே)! தமக்கும் நாநாத்துவம்தோற்றுகின்றது. (பரமார்த்தமாக அப்பேதம் இல்லைவேயில்லையென்பது பொருள்) எப்படி ஜலத்தில்(பிரதிபிம்பித்துள்ள) சந்திரர்களுக்கு (அவ்வுபாதியாலாகிய) சஞ்சலத்தன்மை (அசைவு) அவர்களிடத்திருப்பதாகக் காணப்படுகின்றதோ, அதுபோல விஷ்ணுவே! தமக்கும், இங்கே(புத்திமுதலியவற்றின்)சஞ்சலத்துவம்தோற்றுகின்றது (அச்சஞ்சலத்துவம் பாரமார்த்திகமன்று என்பதுபொருள்). (கச)

॥ इति श्रीमच्छंकराचार्यकृतहस्तामलकसंवादस्तोत्रं संपूर्णम् ॥

இவ்வாறு ஸ்ரீமத்சங்கராசாரிய ஹஸ்தாமலகசம்வாதமான

ஹஸ்தாமலகம்.

முடிந்தது.

---

* இங்குக்குருவிற்கும் ஈசுவரனுக்கும் வேற்றுமையின்மைகருதிக் குரவனை விஷ்ணுவேயென்று விளித்தார்.

॥ श्रीमहावाक्यसिद्धांतस्तोत्रः ॥

* ஸ்ரீ மஹாவாக்கியசித்தாந்தஸ்தோத்திரம்.

क्षणं ब्रह्माहमस्मीति यत्कुर्यादात्मचिंतनम् ।
तन्महापातकं हन्ति तमः सूर्योदयो यथा ॥ १ ॥

ஒருகணம் யான் பிரஹ்மமென்று எந்த ஆத்மசிந்தனத்தைச்செய்கின்றானோ, அது சூரியன் இருளைப்போக்குவதுபோல மகாபாதகங்களைக் கெடுக்கின்றது. (க)

अज्ञानाद्बुद्बुदो जातो ह्याकाशं बुद्बुदोद्भवं ।
आकाशाद्वायुरुत्पन्नो वायोस्तेजस्ततः पयः ॥
पयसः पृथिवी जाता ततोव्रीहियवादिकम् ॥ २ ॥

அஞ்ஞானத்தினின்றும் மகத்தத்துவமென்னும் குமிழியுண்டாயிற்று, அக்குமிழியினின்றும் ஆகாயமுண்டாயிற்று, ஆகாயத்தினின்றும் வாயுவுண்டாயிற்று, வாயுவினின்றும் தேயுவுண்டாயிற்று, அத்தேயுவினின்றும் ஜலமுண்டாயிற்று, ஜலத்தினின்றும் பிருதிவியுண்டாயிற்று, அதினின்றும் நெல் யவ முதலியனவுண்டாயின. (உ)

पृथिव्यप्सु पयो वह्नौ वह्निर्वायौ नभस्यसौ ।
नभोप्यव्याकृते तच्च शुद्धे शुद्धोप्यहं हरिः ॥ ३ ॥

மறுபடியும் பிருதிவி அப்புவிலும், அப்பு அக்கினியிலும், அக்கினி வாயுவிலும், இவ்வாயு ஆகாயத்திலும், ஆகாயம் அவ்வியாகிருத(அஞ்ஞான)த்திலும், அதுவும் சுத்தமாகியவஸ்துவிலும் ஒடுங்குகின்றன, சுத்தமும் ஹரியாகிய யானே. (௩)

---

* இதுவே பிரஹ்மசிந்தனிகாஸ்தோத்திரமென்னும் பெயரால் சிலபிழைகளோடு முன்னும்பின்னும் சில அதிகசுலோகங்கள்கூட்டப்பட்டு அச்சிடப்பட்டுளது. அதன்படி உரையெழுதப்படாது இப்பெயர்வைத்தே அச்சிடப்பட்டிருக்கும் அச்சுப்பிரதியையும் மகாராஷ்டிரவியாக்கியானமுள்ளகையெழுத்துப்பிரதியினையும் ஒப்பிட்டு உரையெழுதப்பட்டது.

अहं विष्णुरहं विष्णुरहं विष्णुरहं हरिः ।
कर्तृभोक्तादिकं सर्वं तदविद्योत्थमेव च ॥ ४ ॥

யான் * விஷ்ணு, யான் விஷ்ணு, யான் விஷ்ணு, யான் * ஹரி, கர்த்தா போக்தாமுதலியயாவும் அந்த(பிரசித்த)அவித்தையினின்றும் எழுந்தனவே. (௪)

अच्युतोऽहमनन्तोहं गोविन्दोहमहंहरिः ।
आनन्दोहमशेषोहमजोहममृतोस्म्यहम् ॥ ५ ॥

* அச்சுதன் யான், * அநந்தன் யான், * கோவிந்தன் யான், யான் ஹரி, ஆநந்தன் யான் அசேஷன் யான் * அஜன் யான் * அமிருதன் யான். (௫)

नित्योहं निर्विकारोहं निर्विकल्पोहमव्ययः ।
सच्चिदानन्दरूपोहं पंचकोशातिगोस्म्यहम् ॥ ६ ॥

நித்தியன் யான், நிர்விகாரன் யான், நிர்விகற்பன் யான், * அவ்வியயன் யான், சச்சிதாநந்தரூபன் யான், * பஞ்சகோசாதீதனுயுள்ளவன் யான். (௬)

अकर्ताहमभोक्ताहमसंगः परमेश्वरः ।
अहमेव परं ब्रह्म वासुदेवाख्यमव्ययम् ॥ ७ ॥

அகர்த்தா யான், அபோக்தா யான், அசங்கனுனபரமேசுவரன் யான், யானே பரப்பிரஹ்மம், வாசுதேவனென்னும் அவ்வியயன். (௭)

---

* வியாபகன். * சர்வதுக்கங்களையுங்கெடுப்பவன். * நழுவுதலில்லாதவன். * தேசகாலவஸ்துக்களால் அந்த(பரிச்சேத)மில்லாதவன்.

* எல்லாவுயிர்களையும் இரக்ஷிப்பவன். * பிறப்பில்லாதவன். * மரணமில்லாதவன்.

* அவ்வியயன் = குறைவுநிறைவில்லாதவன்

* பஞ்சகோசாதீதன் = ஐந்துகோசங்களையுங்கடந்தவன்.

इति ध्यानाश्रितो मुक्तो बद्ध एवान्यथा भवेत् ।
अन्यासावहमन्योस्मीत्युपास्तेयोन्यदेवताम्।
न स वेद नरो ब्रह्म न च देवोन्यथा पशुः ॥ ८ ॥

இத்தன்மைய தியானத்தை யாசிரயித்தவன் முக்தனாவன், ஆசிரயாவிடின் பெத்தனே யாவன். இது வேறு யான் வேறு என்று எவன் அந்நியமாகதெய்வத்தை யுபாசிக்கின்றானோ, அந்த நரன் பிரஹ்மத்தையறிகிறதில்லை ; தேவனுமல்லன், வேறுவகை யான (இரண்டுகாலுள்ள) பசுவாவன். (அ)

आत्मानं सततं ब्रह्मसंभाव्य विहरन्ति ये ।
न तेषां दुष्कृतं किंचिद्दुष्कृतोत्थानं चापदः ॥ ९ ॥

தன்னை எப்போதும் பிரஹ்மமாகப்பாவித்து எவர்கள்விய வகரிக்கின்றார்களோ, அவர்களுக்குப்பாபமும் பாபத்தினாலுண் டாம் ஆபத்தும் சிறிதுமில்லை. (கூ)

ब्रह्मैवाहं न संसारी मुक्तोहमितिभावयेत् ।
अशक्नुवन्वा भावयितुं वाक्यमेतत्सदाभजेत् ॥ १० ॥

பிரஹ்மமே யான், சம்சாரியல்லன், முக்தன் யான் என்று பாவிக்கவேண்டும். இவ்வாறு பாவிக்கச்சக்தியில்லையாயின் இவ் வாக்கியத்தை எப்போதும் பஜிக்கக்கடவன். (கய)

एकमासं ध्यानयोगाद्ब्रह्महत्यांव्यपोहति ।
संवत्सरकृताभ्यासः सिद्ध्यष्टकमवाप्नुयात् ॥
यावज्जीवं सदाभ्यासाज्जीवन्मुक्तो न संशयः ॥ ११ ॥

ஒருமாசம் தியானத்தைப்பொருந்துவதால் பிரஹ்மஹத்தி யைக்கெடுக்கின்றது. ஒருவருஷம் அப்பியாசஞ்செய்தவன் சித் திகளெட்டனையும் அடைகின்றான், ஜீவித்திருக்கும்வரையில் இடைவிடாதுபழகுவதால் ஜீவன்முக்தனாகின்றான், இதிற் சம்ச யமில்லை. (கக)

मय्येवसकलं जातं मयिसर्वं प्रतिष्ठितं ।
मयिसर्वं लयंयाति तद्ब्रह्माद्वयमस्म्यहम् ॥ १२ ॥

என்னிடத்திலேயேயாவும் பிறந்தன, என்னிடத்தில்யாவும் நிலைத்திருக்கின்றன, என்னிடத்தில்யாவும் லயமடைகின்றன' ஆதலால் அந்த அத்வயப்பிரஹ்மம் யான். (கஉ)

नाहं देहो न मे देहः केवलोहं सनातनः ।
एकमेवाद्वयंब्रह्म नेहनानास्ति किंचन ॥ १३ ॥

நான் தேகமல்லன், எனக்குத்தேகமில்லை, கேவலம் யான் ஸநாதனன் (பழமையானவன்), ஒரே அத்வயமான பிரஹ்மமுளது, இங்கே நாநாவென்பது சிறிதுமில்லை. (கங)

अयं प्रपंचो मिथ्यैव सत्यं ब्रह्माहमव्ययं ।
अत्र प्रमाणो वेदानुभवो गुरुवचस्तथा ॥ १४ ॥

இந்தப்பிரபஞ்சம் மித்தையே, சத்தியமும் அவ்வியயமு (குறைவுநிறைவில்லாதது)மாகிய பிரஹ்மம் நான், இதில் பிரமாணம் வேதாநுபவமும் அவ்வாறே குருவாக்கியமுமாம். (கச)

॥ इति श्रीपरमहंसपरिव्राजकाचार्य शंकराचार्यविरचितं श्रीमहावाक्यसिद्धांत स्तोत्रम् संपूर्णम् ॥

இவ்வாறு ஸ்ரீபரமஹம்ஸபரிவிராஜகாசாரிய ஸ்ரீசங்கராசாரியர் அருளிய

ஸ்ரீ மகாவாக்கியசித்தாந்தஸ்தோத்திரம்.

முடிந்தது.

## ॥ द्वादशपंजरिकास्तोत्रम् ॥

## துவாதசபஞ்சரிகாஸ்தோத்திரம்.

मूढ जहीहि धनागमतृष्णां कुरु सद्बुद्धिं मनसि वितृष्णाम् ।
यल्लभसे निजकर्मोपात्तं वित्तं तेन विनोदय चित्तम् ॥ १ ॥

மூடனே ! தனம்வரவேண்டுமென்னும் திருஷ்ணை (இச்சை)யைவிடு, மனதில் ஆசை விடுதலையும், நல்லபுத்தியையும்செய், தனது (வர்ணாசிரமங்களுக்குரிய) கர்மத்தினால் சம்பாதிக்கப்பட்ட எந்தத்திரவியத்தைப்பெறுகின்றாயோ, அதனால் சித்தத்தை விநோதப்படுத்து. (௧)

अर्थमनर्थं भावय नित्यं नास्ति ततः सुखलेशः सत्यम् ।
पुत्रादपि धनभाजां भीतिः सर्वत्रैषा विहिता रीतिः ॥ २ ॥

* அர்த்தம் (இஃது) * அநர்த்தம் (இஃதென்று) தினமும் பாவி, சத்தியமாக அதனைவிட சுக லேசம் (வேறு)இல்லை, தனத்தையடைபவர்களுக்கு அது புத்திரனைவிட பயமாம், இந்தரீதி (கிரமம்) எல்லாவிடத்தும் விதிக்கப்பட்டதாம். (௨)

का ते कांता कस्ते पुत्रः संसारोयमतीव विचित्रः ।
कस्य त्वं कः कुत आयातस्तत्त्वं चिंतय यदिदं भ्रांतः ॥ ३ ॥

உனது * காந்தை(மனைவி)யாவள் ? உனதுபுத்திரன்யாவன்? இச்சம்ஸாரம் மிகவும்விசித்திரமானது, நீ யாருடையவன் ? யாவன்? எங்கிருந்துவந்தாய் ? யாதொரு இந்தத் தத்துவத்தினைப் பிராந்தனாகிய நீ சிந்தி. (௩)

मा कुरु जनधनयौवनगर्वं हरति निमेषात्कालः सर्वम् ।
मायामयमिदमखिलंहित्वा ब्रह्मपदं त्वं प्रविश विदित्वा ॥ ४ ॥

---

* அர்த்தம் = விரும்பப்படுவது அது சுகம்.
* அநர்த்தம் = விரும்பப்படாதது அது துக்கம்.
* விரும்பப்படுபவள்.

(தன்வசத்தினராகிய) ஜனங்கள், தனம், யௌவனம் எபன்வற்ருல் (இவை நமக்குளவென்றெண்ணி) கர்வத்தினைச்செய்யாதே, நிமிஷத்தில் (இமையளவில்) காலன் எல்லாவற்றையும் கொண்டுபோகின்ருன், இவ்வெல்லாவற்றையும் * மாயாமயமென்றுவிட்டு, பிரஹ்மத்தை நீயறிந்துபிரவேசி. (ச)

कामं क्रोधं मोहं लोभं त्यक्त्वात्मानं भावय कोऽहम् ।
आत्मज्ञानविहीना मूढास्ते पच्यंते नरकनिगूढाः ॥ ५ ॥

காமம், குரோதம், மோகம், லோபம் இவற்றைவிட்டு ஆத்மாவை யான் யாரென்று பாவி, ஆத்மஞானமின்றிய மூடர்களாகிய அவர்கள் நரகத்தழுந்தியவர்களாய் வேகுகின்ருர்கள், (ரு)

सुरमंदिरतरुमूलनिवासः शय्या भूतलमजिनं वासः ।
सर्वपरिग्रहभोगत्यागः कस्य सुखं न करोति विरागः ॥ ६ ॥

தேவாலய மரத்தடிகள் இருப்பிடமும், தரை படுக்கையும், தோல் உடையும், சகலபரிக்கிரக(பிறரிடம்வாங்குதல்) போகங்களின் விடுபாடுமான விராகம் எவனுக்குச் சுகத்தைச்செய்யாது ? (சு)

शत्रौ मित्रे पुत्रे बंधौ मा कुरु यत्नं विग्रहसंधौ ।
भव समचित्तः सर्वत्र त्वं वांछस्यचिराद्यदिविष्णुत्वम् ॥ ७ ॥

சத்துருவினிடத்தும், மித்திரனிடத்தும், புத்திரனிடத்தும், பந்துவினிடத்தும், பகையுறவுகொண்டாடுதலில் யத்தனம்செய்யாதே. நீ விரைவில் * விஷ்ணுத்தன்மையை விரும்பின், எல்லாவிடத்தும் சமசித்தனுயிரு. (எ)

त्वयि मयि चान्यत्रैको विष्णुर्व्यर्थं कुप्यसि मय्यसहिष्णुः ।
सर्वस्मिन्नपि पश्यात्मानं सर्वत्रोत्सृज भेदज्ञानम् ॥ ८ ॥

---

* மாயையின் விகாரமான பொய்யென்று.

* வியாபகவஸ்துத்தன்மையை.

உன்னிடத்தும், என்னிடத்தும், பிறவிடத்தும், ஒரே விஷ்ணுவிருக்கின்றார். என்னிடத்துச் சகிப்பின்றியவனாய் வீணாகக் கோபிக்கின்றாய், எல்லாவற்றினும் ஆத்மாவைப்பார், எங்கும் பேதஞானத்தைவிடு. (அ)

प्राणायामं प्रत्याहारं नित्यानित्यविवेकविचारम् ।
जाप्यसमेतसमाधिविधानं कुर्ववधानं महदवधानम् ॥ ९ ॥

பிராணாயாமம், பிரத்தியாகாரம், நித்தியாநித்திய விவேகவிசாரம், ஜபத்தோடுகூடிய சமாதி * விதானம், பெருமவதானமாகிய * அவதானம் இவைகளைச்செய். (கூ)

नलिनीदलगतसलिलं तरलं तद्वज्जीवितमतिशयचपलम् ।
विद्धि व्याध्यभिमानग्रस्तं लोकं शोकहतं च समस्तम् ॥ १० ॥

தாமரையிலையிலுள்ள ஜலம் சலனமுடையதாம் அதுபோல ஜீவித்திருப்பது மிகவும் சபலமாம் (சஞ்சலமுடையதாம்); சகலவுலகமும் வியாதியபிமானங்களால் விழுங்கப்பட்டதும் சோகத்தால் அதஞ்செய்ய(புடைக்க)ப்பட்டதுமாம் என்று அறி. (கய)

का ते ऽष्टादशदेशे चिंता वातुल तव किं नास्ति नियंता ।
यस्त्वां हस्ते सुदृढा बद्धंबोधयति प्रभवादिविरुद्धम् ॥ ११ ॥

பதினெட்டுத்திசையில் உனக்குச் சிந்தையேன்? அதுலமா (ஒப்பின்றியதா)கிய உனக்கு என்னையுளது; எவன் உனக்குப் பிறப்புமுதலிய விரோதமுள்ளவற்றைக் கையில் மிகத்திடமாகக் கட்டப்பட்டகட்டாக அறிவிக்கின்றானோ அப்படிப்பட்ட நியந்தா (நியமிப்பவன்) இல்லை. (கக)

गुरुचरणांबुजनिर्भरभक्तः संसारादचिराद्भव मुक्तः ।
सेंद्रियमानसनियमादेवं द्रक्ष्यसि निजहृदयस्थं देवम् ॥ १२ ॥

---

* விதானம் = விதிப்பு. * அவதானம் = கவனிப்பு.

குருசரணாரவிந்தத்து மிகுந்தபக்தியுடையவனாய் விரைவில் சம்சாரத்தினின்றும் முக்தனாவாய். இவ்வாறு இந்திரியத்தோடு கூடிய மானஸநியமங்களையும் உனது இதயத்துள்ள தேவனையும் பார்ப்பாயாக. (கஉ)

द्वादशपंजरिकामय एष शिष्याणां कथितो ह्युपदेशः।
येषां चित्ते नैव विवेकस्ते पच्यंते नरकमनेकम् ॥ १३ ॥

துவாதசபஞ்சரிகாவடிவமான இவ்வுபதேசம் சிஷ்யர்களுக்குச்சொல்லப்பட்டது. எவர்களுடையசித்தத்தில் விவேகமேயில்லையோ அவர்கள் அநேகநரகத்தில வேகின்றனர். (கங)

॥ इति श्रीमच्छंकराचार्यविरचितं द्वादशपंजरिकास्तोत्रं संपूर्णम् ॥

இவ்வாறு ஸ்ரீமத்சங்கராசாரியஸ்வாமிகள் அருளிச்செய்த

துவாதசபஞ்சரிகாஸ்தோத்திரம்

முடிந்தது.

---

## ॥ चर्पटपंजरिकास्तोत्रप्रारंभः ॥

## *சர்ப்படபஞ்சரிகாஸ்தோத்திரம்.

दिनमपि रजनी सायंप्रातः शिशिरवसंतौ पुनरायातः।
कालः क्रीडति गच्छत्यायुस्तदपि न मुंचत्याशावायुः ॥

भज गोविंदं भज गोविंदं भज गोविंदं मूढमते।
प्राप्ते सन्निहिते मरणे नहि नहि रक्षति डुकृञ्करणे ॥ १ ॥

பகலும் இரவும் மாலையும் காலையும் பின்பனியும் வசந்தமும் மறுபடியும் வருகின்றன. காலன் விளையாடுகிறான் ஆயுள் போகின்றது, அப்படியிருந்தும் ஆசையாகியவாயு இவனை விடுகிறதில்லை.

* ஆதலால் மூடமதியே ! கோவிந்தனைப்பஜி, கோவிந்தனைப் பஜி, கோவிந்தனைப்பஜி. மரணகாலம் நெருக்கமாகப் பொருந்திய போது "कृञ् करणे=கிரு (க்ரு) என்னும் வினைப்பகுதி செய்தற்பொருளிலாம்" என்னும் வியாகரணசூத்திரம் (உன்னை) இரக்ஷியாது; இரக்ஷியாது. (க)

अग्रे वह्निः पृष्ठे भानू रात्रौ चुबुकसमर्पितजानुः ।
करतलभिक्षा तरुतलवासस्तदपि न मुंचत्याशापाशः-भज ॥ २ ॥

முன்னே அக்கினி, பின்னே சூரியன், இராத்திரியில் (உறங்காது) முழந்தாட்களில் மோவாய்க்கட்டையை வைத்தவனாய், கைத்தலத்தில் பிக்ஷையும், மரத்தடியில் வாசமுள்ளவனாயிருக்கின்றான். அப்படியிருந்தும் ஆசாபாசத்தைவிடுகிறதில்லை. ஆதலால் மூடமதியே. (உ)

यावद्वित्तोपार्जनशक्तस्तावन्निजपरिवारो रक्तः ।
पश्चाद्धावतिजर्जरदेहे वार्तां पृच्छति कोऽपि न गेहे-भज ॥ ३ ॥

எதுவரையில் பணம்சம்பாதிப்பதில் சக்தியுடையவனாயிருக்கின்றாயோ, அதுவரையில் உனது (மனைவி புத்திரன்முதலிய) * பரிவாரங்கள் பிரியமுள்ளவர்களாயிருப்பர். பின்தேகம்தளர்ச்சியடைந்தபோது வீட்டில்யாரும் உன்வார்த்தையினைக்கேட்கிறதில்லை. ஆதலால் மூடமதியே. (ங)

जटिलो मुंडी लुंचितकेशः काषायांबरबहुकृतवेषः ।
पश्यन्नपि च न पश्यति मूढ उदरनिमित्तं बहुकृतवेषः-भज ॥ ४ ॥

ஜடையுடையவனாய், அல்லது மொட்டையனாய், அல்லது மயிர்வெட்டியதலைவனாய், காஷாயவஸ்திரத்தால் வெகுவேஷந்தரித்தவனாய், மூடன் (ஆத்மாவை) பார்த்தும் பார்க்கிறதில்லை; வயிறுவளர்க்கும்பொருட்டு வெகுவேஷந்தரித்தவனாகின்றான். ஆதலால் மூடமதியே. (ச)

---

* ஒவ்வொரு சுலோகங்களின் ஈற்றிலும் ஆதலால். மூடமதியே. கோவிந்தனைப்பஜி, கோவிந்தனைப்பஜி, கோவிந்தனைப்பஜி. என்பதைச் சேர்க்க,

* பரிசாரம்=சூழவிருப்பவர்.

भगवद्गीता किंचिदधीता गंगाजललवकणिका पीता ।
सकृदपि यस्य मुरारिसमर्चा तस्य यमः किं कुरुते चर्चां-भज ॥ ५ ॥

எவனுக்குப் பகவத்கீதை சிறிதேனும் படிக்கப்பட்டதாகுமோ, கங்காஜலத்துளியின் அற்பம் பருகப்பட்டதாகுமோ, ஒருமுறையாயினும் * முராரியின் செவ்வையான அர்ச்சனைசெய்யப் பட்டதாகுமோ, அவனை இயமன் என்ன சர்ச்சை (விசாரணை) செய்வன் ? ஒன்றும்செய்யான். ஆதலால் மூடமதியே ! (ரு)

अंगं गलितं पलितं मुंडं दशनविहीनं जातं तुंडम् ।
वृद्धो याति गृहीत्वादंडं तदपि न मुंचत्याशा पिंडम्-भज ॥ ६ ॥

உடல்கரை(மெலி)ந்தது, தலை நரைத்தது, வாய் பல்லின்றியதாயிற்று, தண்டம் (தடி) பிடித்து விருத்த(கிழவ)னாகின்றான். அவ்வாறாயினும் ஆசா * பிண்டத்தைவிடுகிறதில்லை, ஆதலால் மூடமதியே ! (சு)

बालस्तावत्क्रीडासक्तस्तरुणस्तावत्तरुणीरक्तः ।
वृद्धस्तावच्चिंतामग्नः परे ब्रह्मणिकोऽपि न लग्नः-भज ॥ ७ ॥

பாலனாயுள்ளபோது விளையாட்டில் அழுந்தியவனாகின்றான், தருணனா(யௌவனனா)யுள்ளபோது யௌவனஸ்திரீகளிடத்துப் பற்றுள்ளவனாகின்றான், விருத்தனானபோது வியாகூலத்தில் மூழ்குகின்றான், ஆதலால் எவனும் பரமாகிய பிரஹ்மத்தில் பொருந்துபவனில்லை, ஆதலால்மூடமதியே ! (எ)

पुनरपि जननं पुनरपि मरणं पुनरपि जननीजठरे शयनम् ।
इह संसारे खलु दुस्तारे कृपयाऽपारे पाहि मुरारे-भज ॥ ८ ॥

மறுபடியும் பிறப்பு, மறுபடியும் இறப்பு, மறுபடியும் தாயின்வயிற்றில் இருப்பாம்; (அதனால்) முராரியே ! கரையின்றி

---

* முரனென்னும் அசுரனது பகைவனாகிய விஷ்ணுவின்.

* பிண்டம்=திரள். இது ஆசையின் மிகுதிகாட்டுகின்றது.

யதும் நிச்சயமாகக் கடத்தற்கரியதுமான இச்சம்ஸாரத்தில் என்னை இரக்ஷியும்(யென்று) மூடமதியே! (௮)

पुनरपि रजनी पुनरपि दिवसः पुनरपि पक्षः पुनरपि मासः ।
पुनरप्ययनं पुनरपि वर्षं तदपि न मुंचत्याशामर्षम्-भज ॥ ९ ॥

மறுபடியும் இரவு, மறுபடியும் பகல், மறுபடியும் பக்ஷம், மறுபடியும் மாஸம், மறுபடியும் அயனம், மறுபடியும் வருஷம் வருகின்றது. அவ்வாறிருந்தும் ஆசை கோபங்களை விடுகிறதில்லை. ஆதலால் மூடமதியே! (௯)

वयसि गते कः कामविकारः शुष्केनीरे कः कासारः ।
नष्टे द्रव्ये कः परिवारो ज्ञाते तत्त्वे कः संसारः-भज ॥ १० ॥

நீர்வற்றியபோது ஏரியேது? (அதுபோல) வயதுசென்றபோது காமவிகாரம் ஏது? திரவியநஷ்டமானபோது பரிவாரமேது? தத்துவமுணர்ந்தபோது சம்சாரமேது? ஆதலால் மூடமதியே! (௧௦)

नारीस्तनभरनाभिनिवेशं मिथ्यामायामोहावेशम् ।
एतन्मांसवसादिविकारं मनसिविचारय वारंवारम्-भज ॥ ११ ॥

(சித்தம்) நாரியின் ஸ்தனபாரத்திலும் நாபியிலும் நுழைவது மித்தையான மாயா மோகாவேசமாம். இது மாமிசம் கொழுப்பு முதலியவற்றின் விகாரமென்று மனதில் அடிக்கடி விசாரி. மூடமதியே! (௧௧)

कस्त्वं कोऽहं कुत आयतः का मे जननी को मे तातः ।
इति परिभावय सर्वमसारं विश्वं त्यक्त्वा स्वप्नविचारम्-भज ॥ १२ ॥

நீ யார்? நான் யார்? எங்கிருந்துவந்தவன்? என் தாய் யார்? என் தகப்பன் யார்? இவ்வாறு (விசாரித்துச்) சகல அசாரமான ஜகத்தையும், சொப்பனவிசாரமாகவிட்டு அலக்ஷியஞ்செய். மூடமதியே! (௧௨)

गेयं गीतानामसहस्रं ध्येयं श्रीपतिरूपमजस्रम् ।
नेयं सज्जनसंगो चित्तं देयंदीनजनाय च वित्तम्-भज ॥ १३ ॥

கீதையையும் (ஈசுவரனது) நாமம் ஆயிரத்தினையும் சொல்ல (பாராயணஞ்செய்ய) வேண்டும், ஸ்ரீபதி (ஹரி) யின்ரூபத்தை இடைவிடாது தியானிக்கவேண்டும், நல்லோரிணக்கத்தில் சித்தத்தைக் கொண்டுபோகவேண்டும், ஏழைகளுக்குத் திரவியத்தினைக் கொடுக்கவேண்டும். (இவ்வாறு) மூடமதியே! (கங)

यावज्जीवो निवसति देहे कुशलं तावत्पृच्छति गेहे ।
गतवति वायौ देहापाहे भार्या बिभ्यति तस्मिन्काये-भज ॥ १४ ॥

எதுவரையில் ஜீவன் தேகத்தில் வசிக்கின்றானோ அதுவரையில் வீட்டில் க்ஷேமத்தைக் கேட்கின்றார்கள்; வாயுநீங்கித் தேகமழியும்போது அந்தச்சரீரத்தில் * பாரியை (இவனால் போஷிக்கப்பட்டவளாகியமனைவி) பயப்படுகிறாள். ஆதலால் மூடமதியே! (கச)

सुखतः क्रियते रामाभोगः पश्चाद्धंत शरीरे रोगः ।
यद्यपि लोके मरणं शरणम् तदपि न मुंचति पापाचरणम्-भज ॥१५॥

* ஸ்திரீயின்போகம் (முதலில்) சுகமாகச் செய்யப்பட்டது, பின் ஐயோ; சரீரத்தில் ரோகம் வந்துவிட்டது, உலகத்தில்மரணமே புகலிடமாயிருப்பினும் அப்போதும் பாபத்தினையாசரித்தலை (பாபநடையை) விடுகிறதில்லை. ஆதலால் மூடமதியே! (கரு)

रथ्याकर्पटबिरचितकंथः पुण्यापुण्यविवर्जितपंथः ।
नाहं न त्वं नायं लोकस्तदपि किमर्थं क्रियते शोकः-भज ॥ १६ ॥

---

* இவனால் போஷிக்கப்பட்டு இவன்சரீரத்தில் அத்தியந்தபிரியம் வைத்திருந்த மனைவிபயப்படுகிறாளென்றால் அதன் அமங்கலத்தன்மையைப்பற்றிச் சொல்லுவதென்?

*இதனால் விஷயசுகங்கள் முதலில் சுகத்தைத்தருவனபோன்றிருந்து முடிவில் துக்கத்தினையே தருவனவாமென்பது நிதர்சனமாகக்காட்டப்பட்டது.

வீதியில்கிடக்கும் பலபீற்றற்றுணிகளால் தொடுக்கப்பட்ட கந்தையுடையவனாய், புண்ணியாபுண்ணியமொழிந்தமார்க்கமுடையவனாய், நானில்லை, நீயில்லை, இவ்வுலகில்லையென்றிருக்க அப்போதும் ஏன் * சோகத்தைச்செய்கின்றான். ஆதலால் மூடமதியே! (கசு)

कुरुते गंगासागरगमनं व्रतपरिपालनमथवा दानम् ।
ज्ञानविहीने सर्वमनेन मुक्तिर्न भवति जन्मशतेन-भज ॥ १७ ॥

கங்காசாகர கமனத்தை, விரதபரிபாலனத்தை, அல்லது தானத்தை, எல்லாவற்றையும் ஞானமின்றியபோது செய்கின்றான், இதனால் பிறப்புக்கள் நூற்றாலும் மோக்ஷமுண்டாகிறதில்லை. ஆதலால் மூடமதியே! (கஎ)

* सत्संगत्वे निस्संगत्वं निस्संगत्वे निर्मोहत्वं ।
निर्मोहत्वे निश्चलतत्वं निश्चलतत्त्वे जीवन्मुक्तिः-भज ॥ १८ ॥

சற்சங்கமுண்டானபோது சகலபற்றின் ஒழிவுண்டாகின்றது, பற்றின் ஒழிவில் மோகமின்மையுண்டாகின்றது, மோகமின்மையுண்டாகவே நிச்சலதத்துவம் வெளிப்படுகின்றது, நிச்சலதத்துவம் வெளிப்படவே ஜீவன் முக்தியாம். ஆதலால் மூடமதியே? (கஅ)

योगरतो वा भोगरतो वा संगरतो वा संगविहीनः ।
यस्य ब्रह्मणि रमते चित्तं नंदति नंदति नंदत्येव-भज ॥ १९ ॥

யோகத்தழுந்தியவனாயினும், போகத்தழுந்தியவனாயினும், பற்றுள்ள(கிருகஸ்த)வனாயினும், பற்றில்லாதவ(விரக்த)னாயினும், எவனுக்குப் பிரஹ்மத்தில் சித்தம் இரமிக்கின்றதோ, அவன்சித்தம் ஆநந்திக்கின்றது; ஆநந்திக்கின்றது; ஆநந்திக்கின்றது. ஆதலால் மூடமதியே! (கக)

* பிரியமானதொன்று பிரிந்தவிடத்துண்டாம் துயரம் சோகமெனப்படும்.

* இதுமுதல் மூன்றுசுலோகமும் அநேகம்பிரதிகளிலில்லையாயினும் இரண்டொருபிரதிகளிலிருந்தமைபற்றி ஈற்றில்சேர்க்கப்பட்டன.

मूढः कश्चन वैयाकरणो डुकृञ् करणाध्ययनधुरीणः ।
श्रीमच्छंकरभगवत्पादैर्भोधित आसीच्छो दितकरणः-भज ॥ २० ॥

டுக்ருங் கரணே யென்னும் சூத்திரத்தை உருப்போட்டுக் கொண்டிருந்த வையாகரணனாகிய ஓர் மூடன் ஸ்ரீமத்சங்கர * பகவத்பாதர்களால் சோதிக்கப்பட்ட காரணமுடையவனாய்ப் போதிக்கப்பட்டான். (உ0)

॥ इति श्रीमच्छकराचार्यविरचितं चर्पटपंजरिकास्तोत्रं संपूर्णम् ॥

இவ்வாறு ஸ்ரீமத்சங்கராசாரியசுவாமிகள் அருளிச்செய்த

சர்ப்படபஞ்சரிகாஸ்தோத்திரம்.

முடிந்தது.

---

॥ आत्मपूजाप्रारंभः ॥

## ஆத்மபூஜை.

अहमेको विशिष्टोस्मीत्येवमावाहयेच्चिवम् ।
आसनंकल्पयेत्पश्चात्स्वप्रतिष्ठात्मचिंतनम् ॥ १ ॥

யான் ஏகனாய் விசிஷ்டனாயிருக்கின்றேன் என்றிவ்வாறு சிவத்தை ஆவகனஞ்செய்க. பின்னர் சுவப்பிரதிஷ்டையாகிய ஆத்மசிந்தனமான ஆசனத்தைக் கற்பிக்க. (க)

---

* ஓர்பிரதியில் பகவத்பாதர் சிஷ்யர்களால் போதிக்கப்பட்டானெனும் பாடத்தைக்கொண்டு பதுமபாதர், தோடகர், ஹஸ்தாமலகர், ஸுபோதர், வார்த்திககாரர், நித்தியாநந்தர், ஆநந்தகிரி, திருடபக்தி, நித்தியநாதர், யோகாநந்தர், ஸுரேந்திரர், மேதாதிதி, பாரதீவம்சர், ஸுமதியென்னும் கச பெயரால் கச சுலோகம்செய்யப்பட்டதாக எழுதப்பட்டுளது. அது சரியானதாகக் காணப்படவில்லை.

पुण्यपापरजस्संगो ममनास्तीति चिंतनम् ।
पाद्यंसमर्पयेद्विद्वान्सर्वकर्मविनाशनम् ॥ २ ॥

புண்ணிய பாப ரஜஸின் (தூளின்) சங்கம் எனக்கில்லை யென்னும் சிந்தனமான சர்வகர்மங்களையும் கெடுக்கும் பாத்தியத்தினைச் சமர்ப்பிக்க வித்வான். (௨)

अनेककालविधृताऽतुलाज्ञानजलांजलिम् ।
विसृजेदात्मलिंगस्य चैवमर्घ्यं समर्पणम् ॥ ३ ॥

அநேககாலமாய்த் தாங்கியுள்ள சமமில்லா அஞ்ஞானஜலாஞ்சலியைவிடுக இவ்வாறு ஆத்மலிங்கத்திற்கு அர்க்கியம் சமர்ப்பித்தலாம். (௩)

आत्मानंदजलेनैव सर्वलोकपारिप्लुतः ।
अक्लेद्योहमिति ध्यानमभिषेचनमात्मनः ॥ ४ ॥

ஆத்மாநந்தஜலத்தினாலேயே சர்வலோகத்தையும் மூழ்கச் செய்வதும், ஒன்றினால் நனைக்கப்படாததும், யானென்னும் தியானம் ஆத்மாவின் அபிஷேகமாம். (௪)

निरावरणचैतन्यप्रकाशोऽस्मीति चिंतनम् ।
आत्मलिंगस्य सद्वस्त्रं अत्यंतं चिंतयाम्यहम् ॥ ५ ॥

நிராவரணசைதன்யப்ரகாசன் யான் என்று சிந்தித்தலாகிய ஆத்மலிங்கத்தின் சத்வஸ்திரத்தினை அத்தியந்தம் யான் சிந்திக்கின்றேன். (௫)

त्रिगुणात्माशेषलोकमालिकासूत्रमस्म्यहम् ।
इति निश्चयमेवात्र चोपवीतं परं मतम् ॥ ६ ॥

முக்குணவடிவ சகலலோகமாலிகை யான், சூத்திரம் யான் என்னும் நிச்சயமே இங்கு மேலாக மதிக்கப்பட்ட உபவீதமாம். (௬

समस्तवासनामिश्रप्रपञ्चोयं धृतो मया ।
नान्येनेत्यनुसंधानं आत्मनश्चन्दनं भवेत् ॥ ७ ॥

சகலவாசனையுங்கலந்த இப்பிரபஞ்சம் என்னால்தரிக்கப் பட்டுள்ளது. வேறொருவராலில்லையென்னும் அநுசந்தானம் ஆத்மாவுக்குச் சந்தனமாகின்றது. (எ)

रजस्सत्त्वतमोवृत्तित्यागरूपैस्तिलाक्षतैः ।
आत्मलिंगं यजेन्नित्यं जीवन्मुक्तिप्रसिद्धये ॥ ८ ॥

இரஜசு சத்துவம் தமசு என்றும் விருத்திகளைவிடுதல் வடிவ திலாக்ஷதை (எள் அரிசி)களால் ஆத்மலிங்கத்தினை ஜீவன்முக் திப்பிரசித்தியின்பொருட்டு நித்தியம் யஜிக்க. (அ)

ईश्वरो गुरुरात्मेतिचात्र भेदविवर्जितैः ।
बिल्वपत्रैर्द्वितीयैरात्मलिंगं यजेद्दिनम् ॥ ९ ॥

ஈசுரன் குரு ஆத்மாவென்னும் பேதமின்றிய அத்விதீய மான வில்வபத்திரங்களால் ஆத்மலிங்கத்தினைத்தினமும் யஜிக் கக்கடவன். (கூ)

समस्तवासनात्यागधूपं तस्य विचिंतयेत् ।
ज्योतिर्मयात्मविज्ञानं दीपं संदर्शयाम्यहम् ॥ १० ॥

சகலவாசனையும்விடுதலாகிய தூபத்தினை அதற்குச்சிந்திக் கக்கடவன். ஜோதிமய ஆத்மவிஞ்ஞானமாகிய தீபத்தினைச்செவ் வையாய்க்காட்டுகின்றேன் யான். (௧0)

आत्मलिंगस्य नैवेद्यं ब्रह्माण्डाख्यं महोदनम् ।
आत्मानन्दरसास्वादमृत्युरस्योपसेचनम् ॥ ११ ॥

பிரஹ்மாண்டமென்னும் மகோதனம் ஆத்மலிங்கத்திற்கு நைவேதநியமாம், ஆத்மாநந்தரசித்தைச் சுவைத்தலாகிய மிருத் தியு இதன் உபசேவன(வியஞ்சன)மாம். (கக)

अज्ञानोच्छिष्टकालिकाक्षालनं ज्ञानवारिणा ।
विशुद्धस्यात्मलिंगस्य हस्तप्रक्षालनं स्मरेत् ॥ १२ ॥

அஞ்ஞானமாகிய எச்சிலை ஞானஜலத்தால்கழுவுதல் ஆத்ம லிங்கத்தின் கைகழுவுதலென்று கருதுக. (கஉ)

रागादिगुणशून्यस्य शिवस्य परमात्मनः ।
सरागविषयाध्यासत्यागस्तांबूलचर्वणम् ॥ १३ ॥

இராகாதிகுணமின்றிய சிவமாகிய பரமாத்மாவிற்கு, இராகத்தோடு விஷயாத்தியாசத்தினைவிடுதல் தாம்பூலம் மெல்லுதலாம். (கங)

अज्ञानध्वांतविध्वंसप्रचण्डमतिभास्करम् ।
आत्मनो ब्रह्मताज्ञानं नीराजनमिहात्मनः ॥ १४ ॥

அஞ்ஞானவிருளைக்கெடுக்கும் பிரசண்ட சந்திர சூரியனென்னும் ஆத்மாவின் பிரஹ்மத்தன்மைஞானம் இங்கு ஆத்மாவுக்கு நீராஞ்ஜனமாம் (கற்பூரதீபமாம்). (கச)

विविधा ब्रह्मसद्दृष्टिमालिकासमलंकृतम् ।
पूर्णब्रह्मात्मिकादृष्टिपुष्पाञ्जलिमनुस्मरेत् ॥ १५ ॥

பலவித பிரஹ்ம சதிருஷ்டியாகிய மாலிகைகளால் செவ்வையாய் அலங்கரிக்கப்பட்டதாம். பூர்ணப் பிரஹ்மவடிவ திருஷ்டியாகிய புஷ்பாஞ்சலியினைக் கருதுக. (கரு)

परिभ्रमति ब्रह्माण्डसाहस्राणि महेश्वरे ।
कूटस्थाखिलरूपेस्मिन्निति ध्यानं प्रदक्षिणम् ॥ १६

நிச்சலமும் எல்லாவடிவமுமான இம்மகேசுவரனிடத்து ஆயிரக்கணக்கான பிரஹ்மாண்டங்கள் சுழலுகின்றன என்னும் தியானம் பிரதக்ஷிணமாம். (கசா)

विश्ववंद्योहमेवात्र कोवावंद्यो मदन्यतः ।
इति निश्चयमेवस्य आत्मलिंगस्य वन्दनम् ॥ १७ ॥

இங்கு எல்லோராலும் வணங்கத்தக்கவன் யானே. என்னை விட வேறுவணங்கத்தக்கவன்யாவன் என்னும் நிச்சயமே, ஆத்மலிங்கத்தின் வந்தனமாம். (கஎ)

सत्यविज्ञानमात्रोहं सन्मात्रोहं निरञ्जनः ।
सर्वातीतस्वरूपोहमित्येवं ब्रह्मतर्पणम् ॥ १८ ॥

சத்தியவிஞ்ஞானமாத்திரன்யான், சன்மாத்திரன் யான், நிரஞ்சனசர்வாதீதஸ்வரூபன்யான் என்னும் இத்தன்மையது பிரஹ்ம தர்ப்பணமாம். (கஅ)

॥ इति श्रीशंकरभगवत्पादाचार्यविरचिता आत्मपूजा संपूर्णा ॥

இவ்வாறு ஸ்ரீமத்சங்கராசாரியசுவாமிகள் அருளிச்செய்த

ஆத்மபூஜை

முடிந்தது.

॥ ब्रह्मनामावली प्रारंभः ॥

# பிரஹ்மநாமாவலி.

सकृच्छ्रवणमात्रेण ब्रह्मज्ञानं यतो भवेत् ।
ब्रह्मज्ञानावलीमाला सर्वेषां मोक्षसिद्धये ॥ १ ॥

ஒருமுறை கேட்டமாத்திரத்தினால் எதனால் பிரஹ்மஞானமுண்டாகுமோ, அந்தப்பிரஹ்மஞானாவலிமாலை எல்லோருக்கும் மோக்ஷசித்தியின்பொருட்டாம். (௧)

असंगोऽहमसंगोऽहमसंगोऽहं पुनः पुनः ।
सच्चिदानन्दरूपोहमहमेवाहमव्ययः ॥ २ ॥

அசங்கன் யான்; அசங்கன் யான்; அசங்கன் யான் மறுபடியும்; சச்சிதாநந்தரூபன் யான், யானே யான் * அவ்வியயன். (௨)

नित्यशुद्धविमुक्तोऽहं निराकारोऽहमव्ययः ।
भूमानंदस्वरूपोहमहमेवाहमव्ययः ॥ ३ ॥

நித்திய சுத்தவிமுக்தன் யான்; * நிராகாரன் யான் அவ்வியயன்; பூமா(வியாபகா)நந்தசொரூபன் யான்; யானே யான் அவ்வியயன். (௩)

नित्योऽहं निरवद्योऽहं निराकारोऽहमच्युतः ।
परमानंदरूपोऽहमहमेवाहमव्ययः ॥ ४ ॥

---

* அவ்வியயன் = குறைவு நிறைவில்லாதவன்.

* நிராகாரன், அவ்வியயன்; அச்சுதன் முதலிய சொற்கள் பலவிடங்களில் சொல்லப்படுதல் வஸ்து சிந்தனவடிவமாயிருத்தலின் புநருக்தி(கூறியது கூறுதல்) ஆகாது. நிராகாரன் = வடிவமில்லாதவன்.

நித்தியன் யான், குற்றமின்றியவன் யான், நிராகாரன் யான், * அச்சுதன், பரமாநந்தரூபன் யான், யானே யான் அவ்வியயன். (௪)

शुद्धचैतन्यरूपोऽहमात्मारामोऽहमेव च ।
अखंडानंदरूपोऽहमहमेवाहमव्ययः ॥ ५ ॥

சுத்தசைதன்னியரூபன் யான், ஆத்மாராமன் யானே, அகண்டாநந்தரூபன் யான், யானே யான் அவ்வியயன். (௫)

प्रत्यक्चैतन्यरूपोऽहं शांतोऽहं प्रकृतेः परः ।
शाश्वतानंदरूपोऽहमहमेवाहमव्ययः ॥ ६ ॥

* பிரத்தியக்சைதன்யரூபன் யான், பிரகிருதிக்கு மேலான சாந்தன்யான், * சாசுவதாநந்தரூபன் யான், யானே யான் அவ்வியயன். (௬)

तत्त्वातीतः परात्माहं मध्यातीतः परः शिवः ।
मायातीतः परं ज्योतिरहमेवाहमव्ययः ॥ ७ ॥

* தத்துவாதீதபரமாத்மா யான் * மத்தியாதீதபரசிவன், * மாயாதீதபரஞ்சோதியான், யானே யான் அவ்வியயன். (௭)

नामरूपव्यतीतोऽहं चिदाकारोऽहमच्युतः ।
सुखरूपस्वरूपोऽहमहमेवाहमव्ययः ॥ ८ ॥

---

* அச்சுதன் = தனது நிலையினின்று நழுவாதவன்.
* பிரத்தியக் = உள்.
* சாசுவதம் = என்றுமுள்ளது.
* தத்துவாதீதம் = தத்துவங்களைக்கடந்தது.
* மத்தியாதீதம் = இடைப்பட்டதோற்றமின்றியது.
* மாயாதீதம் = மாயையைக்கடந்தவன்.

நாமரூபமொழிந்தவன் யான், * சிதாகாரன் யான், அச்சுதன், சுகரூபசொரூபன்யான், யானே யான் அவ்வியயன். (அ)

मायातत्कार्यदेहादि ममनास्त्येव सर्वदा ।
स्वप्रकाशैकरूपोऽहमहमेवाहमव्ययः ॥ ९ ॥

மாயையும் அதன் காரியமானதேகாதியும் எனக்கு எப்போதும் இல்லவே இல்லை, * ஸ்வப்பிரகாசைகரூபன் யான், யானே யான் அவ்வியயன். (கூ

गुणत्रयव्यतीतोऽहं ब्रह्मादीनां च साक्ष्यहम् ।
अनंतानंदरूपोऽहमहमेवाहमव्ययः ॥ १० ॥

குணமூன்று மற்றவன் யான், பிரஹ்மாமுதலியோரின் சாக்ஷி யான், அநந்த(அபரிச்சின்ன—எல்லையற்ற) ஆநந்தரூபன் யான், யானே யான் அவ்வியயன். (கO)

अंतर्यामिस्वरूपोऽहं कूटस्थः सर्वगोऽस्म्यहम् ।
परमात्मस्वरूपोऽहमहमेवाहमव्ययः ॥ ११ ॥

* அந்தரியாமிஸ்வரூபன் யான், * கூடஸ்தன் எல்லாவற்றினுமிருப்பவன் யான், பரமாத்மசொரூபன் யான், யானே யான் அவ்வியயன். (கக)

निष्कलोऽहं निष्क्रियोऽहं सर्वात्माद्यः सनातनः ।
अपरोक्षस्वरूपोऽहमहमेवाहमव्ययः ॥ १२ ॥

* நிஷ்கலன் யான், * நிஷ்கிரியன் யான், எல்லாவற்றினும்

---

* சிதாகாரன் = ஞானசொரூபன்.
* ஸ்வப்பிரகாசைகரூபன் = தானாகவிளங்கும்ஒருவடிவினன்.
* அந்தரியாமி = உள் நின்று இயக்குவோன்.
* கூடஸ்தன் = நிர்விகாரி.
* நிஷ்கலன் = கூறுபாடில்லாதவன்.
* நிஷ்கிரியன் = செய்கையில்லாதவன்.

எவன்பழமையானவனோ அந்த * அபரோக்ஷஸ்வரூபன் யான், யானே யான் அவ்வியயன். (௧௨)

द्वंद्वादिसाक्षिरूपोऽहमचलोऽहंसनातनः ।
सर्वसाक्षिस्वरूपोऽहमहमेवाहमव्ययः ॥ १३ ॥

துவந்துவம் (இருமை) முதலியவற்றின்சாக்ஷி யான், * அசலன் யான், * சநாதனன் சர்வசாக்ஷிஸ்வரூபன் யான். யானே யான் அவ்வியயன். (௧௩)

प्रज्ञानघन एवाहं विज्ञानघन एव च ।
अकर्ताहमभोक्ताऽहमहमेवाहमव्ययः ॥ १४ ॥

* பிரஞ்ஞானகனனே யான், * விஞ்ஞானகனனே யான், * அகர்த்தா யான், * அபோக்தா யான், யானே யான் அவ்வியயன். (௧௪)

निराधारस्वरूपोऽहं सर्वाधारोऽहमेव च ।
आप्तकामस्वरूपोऽहमहमेवाहमव्ययः ॥ १५ ॥

* நிராதாரசொரூபன் யான், * சர்வாதாரனும் யானே, * ஆப்தகாமஸ்வரூபன் யான், யானே யான் அவ்வியயன். (௧௫)

---

* அபரோக்ஷன் = பிரத்தியக்ஷவடிவினன்.
* அசலன் = சலனமின்றியவன்.
* சநாதனன் = பழைமையானவன்.
* பிரஞ்ஞானகனன் = இடையீடின்றியபேரறிவினன். "ஞானத்திரளாய்நின்றபெருமான்" என்பது சம்பந்தர் திருவாக்கு.
* விஞ்ஞானகனன் = இடையின்றிய அநுபவஞானவடிவினன்.
* அகர்த்தா = செய்பவனல்லன்.
* அபோக்தா = புசிப்பவனல்லன்.
* நிராதாரசொரூபன் = தனக்கொருபற்றுக்கோடில்லாதவன்.
* சர்வாதாரன் = எல்லாவற்றிற்கும் இருப்பிடமாயுள்ளவன்.
* ஆப்தகாமன் = எல்லாக்காமங்களையும் அடைந்தவன் அதாவது நித்தியதிருப்தன்.

तापत्रय विनिर्मुक्तो देहत्रय विलक्षणः ।
अवस्थात्रयसाक्ष्यस्मि चाहमेवाहमव्ययः ॥ १६ ॥

தாபத்திரயங்களினின்றுவிடுபட்டவன் யான், தேகமூன்றற்கும் விலக்ஷணன் (வேறானவன்) யான், அவஸ்தைமூன்றற்கும் சாக்ஷியாயுள்ளவன் யானே, யான் அவ்வியயன். (௧௬)

दृग्दृश्यौ द्वौ पदार्थौ स्तः परस्परविलक्षणौ ।
दृग्ब्रह्म दृश्यं मायेति सर्ववेदांतडिंडिमः ॥ १७ ॥

பரஸ்பர(ஒன்றற்கொன்று) விலக்ஷணமான திருக்குத்திருசியமென்னும் இரண்டுபதார்த்தங்களுள, திருக்கு (எல்லாவற்றையுங்காணும் (அறிவு) பிரஹ்மம், திருசியம்(காணப்படுவது) மாயைஎன்பது வேதாந்தடிண்டிமம் (உபநிடதமுரசு.) (௧௭)

अहं साक्षीति यो विद्याद्विविच्यैवं पुनःपुनः ।
स एव मुक्तः सो विद्वानिति वेदांतडिंडिमः ॥ १८ ॥

யான் சாக்ஷியென்று அடிக்கடி எவன் இவ்வாறு வேறுபிரித்து அறிகின்றானோ, அவனேமுக்தன் அவன் ஞானியென்பது வேதாந்த டிண்டிமம். (௧௮)

घटकुड्यादिकं सर्वं मृत्तिकामात्रमेव च ।
तद्वद्ब्रह्म जगत्सर्वमिति वेदांतडिंडिमः ॥ १९ ॥

குடம் சுவர்முதலியயாவும் மிருத்திகை(மண்)மாத்திரமே, அதுபோல ஜகத்து முழுவதும் பிரஹ்மமேயென்பது வேதாந்த டிண்டிமம். (௧௯)

ब्रह्म सत्यं जगन्मिथ्या जीवो ब्रह्मैव नापरः ।
अनेन वेद्यं सच्छास्त्रमिति वेदांतडिंडिमः ॥ २० ॥

பிரஹ்மம் சத்தியம், ஜகத்துமித்தை, ஜீவன் பிரஹ்மமே வேறில்லை; இதனால் அறியத்தக்கது சத்சாஸ்திரமென்பது வேதாந்தடிண்டிமம். (உ0)

अंतर्ज्योतिर्बहिर्ज्योतिः प्रत्यग्ज्योतिः परात्परः ।
ज्योतिर्ज्योतिः स्वयंज्योतिरात्मज्योतिः शिवोऽस्म्यहम् ॥ २१ ॥

உள்ஜோதி, வெளிஜோதி, பிரத்தியக்ஜோதி, பராத்பரம் (மேலானதற்கும் மேலானது), ஜோதிஜோதி, ஸ்வயம்ஜோதி, ஆத்மஜோதி, சிவம் யான். (உக)

॥ इती श्रीमत्परमहंस परिव्राजकाचार्य श्रीमच्छंकराचार्य विरचिता ब्रह्मनामावली समाप्ता ॥

இவ்வாறு ஸ்ரீ சங்கராசாரியஸ்சுவாமிகள் அருளிச்செய்த,

பிரஹ்மநாமாவளி

முடிந்தது.

|| वाक्यवृत्तिः ||

# வாக்கியவிர்த்தி.

மங்கலாசரணம்.

सर्गस्थितिप्रलयहेतुमचिंत्यशक्तिं विश्वेश्वरं विदितविश्वमनंतमूर्तिम् ।
निर्मुक्तबंधनमपारसुखांबुराशिं श्रीवल्लभं विमलबोधघनं नमामि ॥१॥

சிருஷ்டி ஸ்திதிப் பிரளயஹேதுவும், சிந்திக்கக்கூடாத சக்தியுடையதும், விசுவேசுவரனும், எல்லாமுணர்ந்தவனும், * அநந்தமூர்த்தியும், பந்தமொழிந்தவனும், * அபாரசுகசமுத்திரமும், ஸ்ரீவல்லப(லக்ஷ்மிப்பிரிய)னுமான விமலபோத(ஞான)கனத்தினை நமஸ்கரிக்கின்றேன். (க)

यस्य प्रसादादहमेव विष्णुर्मय्येव सर्वं परिकल्पितं च ।
इत्थं विजानामि सदात्मरूपं तस्यांघ्रिपद्मं प्रणतोस्मि नित्यम् ॥२॥

எவனுடையபிரசாதத்தால், "யானேவிஷ்ணு, என்னிடத்திலே யாவும் கற்பிக்கப்படுகின்றது" என்றிவ்வாறு நன்கறிந்தேனோ, * சதாத்மவடிவமான அவனுடைய பாததாமரையினை நித்தியம்வணங்குகின்றேன். (உ)

முக்திசாதனப் பிரசினம்.

तापत्रयार्कसंतप्तः कश्चिदुद्विग्नमानसः ।
शमादिसाधनैर्युक्तः सद्गुरुं परिपृच्छति ॥ ३ ॥

தாபத்திரயசூரியனால் செவ்வையாய்த் தபிக்கப்பட்டவனும், வருந்தியசித்தமுடையவனும், சமாதிசாதனங்களோடுகூடியவனுமாகிய ஒருவன் சற்குருவைக்கேட்கின்றான். (௩)

---

* அளவற்ற வடிவினனும். * கரையற்றவின்பக்கடலும்.
* சத்தாகிய ஆத்மசொரூபமான.

अनायासेन येनास्मान्मुच्येयंभवबंधनात् ।
तन्मे संक्षिप्य भगवन्केवलं कृपया वद ॥ ४ ॥

பிரயாசையின்றி இப் * பவபந்தத்தினின்றும் எதனால்விடுபடுவேனோ, அதனைப் பகவானே கேவலம் கிருபையினால் சுருக்கிச்சொல்லியருளல் வேண்டும். (௪)

குருவினுத்தரம்.

साध्वी ते वचनव्यक्तिः प्रतिभाति वदामि ते ।
इदं तदिति विस्पष्टं सावधानमतिः शृणु ॥ ५ ॥

உன்னுடையவார்த்தையானது நலமுடையதாகத்தோற்றுகின்றது. அஃது இஃதென்று தெளிவாக உனக்குக் கூறுகின்றேன், சாவதானமனமுடையவனாய்க்கேள். (௫)

ஜீவபரைக்கியம்முக்திசாதனமெனல்.

तत्त्वमस्यादिवाक्योत्थं यज्जीवपरमात्मनोः ।
तादात्म्यविषयं ज्ञानं तदिदं मुक्तिसाधनम् ॥ ६ ॥

தத்துவமஸி முதலிய மகாவாக்கியங்களாலுண்டான ஜீவப்பிரஹ்மங்களின் * தாதாத்மியவிஷயமான ஞானம் எதுவோ அவ்விது முக்திசாதனமாம். (௬)

ஜீவபரதாதாத்மியப்பிரசினம்.

को जीवः कः परश्चात्मा तादात्म्यं वा कथं तयोः ।
तत्त्वमस्यादिवाक्यं वा कथं तत्प्रतिपादयेत् ॥ ७ ॥

ஜீவன்யாவன்? பரமாத்மாயாவன்? அவ்விருவருக்கும் தாதாத்மியம் எவ்வாறும்? தத்துவமஸியாதிவாக்கியம் அதனை எப்படிப் பிரதிபாதிக்கும்? (எ)

---

* பவபந்தம் = பிறவிக்கட்டு.

* தாதாத்மிய = ஐக்கியம்.

ஜீவபரதாதாத்மியநிருபணம்.

अत्र ब्रूमः समाधानं कोन्यो जीवस्त्वमेव हि ।
यस्त्वं पृच्छसि मां कोहं ब्रह्मैवासि न संशयः ॥ ८ ॥

இதில் சமாதானம்கூறுவோம் :—

ஜீவன் அந்நியன்யாவன்? பிரசித்தமான நீயே, யான் யாவனென்று என்னைக்கேட்கின்றாய், பிரஹ்மமாகவேயிருக்கின்றாய்; சம்சயமில்லை. (அ)

தத்துவமஸியாதிவாக்கியார்த்தப்பிரசினம்.

पदार्थमेव जानामि नाद्यापि भगवन् स्फुटम् ।
अहं ब्रह्मेति वाक्यार्थं प्रतिपद्ये कथं वद ॥ ९ ॥

பதார்த்தத்தி(சொற்பொருளி)னையே அறிகின்றேன் பகவானே! இன்னும் தெளிவாகவில்லை, யான் பிரஹ்மமென்னும் வாக்கியார்த்தத்தை எவ்வாறுணர்வேன்; அருளல்வேண்டும். (௯)

குருவினுத்தரம்.

सत्यमाह भवानत्र विगानं नैवविद्यते ।
हेतुः पदार्थबोधो हि वाक्यार्थावगतेरिह ॥ १० ॥

நீ உண்மைசொன்னாய், இங்கு (உனக்கு)விஞ்ஞானம் (அபரோக்ஷஞானம்) இல்லவேயில்லை, இங்கு வாக்கியார்த்தஞானத்திற்கு ஹேது பதார்த்தஞானமே. (௧0)

துவம்பதார்த்தம்.

अंतःकरणतद्वृत्तिसाक्षी चैतन्यविग्रहः ।
आनंदरूपः सत्यः सन् किं नात्मानं प्रपद्यसे ॥ ११ ॥

அந்தக்கரணத்திற்கும் அதன்விருத்திக்கும் சாக்ஷியான சைதன்னிய விக்கிரகமும், ஆனந்தரூபமும் சத்தியமுமாயிருக்க, ஏன் ஆத்மாவை அறிந்திலை? (௧௧)

सत्यानंदस्वरूपं धीसाक्षिणं ज्ञानविग्रहम् ।
चिंतयात्मतया नित्यं त्यक्त्वा देहादिगां धियम् ॥ १२ ॥

தேகமுதலியவற்றிலுள்ள (ஆத்ம) புத்தியினைவிட்டு, சத்தியாநந்த சொரூபமும், புத்திசாக்ஷியுமான * ஞானவிக்கிரகத்தினை நித்தியமும் ஆத்மாவாகச் சிந்திப்பாயாக. (கஉ)

रूपादिमान्यतः पिण्डस्ततो नात्मा घटादिवत् ।
वियदादिमहाभूतविकारत्वाच्च कुंभवत् ॥ १३ ॥

பிண்டம்(தேகம்) எதனால் ரூபாதிகளையுடையதோ அதனால் கடமுதலியவற்றைப்போல ஆத்மாவன்று. கும்பம்போல் ஆகாயாதிமகாபூதவிகாரமாயிருத்தலாலும் (ஆத்மாவன்று). (கங

தேகாதிகள் அநாத்மாவெனின் ஆத்மா எதுவெனும் பிரசினம்.

अनात्मायदि पिण्डोयमुक्तहेतुबलान्मतः ।
करामलकवत्साक्षादात्मानं प्रतिपादय ॥ १४ ॥

இப்பிண்டம் முற்கூறியகாரண பலத்தால் அநாத்மாவாக மதிக்கப்படுமாயின், கையில் நெல்லிக்கனிபோல் நேரே ஆத்மாவினைத்தெரிவித்தருளல்வேண்டும். (கச)

குரு (சாக்ஷி இதுவென்னும்) உத்தரம்.

घटद्रष्टा घटाद्भिन्नः सर्वथा न घटो यथा ।
देहद्रष्टा तथा देहो नाहमित्यवधारय ॥ १५ ॥

எப்படிக்குடத்தைப் பார்ப்பவன் குடத்தைவிடவேறோ, எவ்விதத்தாலும் குடமாகானோ, அதுபோலத்தேகத்தைப்பார்ப்பவனாகிய யான் தேகமல்லன் என்று நிச்சயஞ்செய்க. (கரு)

---

* அறிவுவடிவத்தினை.

एवमिंद्रियदृङ्नाहमिंद्रियाणीति निश्चिनु ।
मनोबुद्धिस्तथा प्राणो नाहमित्यवधारय ॥ १६ ॥

இவ்வாறே இந்திரியங்களைக்காணும்யான் இந்திரியங்களல்லவென்று நிச்சயஞ்செய். அவ்வாரே புத்தியும் பிராணனும் யானல்லனென்று நிச்சயஞ்செய்க. (கசா)

संघातोऽपि तथा नाहमिति दृश्यविलक्षणम् ।
द्रष्टारमनुमानेन निपुणं संप्रधारय ॥ १७ ॥

சங்காத(தத்துவக்கூட்ட)மும் அவ்வாறே யானல்லன் என்று திருசியவிலக்ஷணமான திருஷ்டாவாகிய நிபுணனை அனுமானத்தினல் செவ்வையாய் நிச்சயஞ்செய். (கஎ)

देहेंद्रियादयो भावा हानादिव्यापृतिक्षमाः ।
यस्य सन्निधिमात्रेण सोहमित्यवधारय ॥ १८ ॥

தேகேந்திரியாதிபாவங்கள் எதன் சந்நிதி மாத்திரத்தினல் கேடுமுதலிய வியாபாரசாமர்த்திய முடையனவாகின்றனவோ, அதுயான் என்று நிச்சயஞ்செய்க. (கஅ)

अनापन्नविकारः सन्नयस्कांतवदेव यः ।
बुद्ध्यादींश्चालयेत्प्रत्यक् सोहमित्यवधारय ॥ १९ ॥

எந்தப் * பிரத்தியக்கானது விகாரத்தினை யடையாததாய் * அயக் * காந்தத்தினைப் போலவே புத்திமுதலியவற்றை அசைப்பிக்கின்றதோ அதுயான் என்று நிச்சியஞ்செய்க. (கக)

अजडात्मवदाभाति यत्सन्निध्याज्जडा अपि ।
देहेंद्रियमनःप्राणाः सोहमित्यवधारय ॥ २० ॥

---

* அந்தராத்மா. * அயம் = இரும்பு. * காந்தம் = அவ்விரும்பினைவலித்திழுக்கும் ஓர் வகைக்கல்.

எதன் சாந்நித்தியத்தினால் தேகேந்திரியமனப் பிராணன்கள் ஜடமாயினும், அஜடமாகிய ஆத்மாவினைப் போலத்தோற்றுகின்றனவோ, அதுயானென்று நிச்சயஞ்செய். (உo)

अगमन्मे मनोऽन्यत्रसांप्रतं च स्थिरीकृतं ।
एवं यो वेदधीवृत्तिं सोहमित्यवधारय ॥ २१ ॥

என்மனது வேறிடத்திற்குப் போயிருந்தது, இப்போது ஸ்திரமாயிற்று என்றிவ்வாறு புத்தி விருத்தியினை எது அறிகின்றதோ, அது யான் என்று நிச்சயஞ்செய். (உக)

स्वप्नजागरिते सुप्तिं भावाभावौ धियां तथा ।
योवेत्त्यविक्रियः साक्षात्सोहमित्यवधारय ॥ २२ ॥

சொப்பன ஜாக்கிரங்களையும், சுழுத்தியினையும், புத்தியின் இருப்பு இன்மைகளையும், எது * அவிக்கிரியமாய் அறிகின்றதோ சாக்ஷாத் அதுயானென்று நிச்சயஞ்செய். (உஉ)

घटावभासको दीपो घटादन्यो यथेष्यते ।
देहावभासको देही तथाहं बोधविग्रहः ॥ २३ ॥

குடத்தை விளக்கும் தீபம் எப்படிக் குடத்தினும் வேறாக அங்கீகரிக்கப் படுகின்றதோ, அப்படித்தேகத்தை விளக்கும் தேகியாகிய யான் போதவிக்கிரகன். (உங)

पुत्रवित्तादयो भावा यस्य शेषतया प्रियाः ।
द्रष्टा सर्वप्रियतमः सोहमित्यवधारय ॥ २४ ॥

புத்திரவித்தாதி * பாவபதார்த்தங்கள் எதற்குச் சாதனமாந்தன்மையினால் பிரியமுள்ளனவாகின்றனவோ அந்த எல்லாவற்றினும் மிகுந்த பிரியமுள்ள * திருஷ்டாயான். (உச)

---

* விகாரப்படாததாய்.
* உள்ளபொருள்கள்.
* காண்பவன்.

परप्रेमास्पदतया मा न भूवमहं सदा ।
भूयासमिति यो द्रष्टा सोऽहमित्यवधारय ॥ २५ ॥

மிகுந்தபிரியத்திற்கு விஷயமாதலால் யான் இல்லாதிருக்கலாகாது; எப்போது மிருக்கவேண்டுமென்று காண்பவன் எவனோ அவன் யானென்று நிச்சயஞ்செய். (உரு)

यः साक्षिलक्षणो बोधस्त्वंपदार्थः स उच्यते ।
साक्षित्वमपि बोद्धृत्वमविकारितयाऽऽत्मनः ॥ २६ ॥

எது சாக்ஷிலக்ஷணமான போதமோ அது * துவம்பதார்த்தமெனப்படும். சாக்ஷித்தன்மையும் அறியுந்தன்மையும் ஆத்மாவுக்கு விகாரமின்றியதன்மையினுலாம். (உசு)

देहेंद्रियमनःप्राणाहंकृतिभ्यो विलक्षणः ।
प्रोज्झिताशेषषड्भावविकारस्त्वंपदाभिधः ॥ २७ ॥

தேகேந்திரியமனப் பிராணுகங்காரங்களின் வேறானதும், ஷட்பாவவிகாரம் யாவுமொழிந்ததுமான ஆத்மா, துவம் (நீயென்னும்) பதத்தால் வழங்குவதாம். (உஎ)

தத்பதார்த்தம்.

त्वमर्थमेवं निश्चित्य तदर्थं चिंतयेत्पुनः ।
अतद्व्यावृत्तिरूपेण साक्षाद्विधिमुखेन च ॥ २८ ॥

துவம் (நீ) என்பதன்பொருளை இவ்வாறு நிச்சயித்து, மறுபடியும் தத் (அது) என்பதன்பொருளைச் சிந்திக்கவேண்டும். ()

निरस्ताशेषसंसारदोषोऽस्थूलादिलक्षणः ।
अदृश्यत्वादिगुणकः पराकृततमोमलः ॥ २९ ॥

சகல சம்சாரதோஷங்களொழிந்ததும், அஸ்தூலம் (பருமனின்மை) முதலியலக்ஷணமுள்ளதும், அதிருசியத்துவ (காணப்

* நீயெனும் சொற்பொருள்.

படாததன்மை) முதலிய குணமுடையதும், தமோ (அஞ்ஞான விருளாகிய) மலமொழிந்ததும். (உகூ)

निरस्तातिशयानंदः सत्यःप्रज्ञानविग्रहः ।
सत्तास्वलक्षणः पूर्णः परमात्मेति गीयते ॥ ३० ॥

அளவற்ற ஆநந்தவடிவினதும், சத்தியப்பிரஞ்ஞானவிக்கிரகமும், சத்தையாகிய தன்னிலக்கணமுடையதும், பூர்ணமுமான பரமாத்மாவென்று சொல்லப்படுகின்றது. (ஙo)

सर्वज्ञत्वं परेशत्वं तथा संपूर्णशक्तिता ।
वेदैः समर्थ्यते यस्य तद्ब्रह्मत्येवधारय ॥ ३१ ॥

சர்வஞ்ஞத்துவம் (முற்றறிவுடைமை), பரேசத்துவம், சம்பூர்ணசக்தித்துவம் (எல்லாவாற்றலுடைமை) என்பன, எதற்கு வேதத்தினால் சமர்த்திக்கப்படுகின்றனவோ, அது பிரஹ்மமென்று நிச்சயஞ்செய். (ஙக)

यज्ज्ञानात्सर्वविज्ञानंश्रुतिषु प्रतिपादितं ।
मृदाद्यनेकदृष्टांतैस्तद्ब्रह्मेत्यवधारय ॥ ३२ ॥

* எதன் ஞானத்தால் எல்லாவற்றின் விஞ்ஞானமும் சுருதிகளில் மண்முதலிய அநேக திருஷ்டாந்தங்களால் சொல்லப்பட்டிருக்கின்றதோ, அது பிரஹ்மமென்று நிச்சஞ்செய். (ஙஉ)

यदानंत्यं प्रतिज्ञाय श्रुतिस्तत्सिद्धते जगौ ।
तत्कार्यत्वं प्रपंचस्य तद्ब्रह्मेत्यवधारय ॥ ३३ ॥

எதன் * அநந்தத்தன்மையினைப் பிரதிஞ்ஞைசெய்து சுருதியானது அது சித்திக்கும்பொருட்டுப் பிரபஞ்சத்தினை அதன்

* இவையாவும் சாந்தோக்கிய சுருதியிலுள்ளன. இவற்றை அதன் மொழிபெயர்ப்பான தத்துவமஸிமகாவாக்கிய வுபதேசமென்னும் நூலில் விரிவாய்க்காணலாம்.

* தேசகாலவஸ்துக்களால் முடிவின்றியதன்மை.

காரியமாகச் சொல்லுகின்றதோ, அது பிரஹ்மமென்று நிச்சயஞ் செய். (௩௩)

विजिज्ञास्यतया यच्च वेदांतेषु मुमुक्षुभिः ।
समर्थ्यतेतियत्नेन तद्ब्रह्मेत्यवधारय ॥ ३४ ॥

எது முமுக்ஷுக்களால் மிகுந்த முயற்சியினால் அபரோக்ஷமாயறிய விரும்பப்படுவதாக வேதாந்தங்களில் சொல்லப்படுகின்றதோ அது பிரஹ்மமென்று நிச்சயஞ்செய்க. (௩௪)

जीवात्मना प्रवेशश्च नियंतृत्वं च तान् प्रति ।
श्रूयते यस्य वेदेषु तद्ब्रह्मेत्यवधारय ॥ ३५ ॥

* எதற்கு ஜீவவடிவமாகப் பிரவேசமும், அவற்றைக்குறித்து நியந்திருத்துவமும (ஆளுந்தன்மையும்), வேதங்களில் கேட்கப்படுகின்றதோ அது பிரஹ்மமென்று நிச்சயஞ்செய். (௩௫)

कर्मणां फलदातृत्वं यस्यैव श्रूयते श्रुतौ ।
जीवानां हेतुकर्तृत्वं तद्ब्रह्मेत्यवधारय ॥ ३६ ॥

கர்மங்கட்குப் பயனைத்தருந்தன்மையும், ஜீவர்களுக்கு ஏதுவான கர்த்திருத்துவமும், எதற்குச் சுருதியில் கேட்கப்படுகின்றதோ, அது பிரஹ்மமென்று நிச்சயஞ்செய். (௩௬)

தத்துவமஸிவாக்கியார்த்தம்.

तत्त्वंपदार्थौ निर्णीतौ वाक्यार्थश्चिंत्यतेऽधुना ।
तादात्म्यमत्रवाक्यार्थस्तयोरेव पदार्थयोः ॥ ३७ ॥

* தத்துவம் பதார்த்தமிரண்டும் நிச்சயிக்கப்பட்டன. இப்போது வாக்கியார்த்தம் சிந்திக்கப்படுகின்றது. இங்கு வாக்கி

* இதற்குப் பிரமாணமான சுருதியை ஸ்ரீவிசாரசந்திரோதயம் பதினோராவது கலை உ௪௪. பக்க டிப்பணியிற் காண்க.

* அது நீ யென்னும் சொற்பொருள்.

யார்த்தம் அப்பதார்த்தங்களிரண்டற்கும் தாதாத்மியமா (ஒரு மையா)ம். (௩௭)

संसर्गो वा विशिष्टो वा वाक्यार्थो नात्र संमतः ।
अखंडैकरसत्वेन वाक्यार्थो विदुषां मतः ॥ ३८ ॥

சம்சர்க்க (சம்பந்த)மாக அல்லது விசிஷ்டமாக (விசேஷணமுடையதாக) இங்கு வாக்கியார்த்தம் (தாதாத்மியம்) சம்மதிக்கப்பட்டதன்று, அகண்டைகரஸத்தன்மை (கண்டிக்கப்படாத ஒருவடிவாந்தன்மை)யாக வாக்கியார்த்தம் ஞானிகளுக்குச் சம்மதமானதாம். (௩௮)

प्रत्यग्बोधो य आभाति सोऽद्वयानंदलक्षणां ।
अद्वयानंदरूपश्च प्रत्यग्बोधैकलक्षणाः ॥ ३९ ॥

பிரத்தியக்போதம் (உள்ஞானம்) எது விளங்குகின்றதோ அது * அத்வயாநந்தலக்ஷண(பிரஹ்ம)மாம். அத்வயாநந்த வடிவமும் பிரத்தியக்போதமான முக்கியலக்ஷணமுடையதாம். (௩௯)

इत्थमन्योन्यतादात्म्यप्रतिपत्तिर्यदाभवेत् ।
अब्रह्मत्वं त्वमर्थस्य व्यावर्तेत तदैव हि ॥ ४० ॥

இவ்வாறு எப்போது அந்நியோந்நியதாதாத்மிய (ஒன்றோடு ஒன்றற்குள்ள ஒருமை) உணர்ச்சியுண்டாகின்றதோ, அப்போது துவம்பதார்த்தத்தின் (ஜீவனது) * அப்பிரஹ்மத்தன்மை நீங்குகின்றது. அறிக. (௪௦)

तदर्थस्य च पारोक्ष्यं यद्येवं किं ततः शृणु ।
पूर्णानंदैकरूपेण प्रत्यग्बोधोवतिष्ठते ॥ ४१ ॥

தத் (அது) என்பதன்பொருளின் (பிரஹ்மத்தின்) பரோக்ஷமாந்தன்மையும் (நீங்குகின்றது). இவ்வாருகவே அதன்பின்

* இரண்டாவதற்ற ஆநந்தசொரூப.

* பிரஹ்மமாகாதென்னுந்தன்மை.

என்னையென்பதனைக் (சொல்லுகிறேன்) கேள். பூரணானந்த ஏக வடிவமாகப் பிரத்தியக்போதமானது நிலைக்கின்றது. (சுக)

வாக்கியார்த்தார்த்தஞானம் லக்ஷியஞானாதீனமாதல்.

तत्त्वमस्यादिवाक्यं च तादात्म्यप्रतिपादने ।
लक्ष्यौ तत्त्वंपदार्थौ द्वावुपादाय प्रवर्तते ॥ ४२ ॥

தத்துவமஸி (அது நீயாயிருக்கிறாய்) முதலிய வாக்கியமும் தாதாத்மியத்தினைச் சொல்லுமிடத்து, இலக்ஷியங்களான தத்துவம்பதார்த்த(கூடஸ்த பிரஹ்ம)ங்களிரண்டனையும் கொண்டு பிரவர்த்திக்கின்றது. (சஉ)

हित्वा द्वौ शबलौ वाच्यौ वाक्यं वाक्यार्थबोधने ।
यथा प्रवर्ततेऽस्माभिस्तथा व्याख्यातमादरात् ॥ ४३ ॥

* சபல (ஶபல)மான (உபாதிகளோடுகூடிய) வாச்சியங்களிரண்டையும் விட்டு வாக்கியமானது வாக்கியார்த்தத்தினை அறிவிப்பதில் எவ்வாறு பிரவர்த்திக்கின்றதோ, அத்தன்மையாக எம்மால் ஆதரவோடு வியாக்கியானஞ் செய்யப்பட்டது. (சந)

துவம்பதவாச்சியார்த்தம்.

आलंबनतया भाति योऽस्मत्प्रत्ययशब्दयोः ।
अंतःकरणसंभिन्नबोधः स त्वंपदाभिधः ॥ ४४ ॥

யான் என்னும் (பிரத்திய சப்தங்கள்) உணர்ச்சி சொல் இரண்டற்கும் ஆலம்பனமாக (பற்றுக்கோடாக) எது விளங்குகின்றதோ, அந்த * அந்தக்கரணத்தின் வேறுபட்டபோதம் (ஞானம்) துவம்பதத்தால் வழங்கப்படுவது. (சச)

---

* மாயையோடுகூடிய ஈசுவரனும், அவித்தையோடுகூடிய ஜீவனுமாகிய வாச்சியங் (சொற்பொருள்)களிரண்டனையும்.

* சேதனம்.

தத்பதவாச்சியார்த்தம்.

मायोपाधिर्जगद्योनिः सर्वज्ञत्वादिलक्षणः ।
पारोक्ष्यशबलः सत्याद्यात्मकस्तत्पदाभिधः ॥ ४५ ॥

மாயையினையுபாதியாகவுடையதும், ஜகத்யோனியும் (உலககாரணமும்) சர்வஞ்ஞத்தன்மைமுதலிய லக்ஷணமுடையதும், பரோக்ஷத்தன்மையோடுகூடியதுமான * சத்தியமுதலிய வடிவினதும் தத்பதத்தால் வழங்கப்படுவதாம். (சரு)

தத்துவமஸிவாக்கியத்தில் லக்ஷணை.

प्रत्यक्परोक्षतैकस्य सद्वितीयत्वपूर्णता ।
विरुध्यते यतस्तस्माल्लक्षणा संप्रवर्तते ॥ ४६ ॥

ஒன்றற்குப் பிரத்தியக்குப் பரோக்ஷத்தன்மையும், இரண்டாவதோடுகூடிய பூர்ணத்தன்மையும் எதனால் விரோதிக்கின்றதோ, அதனால் இலக்ஷணை செவ்வையாய்ப் பிரவர்த்திக்கின்றது. (சகா)

லக்ஷணைசொரூபம்.

मानांतरविरोधे तु मुख्यार्थस्य परिग्रहे ।
मुख्यार्थेनाविनाभूते प्रतीतिलक्षणोच्यते ॥ ४७ ॥

* முக்கியார்த்தத்தினைக் கொள்ளுமிடத்து வேறுபிரமாணவிரோதமுண்டாக * முக்கியார்த்த மின்றிப்பமையாததில் நிகழுமுணர்ச்சி இலக்ஷணை யெனப்படும். (சஎ)

तत्त्वमस्यादिवाक्येषु लक्षणा भागलक्षणा ।
सोयमित्यादिवाक्यस्थपदयोरिव नापरा ॥ ४८ ॥

* ஈசுவரசேதனம்.

* முக்கியார்த்தம் = சக்கியார்த்தம் = வாச்சியார்த்தம்.

* சக்கியார்த்த சம்பந்தமுடையதில்.

தத்துவமஸிமுதலிய வாக்கியங்களில் இலக்ஷணையானது அவன் இவன் என்னும் வாக்கியத்துள்ள இரண்டுபதங்களிற் போல் பாகத்தியாக லக்ஷணையாகக் கொள்ளப்படும்; வேறுகொள்ளப்படாது. (சஅ

திடஞானத்தின்பொருட்டுச் சிரவணாதி அப்பியாசம்.

अहं ब्रह्मेतिवाक्यार्थबोधो यावद्दृढीभवेत् ।
शमादिसहितस्तावदभ्यसेच्छ्रवणादिकम् ॥ ४९ ॥

யான் பிரஹ்மம் என்னும் வாக்கியார்த்தம் திடமாகும்வரையில் சமதமாதிகளோடுகூடிய சிரவணாதிகளை அப்பயசிக்கவேண்டும். (சகூ)

திடஞானபலம்.

श्रुत्याचार्यप्रसादेनदृढो बोधो यदा भवेत् ।
निरस्ताशेषसंसारनिदानः पुरुषस्तदा ॥ ५० ॥

சுருதியாசாரியப் பிரசாதத்தினால் போதம் எப்போது திடமாகின்றதோ அப்போது புருஷன் சர்வசம்ஸாரகாரணங்களும் நீங்கியவனாகின்றான். (ருo)

विशीर्णकार्यकरणो भूतसूक्ष्मैरनावृतः ।
विमुक्तकर्मनिगडःसद्य एव विमुच्यते ॥ ५१ ॥

தளர்(சிதை)ந்த காரியகரணமுடையவனும், பூதசூக்ஷ்மங்களால் மறைக்கப்படாதவனும், கர்மவிலங்கினின்று விடுபட்டவனுமாய் இப்பொழுதே (பந்தத்தினின்று) விடுபடுகிறான். (ருக)

प्रारब्धकर्मवेगेनजीवन्मुक्तोऽयदा भवेत् ।
किंचित्कालमनारब्धकर्मबंधस्य संक्षये ॥ ५२ ॥

* ஆரம்பிக்கப்படாத கர்மபந்தத்தின் நாசமாக எப்போது ஜீவன் முக்தனாகிறானோ, அப்போது முதல் பிராரப்தகர்மவேகத்தால் சிறிதுகாலம் நிற்கின்றான். (௫௨)

निरस्ताऽतिशयानंदं वैष्णवं परमं पदम् ।
पुनरावृत्तिरहितं कैवल्यं प्रतिपद्यते ॥ ५३ ॥

(பிராரப்தம் நசித்தபோது) எல்லையற்றவாநந்தமான வைஷ்ணவ (வியாபகமான) பரமபதமும் திரும்பிவருதலில்லாததுமான கைவல்யத்தை யடைகின்றான். (௫௩)

॥ इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्रीमच्छंकराचार्यविरचिता वाक्यवृत्तिः समाप्ता ॥

இவ்வாறு ஸ்ரீ சங்கராசாரிஸ்வாமிகள் அருளிச்செய்த

வாக்கியவிருத்தி

முடிந்தது.

॥ अद्वैतानुभूतिः ॥

# அத்வைதாநுபூதி.

*स्वर्गस्थितिप्रलयहेतुमाचिन्त्यशक्तिं विश्वेश्वरं विदितविश्वमनन्तमूर्त्तिम् ।
निर्म्मुक्तबन्धनमपारसुखाम्बुराशिं श्रीवल्लभं विमलबोधघनं नमामि ॥१॥

சிருஷ்டிஸ்திதி சங்காரகாரணரும், சிந்திக்கக்கூடாதவரும், விசுவேசுவரரும், எல்லாவற்றையுமறிபவரும், அநந்தமூர்த்தியும், பந்தமொழிந்தவரும், கரையற்ற சுகக்கடலிராசியும் விமல ஞானகனருமான இலக்ஷ்மிப்பிரியரை நமஸ்கரிக்கின்றேன். (க)

* यस्य प्रसादादहमेव विष्णुर्मय्येव सर्व्वं परिकल्पितञ्च ।
इत्थं विजानामि सदात्मरूपं तस्यांघ्रियुग्मं प्रणतोऽस्मि नित्यम् ॥ २ ॥

எவருடைய பிரசாதத்தினால் "யானே விஷ்ணு; யாவும் என்னிடத்திலேயே கற்பிதமாம்." என்றிவ்வாறு எப்போதும் ஆத்மசொரூபத்தை அறிகின்றேனோ, அவர் சரணமிரண்டையும் நித்தியம் வணங்குகின்றேன். (உ)

अहमानन्दसत्यादिलक्षणाः केवलः शिवः ।
अनानन्दादिरूपं यत्तन्नाहमचलोऽद्वयः ॥ ३ ॥

யான் ஆநந்தசத்தியாதி லக்ஷணகேவலசிவன். ஆநந்தாதி வடிவமின்றியதெதுவோ அது யானல்லன். அசல (கிரியையின்றிய) அத்வயன் யான். (ந)

अक्षिदोषाद्यथैकोपि द्वयवद्भाति चन्द्रमाः ।
एकोऽप्यात्मा तथाभाति द्वयवन्मायया मृषा ॥ ४ ॥

நேத்திரதோஷத்தினால் எப்படிச் சந்திரன் ஒன்றாயினும் இரண்டுபோற்றோற்றுகின்றதோ, அதுபோல ஆத்மா ஒன்றாயி

னும் மாயையினல் இரண்டுபோல் பொய்யாய்த் தோற்று கின்றது (௪)

अक्षिदोषविहीनानामेकएव यथा शशी ।
मायादोषविहीनानामात्मैवैकस्तथा सदा ॥ ५ ॥

நேத்திர தோஷமின்றியவர்களுக்கு எப்படி சந்திரன் ஒன்றேயாய்த் தோற்றுகிறதோ, அதுபோல மாயாதோஷமின்றியவர்களுக்கு ஆத்மா ஒன்றேயாய்த் தோற்றுகிறது. (ரு)

द्वित्वं भात्यक्षिदोषेण चन्द्रे स्वे मायया जगत् ।
द्वित्वं मृषा यथा चन्द्रे मृषा द्वैतं तथात्मनि ॥ ६ ॥

நேத்திரதோஷத்தினல் சந்திரனிடத்து இருமை தோற்றுவதுபோல மாயையினல் தன்னிடத்து ஜகத்துத்தோற்றுகின்றது. சந்திரனிடத்து எப்படி இருமைபொய்யோ, அப்படிப்போல ஆத்மாவி (தன் னிடத்துத்துவைதம் (ஜகத்து) பொய்யாம். (சா)

आत्मनः कार्य्य आकाशो विनात्मानं न सम्भवेत् ।
कार्य्यस्य पूर्णता सिद्धा किम्पुनः पूर्णतात्मनः ॥ ७ ॥

ஆத்மாவின் காரியமான ஆகாசம் ஆத்மாவினையின்றிச்சம்பவியாது. காரிய (ஆகாய)த்திற்குப்பூர்ணத்துவம் சித்தித்திருக்க: ஆத்மாவின் பூர்ணத்தன்மைக்குப் பின் சொல்லவேண்டியதென்? (எ)

कार्य्यभूतो यथाकाश एक एव न हि द्विधा ।
हेतुभूतस्तथात्माय मेक एव विजानतः ॥ ८ ॥

காரியவடிவ ஆகாயம் எப்படி ஒன்றேயோ? இருவகையன்றோ? அதுபோலக் காரணவடிவ் ஆத்மாவாகிய இஃது விசேஷமாயறிபவனுக்கு ஒன்றே. (அ)

एकोऽपि द्वयवद्भाति यथाकाश उपाधितः ।
एकोऽपि द्वयवत्पूर्णास्तथात्मायमुपाधितः ॥ ९ ॥

எப்படி ஆகாயம் ஒன்ருயிருந்தும் உபாதியினுல் இரண்டு போற்ரோற்றுகின்றதோ அதுபோலப்பூர்ணமாகிய இந்த ஆத்மா ஒன்ருயிருந்தும் உபாதியினுல் இரண்டுபோற்ரோற்றுகின்றது. ()

कारणोपाधिचैतन्यं कार्य्यासंस्थचितोधिकं ।
न घटाभ्रान्मृदाकाशः कुत्रचिन्नाधिको भवेत् ॥ १० ॥

காரணோபாதியுடைய சைதன்னியம் காரியோபாதியிலுள்ள சைதன்னியத்திலும அதிகமாகாது. மண்ணுகாயம் கடத்திலுள்ள ஆகாயத்திலுள்ள ஆகாயத்தைவிட ஓரிடத்தும் அதிகமாகாது.()

निर्गतोपाधिराकाशः एक एव यथा भवेत् ।
एक एव तथात्मायं निर्गतोपाधिकः सदा ॥ ११ ॥

உபாதிநீங்கிய ஆகாயம் எப்படி ஒன்றேயாகுமோ, அதுபோல உபாதியொழிக்க இவ்வாத்மா எப்போதும் ஒன்றேயாம். (கக)

आकाशादन्य आकाश आकाशस्य यथा नहि ।
एकत्वादात्मनोनान्या आत्मासिध्यति चात्मनः ॥ १२ ॥

ஆகாயத்திற்கு எப்படி ஆகாயத்தினும் வேறு ஆகாயமில்லையோ, அதுபோல ஆத்மாவின் ஏகத்துவத்தி(ஒருமையி)னுல் ஆத்மாவைவிட வேறு ஆத்மாசித்தியாது. (க௨)

मेघयोगाद् यथा नीरं करकाकारतामियात् ।
मायायोगात्तथैवात्मा प्रपञ्चाकारतामियात् ॥ १३ ॥

மேகத்தின் சம்பந்தத்தினுல் எப்படி ஜலம் கரகவடிவத்தன்மையினையடைகின்றதோ, அதுபோலவே மாயாசம்பந்தத்தினுல் ஆத்மா பிரபஞ்சவடிவத்தன்மையடைகின்றது. (கங)

वर्षोपल इवाभाति नीरमेवाभ्रयोगतः ।
वर्षोपलविनाशेन नीरनाशो यथा नही ॥ १४ ॥

எப்படி ஜலம் மேகத்தின் சம்பந்தத்தினால் ஆலங்கட்டி (கல்மழை) யாகின்றதோ, அதுபோல இவ்வாத்மாவே மாயையின் சம்மந்தத்தால் பிரபஞ்சம் போலத் தோற்றுகின்றது. (கச)

आत्मैवायं तथाभाति मायायोगात्प्रपञ्चवत् ।
प्रपञ्चस्य विनासेनस्वात्मनाशो न हि क्वचित् ॥ १५ ॥

எப்படி ஆலங்கட்டி நசித்தலால் ஜலத்துக்கு நாசமில்லையோ, அதுபோல பிரபஞ்சத்தின் நாசத்தினால் சுவாத்மநாசம் ஒருபோது முண்டாகாது. (கரு)

जलादन्य इवाभाति जलोत्थबुद्बुदो यथा ।
तथात्मनः पृथगिव प्रपञ्चोयमनेकधा ॥ १६ ॥

ஜலத்தினின்றெழுந்த குமிழி எப்படி ஜலத்தினும் வேறாகக் காணப்படுகிறதோ, அப்படியே இந்தப் பிரபஞ்சமும் ஆத்மாவைவிட வேறுபோல் அநேகவிதமாய்த் தோற்றுகிறது. (கசு)

यथाबुद्बुदनाशेन जलनाशो न हि क्वचित् ।
तथा प्रपञ्चनाशेन नाशः स्यादात्मनो न हि ॥ १७ ॥

எப்படிக் குமிழியின் நாசத்தினால் ஜலத்தின்நாசம் ஒருபோது முண்டாகிறதில்லையோ, அதுபோலப் பிரபஞ்சத்தின் நாசத்தினால் இவ்வாத்மாவுக்கு நாசமுண்டாகிறதில்லை. (கஎ)

अहेर्निर्लयिनीजातः शुच्यादिर्नाहिमाप्नुयात् ।
तथास्थूलादिसम्भूतःशुच्यादिर्माप्नुयादिमम् ॥ १८ ॥

பாம்புப்புற்றினின்றுண்டாகிய சுசிமுதலியன பாம்பினை யடையாததுபோல ஸ்தூலமுதலியவற்றிலுண்டாகும் சுசிமுதலியன இவ்வாத்மாவினையடையா. (கஅ)

त्यक्त्वात्वचमहिर्यद्वदात्मत्वेन न मन्यते ।
आत्मत्वेन तथा ज्ञानीत्यक्तदेहत्रयं सदा ॥ १९ ॥

உரித்தசட்டையினை எப்படிப் பாம்பானது தானாக மதிக்கிறதில்லையோ, அதுபோல ஞானியானவன் விலக்கிய தேகமூன்றையும் தானாக எப்போதும் மதிக்கிறதில்லை. (க௯)

अहिनिर्लयिनीनाशादहेर्नाशो यथा न हि ।
देहत्रयविनाशेन नात्मनाशस्तथा भवेत् ॥ २० ॥

பாம்பின்புற்றழிவால் பாம்பிற்கெப்படி நாசமில்லையோ, அதுபோல தேகமூன்றனழிவால் ஆத்மாவுக்கு நாசமுண்டாகிறதில்லை. (உ0)

तक्रादिलवणोपेतमज्ञैर्लवणवद्यथा ।
आत्मा स्थूलादिसंयुक्तो दृश्यते स्थूलकादिवत् ॥ २१ ॥

உப்போடுகூடிய மோர் முதலியன எப்படி அஞ்ஞர்களாலே உப்புப்போலவே கொள்ளப்படுகின்றனவோ, அதுபோல ஸ்தூல முதலியவற்றோடு கூடியஆத்மா ஸ்தூலமுதலியவற்றைப்போலவே காணப்படுகின்றது. (உக)

अयःकाष्ठादिकं यद्वद्वह्निवद्वह्नियोगतः ।
भाति स्थूलादिकं सर्व्वमात्मवत्स्वात्मयोगतः ॥ २२ ॥

இரும்பு கட்டை முதலியன எப்படி அக்கினியின் சம்பந்தத்தினால் அக்கினியினைப்போலக் காணப்படுகின்றனவோ, அதுபோல ஸ்தூலமுதலியயாவும் சுவாத்ம சம்பந்தத்தினால் ஆத்மாவைப் போற்றோற்றுகின்றன. (உஉ)

दाहको नैव दाह्यं स्याद्दाह्यं यद्वन्न दाहकः ।
न चात्मायमनात्मास्यादनात्मायं न चात्मकः ॥ २३ ॥

எரிப்பது எரிக்கப்படுவதாகாது எரிக்கப்படுவது எரிப்பதாகாது, அதுபோல இவ்வாத்மா (அறிவது) அநாத்மா (அறியப்படுவது) ஆகாது. இவ்வநாத்மா ஆத்மா வாகாது. (உ௩)

प्रमेयादित्रयं साक्ष्यं भानुना घटकुड्यवत् ।
येन भाति स एवाहं प्रमेयादिविलक्षणः ॥ २४ ॥

சூரியனால் குடம் சுவரென்பன விளங்குவதுபோல எதனால் பிரமே * யாதி மூன்று * சாக்ஷியமும் விளங்குகின்றதோ, அந்தப்பிரமேயாதி விலக்ஷணனேயான். (உ௪)

भानुस्फुरणतो भाति स्फुरतीव घटादिकः ।
स्फुरतीव प्रमेयादि आत्मस्फुरणतस्तथा ॥ २५ ॥

சூரியனது விளக்கத்தால் கடாதிவிளங்குகிறதுபோல் தோற்றுகிறது. அதுபோலப் பிரமேய முதலியன ஆத்மாவின் விளக்கத்தால் விளங்குகிறதுபோல் தோற்றுகின்றன. (உ௫)

पिष्टादिगुडसंपर्कात् गुडवत्प्रीतिमान्यथा ।
आत्मयोगात्प्रमेयादिरात्मवत्प्रीतिमान्भवेत् ॥ २६ ॥

மா முதலியன வெல்லத்தின் சேர்க்கையால் எப்படி வெல்லத்தினைப்போலப் பிரியமுடையனவாகின்றனவோ, அதுபோலப் பிரமேயமுதலியன ஆத்மாவின் சம்பந்தத்தினால் ஆத்மாவினைப் போலப் பிரியமுடையனவாகின்றன. (உ௬)

घटनीरान्नपिष्टानामुष्णत्वं वह्नियोगतः ।
वह्निं विना कथं तेषामुष्णत्वं स्याद्यथा क्वचित् ॥ २७ ॥

குடநீர் அந்ந மாவுகளுக்குத் தீயின்சம்பந்தத்தால் உஷ்ணத்தன்மையாம் தீயின்றி அவற்றிற்கு உஷ்ணத்தன்மை எவ்விடத்து எவ்வாறுண்டாகும்? உண்டாகாது அதுபோல (உ௭)

* ஆதியென்பதனால் கொள்ளப்படுவது பிரமிதியும் பிரமாதாவுமாம்.
* சாக்ஷியினாலறியப்படுவது.

भूतभौतिकदेहानां स्फूर्तित्वं स्वात्मयोगतः ।
विनात्मानं कथं तेषां स्फूर्तितास्यात्तथा क्वचित् ॥ २८ ॥

பூத பௌதிக தேகங்கட்குச் சுவாத்மாவின் சம்பந்தத்தால் விளக்கத்தன்மையாம். ஆத்மாவையின்றி அவற்றிற்கு விளக்கம் எவ்விடத்து எவ்வாறுண்டாகும்? ஒருபோது முண்டாகாதென்பது பொருள். (உஅ)

नानाविधेषु कुम्भेषु वसंत्येकं नभो यथा ।
नानाविधेषु देहेषु तद्वदेको नयाम्यहम् ॥ २९ ॥

நாநாவித கும்பங்களில் எப்படி ஒரே ஆகாயம் வசிக்கின்றதோ, அதுபோல நாநாவித தேகங்களில் யான் ஒருவனே வசிக்கின்றேன். (உகூ)

नानाविधत्वं कुम्भानां न यात्येव यथा नभः ।
नानाविधत्वं देहानां तद्वदेव न याम्यहम् ॥ ३० ॥

எப்படி ஆகாயம் கும்பங்களின் நாநாவிதத்தன்மையினை அடைகிறதேயில்லையோ, அதுபோல யான் தேகங்களின் நாநாவிதத்தன்மையினை அடைகிறதில்லை. (௩0)

यथा घटेषु नष्टेषु घटाकाशो न नश्यति ।
तथा देहेषु नष्टेषु नैव नश्यामि सर्व्वगः ॥ ३१ ॥

எப்படிக் கடங்கள் நஷ்டமானபோது கடாகாயம் நசிக்கிறதில்லையோ, அதுபோலத் தேகங்கள் நசித்தபோது எல்லாவற்றினுமிருக்கும் யான் நசிக்கிறதில்லை. (௩க)

उत्तमादीनि पुष्पानि वर्त्तन्तेसूत्रकेयथा ।
उत्तमाद्यास्तथा देहा वर्तन्ते मयिसर्व्वगे ॥ ३२ ॥

எப்படி நூலில் உத்தமமுதலிய புஷ்பங்களிருக்கின்றனவோ, அதுபோல எல்லாவற்றினுமிருக்கும் என்னிடத்து உத்தமாதி தேகங்களிருக்கின்றன. (௩உ)

यथा न सम्प्रशेत्सूत्रं पुष्पाणामुत्तमादिता ।
तथा नैकं सर्व्वगं मां देहानामुत्तमादिता ॥ ३३ ॥

எப்படிப்புஷ்பங்களின் உத்தமாதித்தன்மை (கோர்க்கப்படும்) நூலினைப்பரிசியாதோ, அதுபோல ஏகமும் எல்லாவற்றிலுமிருப்பவனுகியஎன்னைத் தேகாதிகளின் உத்தமாதித்தன்மை பரிசியாது. (௩௩)

पुष्पेषु तेषु नष्टेषु यद्वत् सूत्रं न नश्यति ।
तथा देहेषु नष्टेषु नैव नश्यामि सर्व्वगः ॥ ३४ ॥

அப்புஷ்பங்கள் நசித்தபோது எப்படிச் சூத்திரம் (நூல்) நசிக்கிறதில்லையோ, அதுபோலத் தேகங்கள் நசித்தபோது எல்லாவற்றிலுமிருக்கும் யான் நசிக்கிறதில்லை. (௩௪)

पर्य्यङ्करज्जुरन्ध्रेषु नानेवैकापि सूर्य्यभा ।
एकोऽप्यनेकवद्भाति यथा क्षेत्रेषु सर्व्वगः ॥ ३५ ॥

கட்டிலின் கயிற்றுத்துளைகளில் காணப்படும் சூரியனொளி ஒன்றாயிருந்தும் நாநாவைப்போலத் தோற்றுகின்றது. அதுபோல எல்லாவற்றிலுமிருக்கும் ஆத்மா ஏகமாயினும் க்ஷேத்திர (தேக)ங்களில் நாநாவைப்போலத் தோற்றுகின்றது.. (௩௫)

रज्जुरन्ध्रस्थदोषादि सूर्य्यभां न स्पृशेत्यथा ।
तथा क्षेत्रस्थदोषादि सर्व्वगं मां न स्पृशेत् ॥ ३६ ॥

கயிற்றுத் துளையின்கண்ணிருக்கும் தோஷமுதலியன சூரியனொளியைப் பரிசியாததுபோல க்ஷேத்திரங்களிலிருக்குந் தோஷமுதலியன எல்லாவற்றிலுமிருக்கும் என்னைப்பரிசியா()

तद्रज्जुरन्ध्रनाशेषु नैव नश्यति सूर्य्यभा ।
तथा क्षेत्रविनाशेषु नैव नश्यामि सर्व्वगः ॥ ३७ ॥

அக்கயிற்றுத்துளைகள் நசித்தபோது சூரியனொளி நசியாது. அதுபோல க்ஷேத்திரங்கள் நசித்தபோது எல்லாவற்றிலுமிருக்கும் யான் நசிக்கமாட்டேன். (௩எ)

देहो नाहं प्रदृश्यत्वाद्भौतिकत्वान्न चेन्द्रियं ।
प्राणो नाहमनेकत्वान्मनो नाहं चलत्वतः ॥ ३८ ॥

மிக்க திருசியமாயிருத்தலின் தேகம் யானல்லன்; பூதகாரியமாயிருத்தலால் இந்திரியமல்லன்; அநேகமாயிருத்தலின் பிராணன் யானல்லன்; சலனமுடையதாயிருத்தலின் மனம் யானல்லன். (௩அ)

बुद्धिर्नाहं विकारित्वात्तमो नाहं जडत्वतः ।
देहेन्द्रियादिकं नाहं विनाशित्वाद्घटादिवत् ॥ ३९ ॥

விகாரமுடையதாயிருத்தலின் புத்தியானல்லன், ஜடமாயிருத்தலின் தமசு (அஞ்ஞானம்) யானல்லன், தேகேந்திரியாதிகள் கடாதிகளைப்போல விநாசமுடையனவாயிருத்தலின் யானல்லன். (௩௯)

देहेन्द्रियप्राणमनोबुद्ध्यज्ञानानिभासयन् ।
अहङ्कारं तथा भामि चैतेषाञ्चाभिमानिनाम् ॥ ४० ॥

தேகேந்திரியப்பிராணமனோபுத்தியஞ்ஞானங்களையும் அகங்காரத்தினையும் விளக்கி அவ்வாறே அவற்றின் அபிமானிகளையும் விளக்குகிறேன். (௪0)

सर्व्वं जगदिदं नाहं विषयत्वादिकं धियः ।
अहं नाहं सुषुप्त्यादौ अहमःसाक्षितः सदा ॥ ४१ ॥

இவ்வெல்லா ஜகத்தும் யானல்லன்; இது புத்திக்கு விஷயமாயிருத்தலின் யானென்பதல்லன்; யான் சுழுத்திமுதலியவற்றில் யானென்பதற்கு எப்போதும் சாக்ஷியாயிருத்தலின். (௪க)

सुप्तौ यथा निर्व्विकारस्तथावस्थाद्वयेऽपिच ।
द्वयोर्मात्रादियोगेन न विकारो भवाम्यहं ॥ ४२ ॥

சுழுத்தியில் எப்படி விகாரமில்லாதவனோ, அப்படியே அவஸ்தையிரண்டிலுமாவன் இரண்டன் மாத்திராதி (விஷயாதி) சம்பந்தத்தினால் யான் விகாரமுடையவனாகேன். (சஉ)

उपाधिनीलरक्ताद्यैः स्फुटिको नैव लिप्यते ।
तथात्मा कोशजैः सर्व्वैः कामाद्यैर्नैव लिप्यते ॥ ४३ ॥

உபாதியாகிய நீலம் சிவப்பு முதலியவற்றால் எப்படி ஸ்படிகம் பற்றப்படுகிறதில்லையோ, அப்படி ஆத்மா கோசங்களினலாகிய காமமுதலிய எல்லாவற்றாலும் பற்றப்படுகிறதில்லை. (சங)

भालेन भ्राम्यमानेन भ्रमतीव यथा मही ।
अगोऽप्यात्मा विमूढेन चलतीव प्रदृश्यते ॥ ४४ ॥

தலையைச் சுழற்றுவதனால் எப்படிப் பூமிசுற்றுவதாகக் காணப்படுகின்றதோ, அதுபோல விசேஷமூடனால் அசைவின்றியதாயினும் இவனது ஆத்மா அசைவதாகக் காணப்படுகின்றது. (சச)

देहत्रयमिदं नित्यमात्मत्वेनाभिमन्यते ।
यावत्तावदयं मूढो नानायोनिषु जायते ॥ ४५ ॥

தேகத்திரயமாகிய இது நித்தியம் ஆத்மத்தன்மையாக எதுவரையில் அபிமானிக்கப்படுகின்றதோ அதுவரையில் இம்மூடன் நாநாயோனிகளில் பிறக்கிறான். (சரு)

निद्रादेहजदुःखादि जाग्रद्देहं न संस्पृशेत् ।
जाग्रद्देहजदुःखादिस्तथात्मानं न संस्पृशेत् ॥ ४६ ॥

நித்திரா (சொப்பன) தேகத்தினலாம் துக்கமுதலியன ஜாக்கிரதேகத்தினைப்பற்றா. அதுபோல ஜாக்கிரத்தினலாகிய துக்காதி ஆத்மாவைப்பரிசியா. (சசு)

जाग्रद्देहवदाभाति निद्रादेहस्तु निद्रया ।
निद्रादेहविनाशेन जाग्रद्देहो न नश्यति ॥ ४७ ॥

நித்திராதேகமோ நித்திரையினால் ஜாக்கிரதேகம்போல் தோற்றுகின்றது, நித்திராதேகநாசத்தினால் ஜாக்கிரதேகம் நசிக்கிறதில்லை. (சஎ)

तथायमात्मवद्भाति जाग्रद्देहस्तु जागरे ।
जाग्रद्देहविनाशेन नात्मा नश्यति कर्हिचित् ॥ ४८ ॥

அதுபோல இந்த ஜாக்கிரதேகம் ஜாக்கிரத்தில் ஆத்மாவைப்போல் விளங்குகிறது. அதுபோல ஜாக்கிரதேகநாசத்தினால் ஆத்மா ஒருபோதும் நசியாது. (சஅ)

हित्वायं स्वप्नगं देहं जाग्रद्देहमवेक्षते ।
जाग्रद्देहं प्रबुद्धोयं हित्वात्मानं यथा तथा ॥ ४९ ॥

எப்படி இந்தச்சொப்பனத்துள்ள தேகத்தினைவிட்டு ஜாக்கிரதேகத்தினைக் காண்கின்றானோ, அதுபோல ஜாக்கிரதேகத்தினைவிட்டு இவ்வறிஞன் ஆத்மாவினைக் காண்கின்றான். (சகூ)

स्वप्नभोगे यथैवेच्छा प्रबुद्धस्य न विद्यते ।
असत्स्वर्गादिके भोगे नैवेच्छा ज्ञानिनस्तथा ॥ ५० ॥

விழித்தவனுக்கு எப்படிச் சொப்பனபோகத்தில் இச்சையிருக்கிறதில்லையோ, அதுபோல ஞானிகளுக்கு அசத்தான சுவர்க்காதிபோகத்தில் இச்சை இல்லவே இல்லை. (ருO)

भोक्ताबर्हीयथाभोग्यः सर्पोदृश्यद्विकल्पितः ।
रूपः शिलानयोरात्मा भोक्तृभोग्यस्वरूपकः ॥ ५१ ॥

எப்படிச் சிலையானது போக்தாவாகிய மயிலும் போக்கியமான சர்ப்பமுமாக இரண்டு திருசியகற்பிதமான ரூபமாகின்

றதோ, அவ்விரண்டனையும்போல ஆத்மா போக்திருபோக்கிய சொரூபமாம். (ருக)

ज्ञस्य नास्त्येव संसारो यद्वदज्ञस्य कर्म्मिणः ।
जानतो नैव भीर्यद्वद्रज्जुसर्पमजानतः ॥ ५२ ॥

அஞ்ஞானியாகிய கர்மிக்குச் சம்சாரம் எப்படியோ அதுபோல ஞானிக்குச் சம்சாரமேயில்லை. இரஜ்ஜு சர்ப்பத்தினை யறியாதவனுக்குப் பயம் எப்படியோ அதுபோல அறிந்தவனுக்குப் பயமில்லை. (ருஉ)

सैन्धवस्य घनो यद्वज्जलयोगाज्जलो भवेत् ।
आत्मयोगात्तथा बुद्धिरात्मवद्ब्रह्मवेदिनः ॥ ५३ ॥

உப்பின் கடிப்பு எப்படி ஜலத்தின் சம்பந்தத்தால் ஜலமாகின்றதோ, அதுபோல புத்தியானது சுவாத்மயோகத்தினால் ஆத்மாவேயாகின்றது. (ருங)

तोयाशयेषु सर्व्वेषु भानुरेकोऽप्यनेकवत् ।
एकोऽप्यात्मा तथा भाति सर्व्वक्षेत्रेष्वनेकवत् ॥ ५४ ॥

ஜலாசயங்களெ (ஏரிகுளமுதலியவெ)ல்லாவற்றிலும் சூரியன் ஒருவனாயினும் அநேகன்போல் தோற்றுகிறான். அதுபோல, ஆத்மா ஒருவனாயினும் எல்லாக்ஷேத்திரங்களிலும் அநேகம்போல் காண்கிறான். (ருச)

भानोरन्य इवाभाति जलभानुर्ज्जले यथा ।
आत्मनोऽन्य इवाभासो भाति बुद्धौ तथात्मनः ॥ ५५ ॥

எப்படி ஜல (பிரதிபிம்ப) சூரியன் ஜலத்தில் (பிம்ப) சூரியனைவிட வேறுபோல் தோற்றுகின்றானோ, அதுபோல புத்தியில் ஆத்மாவின் ஆபாஸம் (சாயை) ஆத்மாவைவிடவேறுபோல் தோற்கின்றது. (ருரு)

बिम्बं विना यथा नीरे प्रतिबिम्बो भवेत्कथं ।
विनात्मानं तथा बुद्धौ चिदाभासो भवेत्कथं ॥ ५६ ॥

பிம்பமின்றி ஜலத்தில் பிரதிபிம்பம் எப்படியுண்டாகும்? உண்டாகாது. அதுபோல ஆத்மாவின்றிப் புத்தியில் சிதாபாஸம் எப்படியுண்டாம்? (ருசு)

प्रतिबिम्बचलत्वाद्या यथा बिम्बस्य कर्हिचित् ।
न भवेयुस्तथाभासकर्तृत्वद्यास्तु नात्मनः ॥ ५७ ॥

பிரதிபிம்பத்துள்ள அசைவுமுதலியன எப்படிப் பிம்பத்திற்கு ஒருபோதுமில்லேயோ, அதுபோலச் சிதாபாஸனிடத்துள்ள கர்த்திருத்துவாதி ஆத்மாவுக்கில்லை. (ருஎ)

जलेशैत्यादिकं यद्वज्जलभानुं न संस्पृशेत् ।
बुद्धेः कामादिकं तद्वच्चिदाभासं न संस्पृशेत् ॥ ५८ ॥

ஜலத்தின் குளிர்ச்சிமுதலியன எப்படி ஜலசூரியனைத் தீண்டாவோ, அதுபோலப் புத்தியின் காமமுதலியன சிதாபாஸனைத் தீண்டா. (ருஅ)

बुद्धे कर्तृत्वभोक्तृत्वदुःखित्याद्यैस्तु संयुतः ।
चिदाभासो विकारीव शरावस्थाम्बुभानुवत् ॥ ५९ ॥

புத்தியின் கர்த்திருத்தன்மை போக்திருத்தன்மை துக்கமுடைமை முதலியவற்றோடுகூடியவனுப்ச் சிதாபாஸன் சட்டிநீர்ச்சூரியன்போல விகாரியினைப்போல் தோற்றுகிறான். (ருகூ)

शरावस्थोदकेनष्टे तत्स्थभानुर्विनष्टवत् ।
बुद्धेर्लये तथा सुप्तौ नष्टवत्प्रतिभात्ययम् ॥ ६० ॥

சட்டியிலிருக்கும் நீர் நஷ்டமானபோது அதிலுள்ள சூரியன் நஷ்டமானதுபோல் தோற்றுகிறது. அதுபோலச் சுழுத்

தியில் புத்திலயமானபோது இவ்வாத்மா நஷ்டமானதுபோலத் தோற்றுகிறது. (௬0)

जलस्थार्कं जलञ्चोर्म्मिं भासयन् भाति भास्करः ।
आत्माभासं धियं बुद्धेः कर्त्तृत्वादीनयं तथा ॥ ६१ ॥

ஜலத்துள்ள (பிரதிபிம்ப) சூரியனையும், ஜலத்தினையும் அலையினையும் எப்படி (பிம்ப) சூரியன் விளக்கிக்கொண்டு விளங்குகின்றானோ, அதுபோல இவ்வாத்மா, ஆத்மாபாஸத்தினையும், புத்தியினையும், புத்தியின் கர்த்திருத்வாதிகளையும் விளக்கிக் கொண்டு விளங்குகின்றது. (௬௧)

मेघावभासको भानुर्म्मेघाच्छन्नोऽपि भासते ।
मोहावभासकस्तद्वन्मोहाच्छन्नोऽपि भात्ययं ॥ ६२ ॥

மேகத்தை விளக்கும் சூரியன் மேகத்தால் மறைக்கப்பட்டதாயினும் விளங்குகின்றது. அதுபோல, மோகத்தினை விளக்கும் இவ்வாத்மா மோகத்தால் மறைக்கப்பட்டதாயினும் விளங்குகின்றது. (௬௨)

भास्यं मेघादिकं भानुर्भासयन् प्रतिभासते ।
तथा स्थूलादिकं भास्यं भासयन् प्रतिभात्ययं ॥ ६३ ॥

எப்படிச்சூரியன் விளக்கப்படுவனவாகிய மேகமுதலியவற்றை விளக்கிக்கொண்டு தானும் செவ்வையாய் விளங்குகின்றதோ அதுபோலப் பாஸியங்களா (விளக்கப்படுவனவா)கிய ஸ்தூல முதலியவற்றை விளக்கிக்கொண்டு இவ்வாத்மா தானும் செவ்வையாய் விளங்குகின்றது. (௬௩)

सर्व्वप्रकाशको भानुः प्रकाश्यैर्नैव दूष्यते ।
सर्व्वप्रकाशको ह्यात्मा सर्व्वैस्तद्वन्न दूष्यते ॥ ६४ ॥

எல்லாவற்றையும் விளக்கும் சூரியன் விளக்கப்படுவனவற்றால் தூஷிக்கப்படுகிறதேயில்லை. அதுபோல (சூரியன்முதலிய)

எல்லாவற்றையும் விளக்கும் ஆத்மா விளக்கப்படுவனவாகிய எல்லாவற்றாலும் தூஷிக்கப்படுகிறதில்லை. (௬௪)

मुकुरस्थं मुखं यद्वन्मुखवत्पृथते मृषा ।
मुकुरस्थस्य नाशेन मुखनाशो भवेत्कथं ॥ ६५ ॥

எப்படிக்கண்ணாடியிலுள்ள (பிரதிபிம்ப)முகம் (பிம்ப) முகம்போல் பொய்யாய்ப் பிரகாசிக்கின்றது. கண்ணாடியிலுள்ள (பிரதிபிம்ப)முகத்தின் நாசத்தினால் முகநாசம் எவ்வாறுண்டாம்? உண்டாகாது. அதுபோலப், (௬௫)

बुद्धिस्थाभासकस्तद्वदात्मवत् पृथते मृषा ।
बुद्धिस्थाभासनाशेन नाशो नैवात्मनः क्वचित् ॥ ६६ ॥

புத்தியினிடத்துள்ள ஆபாஸன் ஆத்மாவினைப்போலப் பொய்யாகத்தோற்றுகின்றது. புத்தியினிடத்துள்ள ஆபாஸனது நாசத்தினால் ஆத்மாவிற்கு எவ்விடத்தும் நாசமில்லை. (௬௬)

ताम्रकल्पितदेवादिस्ताम्रादन्य इव स्फुरेत् ।
पतिभार्यादिरूपेण तथात्मोत्थमिदं जगत् ॥ ६७ ॥

தாம்பிரத்திற் கற்பிக்கப்பட்ட தெய்வமுதலியன எப்படித் தாம்பிரத்தினும் வேறுபோல் விளங்குகின்றனவோ, அதுபோல ஆத்மாவினிடத்து எழும்பிய (கற்பிக்கப்பட்ட) இவ்வுலகம் பதி பாரியை முதலியவடிவாக ஆத்மாவைவிட வேறாக விளங்குகின்றது. (௬௭)

ईशजीवादिवद्भाति यथैकमपि ताम्रकं ।
एकोऽप्यात्मा तथैवायमीशजीवादिवन्मृषा ॥ ६८ ॥

எப்படித்தாம்பிரம் ஒன்றாயிருந்தும் ஈசஜீவாதி (பிரதிமை)களைப்போலத் தோற்றுகின்றதோ, அதுபோல இந்த ஆத்மா ஒன்றாயிருந்தும் ஈசஜீவாதிகளைப்போலப் பொய்யாய்த் தோற்றுகின்றது. (௬அ

यथैशत्वादिनाशेन ताम्रनाशो न विद्यते ।
तथैशत्वादिनाशेन नाशो नैवात्मनः सदा ॥ ६९ ॥

எப்படி (விக்கிரகங்களிலிருந்த) ஈசத்தன்மை முதலியவற்றின் நாசத்தால் தாம்பிரத்திற்கு நாசமில்லையோ, அதுபோல ஈசத்தன்மை முதலியவற்றின் நாசத்தால் ஆத்மாவிற்கு எப்போதுமே நாசமில்லை. (௬௯)

अध्यस्तोरज्जुसर्पोऽयं सत्यवद्रज्जुसत्तया ।
तथा जगदिदं भाति सत्यवत्स्वात्मसत्तया ॥ ७० ॥

கற்பிதமான இவ்விரஜ்ஜுசர்ப்பம் இரஜ்ஜுவின் சத்தையினால் சத்தியம்போல் தோன்றுகிறது. அதுபோலக் கற்பிதமான இந்த ஜகத்து சுவாத்மசத்தையினால் சத்தியம்போல் விளங்குகிறது. (௭௦)

अध्यस्तसर्पाभावेन रज्जुरेवावशिष्यते ।
तथा जगदभावेन सदात्मैवावशिष्यते ॥ ७१ ॥

கற்பிதமான பாம்பின்மையால் இரஜ்ஜுவே மிஞ்சுகின்றது. அதுபோலக் கற்பிதமான ஜகத்தின்மையால் எப்போதும் ஆத்மாவே மிஞ்சுகின்றது. (௭௧)

स्फटिके रक्ततायद्वदुपाधेर्नीलताम्बरे ।
यथा जगदिदं भाति तथा सत्यमिवाद्वये ॥ ७२ ॥

ஸ்படிகத்தில் இரக்தத்தன்மை எப்படியோ, ஆகாயத்தில் உபாதியின் நீலத்தன்மை எப்படியோ, அப்படி அத்வயமாகிய ஆத்மாவில் இந்த ஜகத்து சத்தியம்போல் தோற்றுகின்றது. (௭௨)

स्फटिके रक्तता मिथ्या मृषा खेनीलता यथा ।
तथा जगदिदं मिथ्या त्वेकस्मिन्नद्वये मयि ॥ ७३ ॥

எப்படி ஸ்படிகத்தில் இரக்தத்தன்மைபொய்யோ, எப்படி ஆகாயத்தில் நீலத்தன்மைபொய்யோ, அதுபோல ஒரே அத்வயமாகிய என்னிடத்து இவ்வுலகம் மித்தையாம். (எ௩)

जीवेश्वरादिभावेन भेदं पश्यति मूढधीः ।
निर्भेदनिर्विशेषेऽस्मिन्कथं भेदो भवेद्ध्रुवम् ॥ ७४ ॥

மூடபுத்தியானவன் ஜீவேசுவரன்முதலிய தன்மையாகப் பேதத்தைக்காண்கின்றான். பேதமின்றிய நிர்விசேஷமான இவ்வாத்மாவில் இப்பேதம் எப்படியுண்டாகும்? (எச)

लिङ्गस्य धारणादेव शिवोऽयं जीवतां व्रजेत् ।
लिङ्गनाशे शिवस्यास्या जीवता वेशता कुतः ॥ ७५ ॥

இலிங்க (சூக்ஷ்மசரீர)த்தினைத் தரித்தலாலேயே இச்சிவம் ஜீவத்தன்மையினையடைகின்றது. இலிங்கம் (ஞானத்தினால் மூலத்தோடு) நசித்தபோது இச்சிவத்திற்கு ஜீவத்தன்மையாவது ஈசத்தன்மையாவது ஏது? (இல்லையென்றபடி.) (எரு)

शिव एव सदा जीवो जीव एव सदाशिवः ।
वेत्त्यैक्यमनयोर्यस्तु स आत्मज्ञो न चेतरः ॥ ७६ ॥

சிவமே சதா (எப்போதும்) ஜீவன். ஜீவனே சதாசிவன். இவ்விரண்டன் ஐக்கியத்தை எவன் அறிகின்றானோ அவன் ஆத்மாவையுணர்ந்தவன். அந்நியன் (அஞ்ஞானி) அல்லன். (எ௬)

क्षीरयोगाद्यथा नीरं क्षीरवद्दृश्यते तथा ।
आत्मयोगादनात्मायं आत्मवद्दृश्यते मृषा ॥ ७७ ॥

பாலின் சேர்க்கையால் எப்படி நீர் பாலினைப்போலக் காணப்படுகின்றதோ, அப்படி ஆத்மசம்பந்தத்தினால் இவ்வநாத்மா ஆத்மாவினைப்போலக் காணப்படுகின்றது. (எஎ)

नीरात्क्षीरं पृथक्कृत्यहंसो भवति नान्यथा ।
देहात्मानौ पृथक्कृत्य प्रतिर्भवति नान्यथा ॥ ७८ ॥

நீரினின்றும் பாலைப்பிரித்து அந்நமாகின்றது; வேறுவகை யாலில்லை. அதுபோல ஸ்தூலமுதலியவற்றினின்றும் தன்னை வேறுபிரித்து எதியா(முக்தனா)கின்றான்; வேறுவகையாலில்லை. ()

क्षीरनीरविवेकज्ञो हंस एव न चापरः ।
आत्मानात्मविवेकज्ञो प्रतिरेव न चेतरः ॥ ७९ ॥

பால்நீர்களின் பிரிவினையறிவது அந்நமே; வேறன்று. அது போல ஆத்மாநாத்ம விவேகத்தினையுணர்பவன் எதியே; அந்நி யனல்லன். (எகூ)

अध्यस्तचोरजस्थाणोर्विकारं स्यान्नहिक्वचित् ।
नात्मनो निर्विकारस्य विकारो विश्वजस्तथा ॥ ८० ॥

அத்தியஸ்த (கற்பித) திருடனாலாகிய விகாரம் எப்படி ஸ்தம்பத்திற்கு ஓரிடத்துமில்லையோ, அதுபோல பிரபஞ்சத்தி னாலாம் விகாரம் நிர்விகாரமாகிய ஆத்மாவிற்கில்லை. (அ0)

ज्ञाते स्थाणौ कुतश्चोरश्चोराभावे भयं कुतः ।
ज्ञाते स्वस्मिन्कुतो विश्वं विश्वाभावे कुतो भयम् ॥ ८१ ॥

ஸ்தாணு அறியப்பட்டபோது திருடன் ஏது? திருடனில் லாததாகவே பயம் ஏது? இவ்வாத்மா அறியப்பட்டபோது உல கமேது? உலகமில்லாதபோது பயமேது? (அக)

गुणमूर्तित्रयं भाति परस्परविलक्षणं ।
सत्वादिलक्षणो यस्मिन् स एवाहं निरंशकः ॥ ॥ ८२ ॥

எந்தச்சத்தியாதிலக்ஷண ஆத்மாவில் பரஸ்பரவிலக்ஷமான (ஒன்றற்கொன்று வேற்றுமையுள்ள) குணமூர்த்தி மூன்றும் (பிரஹ்மவிஷ்ணுருத்திரர்) விளங்குகிறதோ, அதுவே நிரம்ச மாகிய யான். (அஉ)

देहत्रयमिदं भाति यस्मिन्ब्रह्मणि सत्यवत् ।
तदेवाहं परं ब्रह्म देहत्रयविलक्षणम् ॥ ८३ ॥

எந்தப்பிரஹ்மத்தில் இத்தேகமூன்றும் சத்தியம்போல் தோன்றுகிறதோ அந்தத் தேகமூன்றினும் வேறான பரப்பிரஹ்மமே யான். (அங)

जाग्रदादित्रयं यस्मिन् प्रत्यगात्मनि सत्यवत् ।
स एवाहं परं साक्षाज्जाग्रदादिविलक्षणः ॥ ८४ ॥

எந்தப் பிரத்தியகாத்மாவில் ஜாக்கிரமுதலிய மூன்றும் சத்தியம்போல் தோற்றுகின்றதோ, அந்த ஜாக்கிரமுதலியவற்றின் வேறான பிரத்தியகாத்மாவே யான். (அச)

विश्वादिकं त्रयं यस्मिन् परमात्मनि संस्थितं ।
स एव परमात्माहं विश्वादिकविलक्षणः ॥ ८५ ॥

எந்தப் பரமாத்மாவினிடத்து விசுவன்முதல் மூன்றும் சத்தியம்போல் தோற்றுகிறதோ, அந்த விசுவன் முதலியோரின் வேறுபட்ட பரமாத்மாவே யான். (அரு)

विराडादित्रयं भाति यस्मिन्ब्रह्मणि नश्वरं ।
स एव सच्चिदानन्दलक्षणोऽहं स्वयंप्रभः ॥ ८६ ॥

எந்தச் சுவாத்மாவில் நச்வரமான விராட்டுமுதலிய மூன்றும் சத்தியம்போல் தோற்றுகின்றதோ, அந்தச் சச்சிதாநந்த லக்ஷண ஸ்வயம்பிரகாசமான ஆத்மாவே யான். (அசா)

॥ इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्रीशंकराचार्येण विरचितेयं

अद्वैतानभूतिः समाप्ता ॥

இவ்வாறு ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள் அருளிச்செய்த

அத்வைதாநுபூதி

முடிந்தது.

உ

ஓ: தத்ஸத்பிரஹ்மணேநம:

॥ तत्त्वोपदेशः ॥

# தத்துவோபதேசம்.

ஸ்ரீ சங்கரர்வார்த்தை :—

तत्त्वं पदार्थशुद्ध्यर्थं गुरुः शिष्यं वचोऽब्रवीत् ।
वाक्ये तत्त्वमसीत्यत्र त्वं पदार्थं विवेचय ॥ १ ॥

* தத்துவம் பதார்த்த சுத்தியின் பொருட்டுக் குருவானவர் சிஷ்யனை நோக்கி வார்த்தை சொல்லலாயினர்:— தத்துவமஸியென்னும் வாக்கியத்தில் இங்குத் துவம் பதார்த்தத்தினை விசாரி. (௧)

न त्वं देहोऽसि दृश्यत्वाद्रूपजात्यादिमत्त्वतः ।
भौतिकत्वादशुद्धत्वादनित्यत्वात्तथैव च ॥ २ ॥

திருசியமா(காணப்படுவதா)யிருத்தலாலும், ரூபஜாதியுடையதாயிருத்தலாலும், பூதகாரியமாயிருத்தலாலும், அசுத்தமாயிருத்தலாலும், அவ்வாறே அநித்தமாயிருத்தலாலும், தேகம் நீயல்லை. (௨)

अदृश्यो रूपहीनस्त्वं जातिहीनोऽप्यभौतिकः ।
शुद्धनित्योऽसि दृग्रूपो घटो यद्वन्न दृग्भवेत् ॥ ३ ॥

---

* தத்துவமஸி (அது நீயாயிருக்கிறாய்) என்பது சாந்தோக்கிய சுருதியிலுள்ள மகாவாக்கியம். அதிலுள்ள தத்துவம் (அது நீ) யென்னும் இரண்டு சொற்பொருள்களது சோதனையின்பொருட்டு இங்குள்ள தத் என்னும் பதம் "ॐ तत्सदिति निर्देशो ब्रह्मणस्त्रिविधस्मृतः । பிரஹ்மத்திற்கு ஓம்தத்ஸத் என்று மூன்றுவிதமான பெயர் கருதப்படுகின்றது" என்னும் பகவத்வசனத்தால் மங்கலவாசகமாதலால் மிருதங்கத்தொனிபோல் இந்நூலாரம்பத்திற்கும் மங்கலமாம்.

கடம் திருக்கு (காண்பவன்) ஆகாததுபோல அதிருசிய மும், ரூபமின்றியதும், ஜாதியின்றியதும், பூதகாரியமல்லாததும், சுத்தமும், நித்தியமுமான திருக்குவடிவம் நீ. (ங)

न भवान्निन्द्रियाण्येषां करणत्वेन या श्रुतिः ।
प्रेरकस्त्वं पृथक्तेभ्यो न कर्त्ता करणं भवेत् ॥ ४ ॥

இந்திரியங்களைக் காரணமாகச் சுருதி கூறுதலால் அவை நீயல்லை. பிரேரகனாகிய நீ அவற்றின் வேறு. கர்த்தாவும் காரண முமல்லை. (ச)

नानैतान्येकरूपस्त्वं भिन्नस्तेभ्यः कुतः शृणु ।
न चैकेन्द्रियरूपस्त्वं सर्वत्राहं प्रतीतितः ॥ ५ ॥

இவை நானா, நீ ஏகரூபன். அவற்றின் வேறுதல் எப்படி ? கேள். எங்கும் யானென்னும் உணர்ச்சியிருத்தலால் ஒரு இந்தி ரியவடிவமல்லை. (ரு)

न तेषां समुदायोऽसि तेषामन्यतमस्य च ।
विनाशेऽप्यात्मधीस्तावदस्ति स्यान्नैवमन्यथा ॥ ६ ॥

அவற்றின் சமுதாயம் (கூட்டம்) நீயல்லை. அவற்றினுள் ஒன்றற்கு நாசமுண்டாகியபோதும் ஆத்மபுத்தியிருக்கிறது; அவற்றின் சமுதாயம் நீயாயின், இவ்வாறு (ஆத்மபுத்தி) இரு க்கலாகாது. (சா)

प्रत्येकमपि तान्यात्मा नैव तत्र नयं शृणु ।
नानास्वामिकदेहोऽयं नश्येद्भिन्नमताश्रयः ॥ ७ ॥

அவை தனித்தனியாகவும் ஆத்மாவாகா. அதில் *நயத் தைக்கேள். நானா எஜமானனையுடைய இத்தேகம் *வெவ் வேறு கொள்கையி னாசிரயமாய் நசிக்கும். (எ)

* நயம்—யுக்தி.

* ஒவ்வொருவர் அபிப்பிராயத்திற்கும் விஷயமாவதாய்.

नानात्माभिमतं नैव विरुद्धविषयत्वतः ।
स्वाम्यैक्ये तु व्यवस्था स्यादेकपार्थिव देशवत् ॥ ८ ॥

விருத்தவிஷயத்தன்மையால் நாநாத்மாவின் அபிமதமா (கொள்கையா)னது வியவஸ்தை (ஒழுங்கு) பெறாது. எஜமானன் ஒருவனாயின் ஒரு அரசனது தேசம்போல் (தேகம்) வியவஸ்தையுளதாம். (அ)

न मनस्त्वं न वा प्राणो जडत्वादेव चैतयोः ।
गतमन्यत्र मे चित्तमित्यन्यत्वानुभूतितः ॥ ९ ॥

நீமனமல்லை, பிராணனல்லை; இவ்விரண்டும் ஜடமாயிருத்தலானே; என்சித்தம் வேறிடத்துச் சென்றிருந்தது என்னும் வேற்றுத்தன்மையநுபூதியிருத்தலானும். (௯)

क्षुत्तृड्भ्यां पीडितः प्राणो ममायं चेति भेदतः ।
तयोर्द्रष्टा पृथक्ताभ्यां घटद्रष्टा घटाद्यथा ॥ १० ॥

என் பிராணன் பசிதாகங்களால் பீடிக்கப்பட்டதாம் என்னும் பேதமிருத்தலானும். கடதிருஷ்டா கடத்தினும் வேறாதல் போல அவ்விரண்டன் திருஷ்டா அவ்விரண்டினும் வேறாம்.(௧0)

सुप्तौ लीनास्ति या बोधे सर्वं व्याप्नोति देहकम् ।
चिच्छायया च सम्बन्धा न सा बुद्धिर्भवान् द्विज ॥ ११ ॥

*பிராஹ்மணா? எது சுழுத்தியில் ஒடுங்கியிருக்கிறதோ, ஜாக்கிரத்தில் (விழிப்பில்) தேகமுழுவதையும் வியாபிக்கின்றதோ, *சிற்சாயையோடு சம்பந்தமுடையதாயிருக்கின்றதோ அந்தப்புத்தி நீயல்லை. (௧௧)

---

* சுரேசுவராராகிய சிஷ்யனைநோக்கிச் சொன்னமையால் பிராஹ்மணா என்று விளித்தார்.

* சிற்சாயை=சிதாபாஸன்=சித்துப்போலி=சிற்பிரதிபிம்பம்.

नानारूपवती बोधे सुप्तौ लीनातिचञ्चला ।
यतो दृगेकरूपस्त्वं पृथक्तस्य प्रकाशकः ॥ १२ ॥

ஜாக்கிரத்தில் நாநாரூபமுடையதாய், சுழுத்தியில் ஒடுங்கியதாய் (புத்தி) மிகச்சஞ்சலமுடையதாம். ஆதலால் அதனை விளக்கும் திருக்குவடிவன் நீ. (கஉ)

सुप्तौ देहाद्यभावेऽपि साक्षी तेषां भवान्यतः ।
स्वानुभूतिस्वरूपत्वान्नान्यस्तस्यास्ति भासकः ॥ १३ ॥

சுழுத்தியில் தேகாதிகளில்லாவிடினும், அவற்றின் சாக்ஷியாகிய நீ சுவாநுபூதி சொரூபத்தன்மையால் இருக்கின்றாய், அதனை (அவற்றின் அபாவத்தை) விளக்குவது வேறில்லை. (கந)

प्रमाणं बोधयन्तं तं बोध मानेन ये जनाः ।
बुभुत्स्यन्ते त एधोभिर्दग्धुं वाञ्छन्ति पावकम् ॥ १४ ॥

பிரமாணத்தினை யறிவிக்கின்ற அவ்வறிவினைப்பிரமாணத்தினால் எவர்கள் அறியவிரும்புகிறார்களோ அவர்கள் விறகுகளால் அக்கினியை எரிய விரும்புகின்றார்கள். (கச)

विश्वमात्मानुभवति तेनासौ नानुभूयते ।
विश्वं प्रकाशयत्यात्मा तेनासौ न प्रकाश्यते ॥ १५ ॥

ஜகத்தை ஆத்மா அநுபவிக்கின்றது. அத (ஜகத்தி)னால் இது (ஆத்மா) அநுபவிக்கப்படுகிறதில்லை. ஜகத்தை ஆத்மா பிரகாசிக்கின்றது. அதனால் இது பிரகாசிக்கப்படுகிறதில்லை. ()

ईदृशं तादृशं नायं न परोक्षं सदेव यत् ।
तद्ब्रह्म त्वं न देहादिदृश्यरूपोऽसि सर्वदृक् ॥ १६ ॥

எது இத்தன்மையதும் அத்தன்மையதும், இதவு (பிரத்தியக்ஷமு) மன்றோ, பரோக்ஷமன்றோ, சத்தாகவேயிருக்கின்றதோ, அந்தப்பிரஹ்மம் நீ. எல்லாவற்றையும் காண்பவனாகிய நீ தேகாதி திருசியரூபமல்லை. (கசு)

इदन्त्वेनैव यद्भाति सर्वं तच्च निषिध्यते ।
अवाच्यतत्त्वमनिदं न वेद्यं स्वप्रकाशतः ॥ १७ ॥

இதெனுந்தன்மையினாலேயே எது விளங்குகின்றதோ அவ்வெல்லாமும் நிஷேதிக்கப்படுகின்றது. * அவாச்சிய தத்துவமும் இதுவல்லா (சுட்டப்படா) ததுமான ஆத்மா ஸ்வப்பிரகாசத்தன்மையினால் வேத்தியம (அறியப்படுவது) ன்று. (கஎ)

सत्यं ज्ञानमनन्तं च ब्रह्मलक्षलणमुच्यते ।
सत्यत्वात् ज्ञानरूपत्वादनन्तत्वात्त्वमेव हि ॥ १८ ॥

சத்தியமும், ஞானமும், அநந்தமும் பிரஹ்மலக்ஷணமெனப்படும். சத்தியத்தன்மையிருத்தலால், ஞானவடிவத்தன்மையிருத்தலால், அநந்தத்தன்மையிருத்தலால் (பிரஹ்மம்) நீயே. (கஅ)

सति देहाद्युपाधौ स्याजीवस्तस्य नियामकः ।
ईश्वरः शक्त्युपाधित्वाद्द्वयोर्बाधे स्वयंप्रभः ॥ १९ ॥

தேகாதியுபாதிகளுள்ளபோது ஜீவனாகின்றான். அவனை நியமிப்பவன் ஈசுவரனுவன்; சக்தியுபாதியுடைமையால் (உபாதி) இரண்டும் பாதமான (பொய்யென்று நிச்சயிக்கப்பட்ட) போது சுவயம் பிரபையா (ஜோதியா) ம். (கக)

अपेक्ष्यतेऽखिलैर्मानैर्नयनं मानमीक्षते ।
वेदवाक्यं प्रमाणं तद्ब्रह्मात्मावगतौ मतम् ॥ २० ॥

சகலப்பிரமாணங்களாலும் நயனமாகிய பிரமாணம் அபேக்ஷிக்கப்படுகின்றது. அது வேதவாக்கியத்தினைப் பிரமாணமாகப் பார்க்கின்றது. அது பிரஹ்மத்தை அறிதலில் மதிக்கப்படுகின்றது. (உ0)

* அவாச்சியம் = சொல்லப்படாதது.

अतो हि तत्त्वमस्यादि वेदवाक्यप्रमाणतः
ब्रह्मणोऽस्ति यया युक्त्या सम्यगस्माभिः कीर्त्यते ॥ २१ ॥

இதனுனே தத்துவமஸிமுதலியன வேதவாக்கியப் பிரமாணத்தினுல் பிரஹ்மத்தினுடையதாயிருக்கிறது. எந்த யுக்தியினுல் நம்மனோரால் செவ்வையாய்க் கீர்த்திக்கப்படுகின்றது. (உக)

शोधिते त्वं पदार्थे हि तत्त्वमस्यादि चिन्तितम् ।
सम्भवेन्नान्यथा तस्माच्छोधनं कृतमादितः ॥ २२॥

துவம்பதார்த்தம் சோதிக்கப்பட்டபோதுதான் தத்துவமஸியாதி சிந்திக்கப்பட்டதாம். இல்லையாயின் சம்பவியாது. ஆதலால் சோதனம் முதலாவதாகச் செய்யப்படுவதாம். (உஉ)

देहेन्द्रियादिधर्मान्यः स्वात्मन्यारोपयन्मृषा !
कर्तृत्वाद्यभिमानी च वाच्यार्थस्त्वं पदस्य च ॥ २३ ॥

எவன் தேகேந்திரியாதி தர்மங்களைத் தனதாத்மாவில் பொய்யாகவாரோபித்து கர்த்திருத்துவாதி யபிமானியா யுளனே, அவன் துவம்பதத்தின் வாச்சியார்த்தன். (உங)

देहेन्द्रियादिसाक्षी यस्तेभ्यो भाति विलक्षणः ।
स्वयं बोधस्वरूपत्वाल्लक्ष्यार्थस्त्वंपदस्य सः ॥ २४ ॥

எவன் சுவயம் போதஸ்வரூபமாயிருத்தலால் தேகேந்திரியாதி சா.க்ஷியாய் அவற்றிற்கு விலக்ஷணமாய் விளங்குகின்றானோ அவன் துவம்பதலக்ஷியார்த்தன். (உச)

* सर्वज्ञत्वादिधर्मान्य आत्मन्यारोपयञ्जगतः ।
स्रष्टृत्वाद्यभिमानी च वाच्यार्थस्तत्पदस्य च ॥ २५ ॥

---

* இந்தச் சுலோகம் பம்பாய் அச்சுப்பிரதியில் காணப்படவில்லையாயினும் அவசியமானதேயாம்.

சர்வஞ்ஞத்துவமுதலிய தர்மங்களை எவன் தன்னிடத்து ஆரோபித்து ஜகத்தைச் சிருஷ்டிக்குந்தன்மை முதலிய அபிமான முடையவனு யிருக்கின்றனே அவன் தத்பதத்தின் வாச்சியார்த்தன். (உரு)

वेदान्तवाक्यसंवेद्यं विश्वातीताक्षराद्वयम् ।
विशुद्धं यत्स्वसंवेद्यं लक्ष्यार्थस्तत्पदस्य सः ॥ २६ ॥

வேதாந்தவாக்கியத்தால் செவ்வையாய் அறியத்தக்கதும், விசுவாதீதமும், அக்ஷரமும் (நாசமில்லாததும்), அத்வயமும், விசுத்தமும், ஸ்வசம்வேத்தியமு (தன்னால் செவ்வையாயறியத்தக்கது) மாயுள்ளதெதுவோ அது தத்பதத்தின் லக்ஷ்யார்த்தமாம். (உசு)

सामान्याधिकरण्यं हि पदयोस्तत्त्वमोर्द्वयोः ।
सम्बन्धस्तेन वेदान्तैर्ब्रह्मैक्यं प्रतिपद्यते ॥ २७ ॥

தத்துவம்பதங்களிரண்டற்கும் சாமானுதிகரணியமே சம்பந்தமாம். அதனல் வேதாந்த (மகாவாக்கிய)ங்களால் பிரஹ்மைக்கியம் அறியப்படுகின்றது. (உஎ)

भिन्नप्रवृत्तिहेतुत्वे पदयोरेकवस्तुनि ।
वृत्तित्वं यत्तथैवैक्यं विभक्त्यन्तकयोस्तयोः ॥ २८ ॥

* பின்னப்பிரவிருத்திக்கு ஏதுவாந்தன்மையுளதாகப் பதங்களிரண்டற்கும் ஒரு வஸ்துவிலிருக்குந்தன்மையும், அப்படியே, (சமான) வேற்றுமை யீறுகளையுடைய அவ்விரண்டன் ஐக்கியமும் எதுவோ. (உஅ)

---

* அவனே இப்பிராஹ்மணன் என்னுமிடத்துள்ள அவன் இவன் என்னும் பதங்களிரண்டற்கும் தூரதேசகாலாதிசமீபதேசகாலாதிகளை யறிவிக்குந்தன்மையாகிய வெவ்வேறுபிரவிருத்திகட்கு ஏது வாதலுளதாக பிராஹ்மணனுகிய ஒருவஸ்துவிலிருக்குந்தன்மையுளது. இது சாமானுதிகரணியம்.

सामानाधिकरण्यं तत्सम्प्रदायिभिरीरितम् ।
तथा पदार्थयोरेव विशेषणविशेष्यता ॥ २९ ॥

அது சாமானாதிகரணியமென்று சம்பிரதாயிகளால் சொல்லப்படுகின்றது. அப்படியே பதமிரண்டற்குமே விசேஷண விசேஷியத்தன்மையாம். (உகூ)

अयं सः सोऽयमितिवत्सम्बन्धो भवति द्वयोः ।
प्रत्यक्त्वं सद्वितीयत्वंपरोक्षत्वं च पूर्णता ॥ ३० ॥

"இவன் அவன், அவன் இவன்" என்பதுபோல் இரண்டற்கும் சம்பந்தமாகின்றது. பிரத்திபக்குத்தன்மையும் இரண்டாவதோடுகூடியதன்மையும் பரோக்ஷத்தன்மையும் பூர்ணத்தன்மையும் (ஙூ0)

परस्परविरुद्धं स्याचतो भवति लक्षणा ।
लक्ष्यलक्षणसम्बन्धपदार्थप्रत्यगात्मनोः ॥ ३१ ॥

ஒன்றற்கொன்று விருத்தமாம். ஆதலால் இலக்ஷியலக்ஷண சம்பந்தபதார்த்த பிரத்தியகாத்மாக்களிரண்டற்கும் இலக்ஷணை யாகின்றது. (ஙூக)

मानान्तरोपरोधाच्च मुख्यार्थस्यापरिग्रहे ।
मुख्यार्थस्याविनाभूते प्रवृत्तिर्लक्षणोच्यते ॥ ३२ ॥

வேறு பிரமாணங்களுக்கு விரோதம் வருதலால் முக்கியார்த்தம் கொள்ளாதவிடத்து முக்கியார்த்த மின்றியமையாத சக்கிய சம்பந்தத்தில் உண்டாகும் பிரவிருத்தி லக்ஷணையெனப்படும். ()

त्रिविधा लक्षणा ज्ञेया जहत्यजहती तथा ।
अन्योभयात्मिका ज्ञेया तत्राद्या नैव सम्भवेत् ॥ ३३ ॥

மூவகைலக்ஷணை அறியத்தக்கது:—ஜஹதீ, அஜஹதீ, மற்றையது ஜஹதீ அஜஹதீயென்னும் இருவடிவினதாம். அவற்றுள் முதலாவது ஜஹதீ (இம்மகாவாக்கியத்தில்) சம்பவியாது. (ஙூஙூ)

वाच्यार्थमखिलं त्यक्त्वा वृत्तिःस्यद्या तदान्विते ।
गङ्गायां घोष इतिवज्जहती लक्षणा हि सा ॥ ३४ ॥

வாச்சியார்த்தம் முழுவதனையும்விட்டு அதன் சம்பந்தமுடையதில் எந்தவிருத்தி நிகழ்கின்றதோ அது கங்கையில் இடைச்சேரி யென்பதிற்போல் ஜஹதிலக்ஷணை (விட்டலக்கணை) யாகின்றது. (௩௪)

वाच्यार्थस्यैकदेशस्य प्रकृतेस्त्याग दृश्यते ।
जहती सम्भवेन्नैव सम्प्रदायविरोधतः ॥ ३५ ॥

வாச்சியார்த்தத்தின் ஏகதேசமாகிய பிரகிருதியின் தியாகம் (சம்பிரதாய சுருதிவாக்கியார்த்தத்தில்) காணப்படுகின்றது. (வாச்சியார்த்தம் முழுவதையும் விடின்) சம்பிரதாயத்திற்கு விரோதம்வருதலால் ஜஹதிலக்ஷணை சம்பவியாது. (௩௫)

वाच्यार्थमपरित्यज्य वृत्तिरन्यार्थके तु या ।
कथितेयमजहती शोणोऽयं धावतीतिवत् ॥ ३६ ॥

வாச்சியார்த்தத்தினை விடாது பிறபொருளில் (வாச்சியார்த்த சம்பந்தமான அவாச்சியார்த்தத்தில்) எந்த விருத்தி நிகழ்கின்றதோ, அது "சிவப்பாகிய இஃது ஓடுகின்றது" என்பதிற்போல அஜஹதிலக்ஷணை (விடாதலக்கணை)யாம். (௩௬)

न सम्भवति साप्यत्र वाच्यार्थोति विरोधतः ।
विरोधांशपरित्यागो दृश्यतेप्रकृतेर्यतः ॥ ३७ ॥

எதனால் பிரகிருதியின் விரோதாம்சத்தினை விடுதல் (வாக்கியார்த்தத்தில்) காணப்படுகின்றதோ அதனால் அதுவும் (வாச்சியார்த்தமுழுவதையும் விடாததான அஜஹதிலக்ஷணையும்) இங்குப் பொருந்தாது; வாச்சியார்த்தமென்னும் விரோதமிருத்தலால். (௩௭)

वाच्यार्थस्यैकदेशं च परित्यज्यैकदेशकम् ।
या बोधयति सा ज्ञेया तृतीया भागलक्षणा ॥ ३८ ॥

வாச்சியார்த்தத்தின் ஏகதேச(ஒருபாக)த்தினை விட்டு ஏகதேசத்தினை எது (எவ்விருத்தி) அறிவிக்கின்றதோ, அது மூன்றாவதுபாகலக்ஷணை (விட்டுவிடாதலக்கணை) என்று அறியத்தக்கதாம். (௩௮)

सोऽयं विप्र इदं वाक्यं बोधयत्यादितो तथा ।
तत्कालत्वविशिष्टं च तथैतत्कालसंयुतम् ॥ ३९ ॥

"அவன் இந்த விப்பிரன்" என்னும் இவ்வாக்கியம் முதலில் அக்காலத்தோடுகூடியவனாகவும் இக்காலத்தோடுகூடியவனாகவும் அறிவிக்கின்றது. (௩௯)

अतस्तयोर्विरुद्धं तदेत्कालत्वादिधर्मकम् ।
त्यक्त्वा वाक्यं यथा विप्रपिण्डं बोधयतीरितम् ।
तथैव प्रकृतेस्तत्त्वमसीत्यत्र श्रुतौ शृणु ॥ ४० ॥

ஆதலால் அவ்விரண்டன் அக்காலத்தன்மை இக்காலத்தன்மை முதலிய தர்மங்களைவிட்டு வாக்கியம் எப்படிச் சொல்லப்பட்ட விப்பிர(பிராஹ்மண) பிண்டத்தினை அறிவிக்கின்றதோ, அவ்வாறே தத்துவமஸியென்னு மிங்குச் சுருதியில் தொடங்கியதற்குமாம் கேள். (௪௦)

प्रत्यक्त्वादीन्परित्यज्य जीवधर्मांस्त्वमः पदात् ।
सर्वज्ञत्वपरोक्षादीन्परित्यज्य ततः पदात् ॥ ४१ ॥

துவம் (நீ) என்னும் பதத்தினின்றும் பிரத்தியக்ஷத் தன்மைமுதலியஜீவதர்மங்களைவிட்டு, தத்(அது) என்னும் பதத்தினின்றும் சர்வஞ்ஞத்துவம் பரோக்ஷத்துவமுதலிய தர்மங்களைவிட்டு, (௪௧)

शुद्धं कूटस्थमद्वैतं बोधयत्यादरात्परम् ।
तत्त्वमोः पदयोरैक्यमेव तत्त्वमसीत्यलम् ॥ ४२ ॥

சுத்தமும் கூடஸ்தமும் அத்வைதமுமான பரத்தை ஆதரவோடு அறிவிக்கின்றது. தத்துவம்பதமிரண்டன் ஐக்கியமே தத்துவமஸி என்றமைதி பெறுக. (சஉ)

इत्थमैक्यावबोधेन सम्यज्ज्ञानं दृढं नयैः ।
अहं ब्रह्मेति विज्ञानं यष्य शोकं तरत्यसौ ॥ ४३ ॥

இவ்வாறு யுக்திகளால் ஐக்கியத்தை அறிதலால், "நல்லஞானம் திடமாகின்றது." யான் பிரஹ்மம் என்னும் விஞ்ஞானம் எவனுக்குண்டாகின்றதோ அவன் சோகத்தைக் கடக்கின்றான். (சங)

आत्मा प्रकाशमानोऽपि महावाक्यैस्तथैकता ।
तत्त्वमोर्बोध्यतेथाऽपि पौर्वापर्यानुसारतः ॥ ४४ ॥

ஆத்மா மகாவாக்கியங்களால் பிரகாசிக்கப்படுவதாயினும், அவ்வாறே தத்துவம்பதமிரண்டன் ஐக்கியம் முன்பின் அநுசரித்ததாக அறியப்படினும், (சச)

तथापि शक्यते नैव श्रीगुरोः करुणां विना ।
अपरोक्षयितुं लोके मूढैः पण्डितमानिभिः ॥ ४५ ॥

ஸ்ரீகுருமூர்த்தியின் கிருபையின்றி உலகத்தில் தம்மைப் பண்டிதர்களாக மதித்திருக்கும் மூடர்களால் அபரோக்ஷமாயறிய முடியவே முடியாது. (சரு)

अन्तःकरणसंशुद्धौ स्वयं ज्ञानं प्रकाशते ।
वेदवाक्यैरतः किंस्याद्गुरुणेति न साम्प्रतम् ॥ ४६ ॥

அந்தக்கரணசுத்தியுளதாயின், தானே ஞானம் பிரகாசிக்கும். ஆதலால் வேதவாக்கியங்களாலும் குருவினாலும் என்ன உண்டாகும் என்பது சம்பிரதாயத்தை யொட்டியதன்று. (சசு)

आचार्यवान्पुरुषो हि वेदेत्येवं श्रुतिर्जगौ ।
अनादाविह संसारे बोधको गुरुरेव हि ॥ ४७ ॥

ஆசாரியனையுடைய புருஷனே (சத்தாகிய ஆத்மாவை) அறிவன் என்று (சாந்தோக்கிய) சுருதி கூறியுளது. அநாதியான இச்சம்சாரத்தில் போதகன் (அறிவிப்பவன்) குருவே (இது பிரசித்தம்.) (சஎ)

अतो ब्रह्मात्मवस्त्वैक्यं ज्ञात्वा दृश्यमसत्तया ।
अद्वैते ब्रह्मणि स्थेयं प्रत्यग् ब्रह्मात्मना सदा ॥ ४८ ॥

ஆதலால் பிரஹ்மாத்மவஸ்து வைக்கியத்தை அறிந்து, திருசியத்தை அசத்தாகக்கண்டு, எப்போதும் அத்வைதப்பிரஹ்மத்தில் பிரத்தியக்குப் பிரஹ்மவடிவமாக நிற்கவேண்டும். (சஅ)

तत्प्रत्यक्षात्परिज्ञातमद्वैतब्रह्मचिद्घनम् ।
प्रतिपाद्यं तदेवात्र वेदान्तैर्नद्वयं जडम् ॥ ४९ ॥

அந்தப்பிரத்தியக்ஷத்தினால் அறியப்படுவது அத்வைமான பிரஹ்மசிற்கனமாம். இங்கு வேதாந்த (உபநிஷத)ங்களால் பிரதிபாதிக்கப்படுவதும் அதுவே; துவயமாகிய ஜடமன்று. ()

सुखरूपं चिदद्वैतं दुःखरूपमसज्जडम् ।
वेदान्तैस्तद्द्वयं सम्यग् निर्णीतं वस्तुतो नयात् ॥ ५० ॥

சித்தாகிய அத்வைதம் சுகரூபம்; அசத்தாகிய ஜடம் துக்கரூபம்; என்று வேதாந்தங்களாலும் யுக்தியினாலும் உண்மையாக அவ்விரண்டும் செவ்வையாய் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன.(ருO)

अद्वैतमेवं सत्यं त्वं विद्धि द्वैतमसत्सदा ।
शुद्धे कथमशुद्धः स्याद् दृश्यं मायामयं ततः ॥ ५१ ॥

இவ்வாறு அத்வைதம் சத்தியமென்றும் துவைதம் எப்போதும் அசத்தென்றும் நீ அறி. சுத்தத்தில் அசுத்தம் எவ்வாறுளதாம்? ஆதலால் திருசியம் மாயாமயமாம். (ருக)

शुक्तौ रूप्यं मृषा यद्वत्तथाविश्वं परात्मनि ।
विद्यते न स्वतः सत्त्वं नासतः सत्त्वमस्ति वा ॥ ५२ ॥

சுத்தியில் வெள்ளி எப்படிப் பொய்யோ, அதுபோலப் பரமாத்மாவில் உலகு பொய்யாம், இயல்பாகச் சத்துவமில்லை. அல்லது அசத்திற்குச் சத்துவமில்லை. (ருஉ)

बाध्यत्वान्नैव सद्वैतं नासत्प्रत्यक्षभानतः ।
न च सत्सद्विरुद्धत्वादतोऽनिर्वाच्यमेव तत् ॥ ५३ ॥

துவைதம் பாதிக்கப்படுவதாயிருத்தலின் சத்தாகாது; பிரத்தியக்ஷமாய் விளங்குவதனால் அசத்தன்று. சத்தின் விரோதமுடைமையால் சத்துமன்று. ஆதலால் அது அநிர்வாச்சியமேயாம். (ருஙு)

यः पूर्वमेकएवासीत्सृष्ट्वा पश्चादिदं जगत् ।
प्रविष्टो जीवरूपेण स एवात्मा भवान्परः ॥ ५४ ॥

எது (சிருஷ்டிக்கு)முன் ஒன்றாகவேயிருந்ததோ, இந்த ஜகத்தைச் சிருஷ்டித்துப் பின் ஜீவரூபமாகப் பிரவேசித்ததோ அவ்வாத்மாவாகிய பரமே நீ. (ருச)

सच्चिदानन्द एव त्वं विस्मृत्यात्मतया परम् ।
जीवभावमनुप्राप्तः स एवात्मासि बोधतः ।
अद्वयानन्दचिन्मात्रः शुद्धः साम्राज्यमागतः ॥ ५५ ॥

சச்சிதாநந்தமே நீ. ஆத்மத்தன்மையாகப் பரத்தினை (அறியாது) மறந்து ஜீவத்தன்மையினை அடைந்தாய். அவ்வாத்மாவாகிய நீ ஞானத்தினால் அத்வைதாநந்த சின்மாத்திரசுத்தனாய் ஸாம்ராஜ்ய மடைந்தவனாயிருக்கின்றாய். (ருரு)

कर्तृत्वादीनि यान्यासंस्त्वयि ब्रह्माद्वये परे ।
तानीदानीं विचार्य त्वं किं स्वरूपाणि वस्तुतः ॥ ५६ ॥

பிரஹ்மாத்வயமும் பரமுமாகிய உன்னிடத்தில் எந்தகர்த்திருத்துவமுதலியன இருந்தனவோ, அவை இப்போது வாஸ்தவமாக என்ன சொரூபமாயிருக்கின்றனவென்று விசாரி. (ருசு)

अत्रैव शृणु वृत्तान्तमपूर्वं श्रुतिभाषितम् ।
कश्चिद् गान्धारदेशीयो महारत्नविभूषितः ॥ ५७ ॥

இதிலேயே * சுருதியினாற் சொல்லப்பட்ட அபூருப விருத்தாந்தத்தினைக் கேள். மகாரத்நங்களால் அலங்கரிக்கப்பட்ட ஓர் காந்தாரதேசத்தன். (ருஎ)

स्वगृहे स्वाङ्गणे सुप्तः प्रमत्तः सन्कदाचन ।
रात्रौ चौरः समागत्ये भूषणानां प्रलोभितः ॥ ५८ ॥

தன்வீட்டில் தனது அங்கணத்தில் ஒருபோது மயங்கித் தூங்கினான். இரவில் திருடன்வந்து ஆபரணங்களில் இச்சையுடையவனாய், (ருஅ)

बद्धा देशान्तरं चौरैर्नीतः सन्गहनेवने ।
भूषणान्यपहृत्यापि बद्धाक्षकरपादकः ॥ ५९ ॥

(அப்புருஷனை)க்கட்டி தேசாந்தரத்திற் கொண்டுபோய் அடர்ந்தகாட்டில் ஆபரணங்களை எடுத்துக்கொண்டு கண் கை கால்களைக்கட்டி விட்டுவிட்டான். (ருகூ)

निक्षिप्तो विपिनेऽतीव कुशकण्टकवृश्चिकैः ।
व्यालव्याघ्रादिभिश्चैव सङ्कुले तरुसङ्कटे ॥ ६० ॥

விடவேஅவன் காட்டில் குசம் முள் தேள் என்பவற்றாலும் பாம்பு புலி முதலியவற்றாலும் அடர்ந்த மரநெருக்கத்தில் (சூ0)

व्यालादिदुष्टसत्वेभ्यो महारण्ये भयातुरः ।
शिलाकण्टकदर्भाद्यैर्देहस्य प्रतिकूलकैः ॥ ६१ ॥

---

* சாந்தோக்கியம் ஆறாவது பிரபாடகம்.

பாம்புமுதலிய துஷ்டப்பிராணிகளுக்குப் பயந்தவனாய், மகாரணியத்தில் பிரதிகூலமான கல்முள் தர்ப்பைமுதலியவற்றால் தடுக்கப்பட்டு தேகம், (௬௧)

क्रियमाणे विलुठने विशीर्णाङ्गोऽसमर्थकः ।
क्षुत्तृषातपवाय्वग्न्यादिभिस्तप्तोऽतितापकैः ॥ ६२ ॥

உருண்டு அதனால் சிதைந்த அங்கமுடையவனாய், சாமர்த்தியமில்லாதவனாய், மிகத்தாபமுள்ள பசி தாகம் வெயில் வாயு அக்கினி முதலியவற்றால் தபிக்கப்பட்டவனாய், (௬௨)

बन्धमुक्तौ तथा देशप्राप्तावेव सुदुःखधीः ।
ददर्श कञ्चिन्माक्रोशनैकं तत्रैव तस्थिवान् ॥ ६३ ॥

கட்டு அவிழ்வதிலும் தன்தேசத்தை யடைவதிலுமே மிகுந்தகவலையுடையவனாய் அழுங்கால், அவ்விடத்திற்றானே நின்ற ஒருவனைக்கண்டான். (௬௩)

तथा रागादिभिर्वर्गैः शत्रुभिर्दुःखदायिभिः ।
चौरैर्देहाभिमानाद्यैः स्वानन्दधनहारिभिः ॥ ६४ ॥

அவ்வாறே துக்கத்தைத்தரும் இராகாதிவர்க்க சத்துருக்களும் தனது ஆநந்தகனத்தைக் கவரும் தேகாபிமானமுதலிய திருடர்களுமாகிய அவர்களால், (௬௪)

ब्रह्मानन्दे प्रमत्तः स्वाज्ञाननिद्रावशीकृतः ।
बद्धस्त्वं बन्धनैर्भोगतृष्णाज्वरादिभिर्दृढः ॥ ६५ ॥

பிரஹ்மாநந்தத்தில் பிரமத்த (சோர்வடைந்தவ)னாய்த் தனது அஞ்ஞான நித்திரையால் வசமாக்கப்பட்டவனாய்ப் போகாசை ஜ்வர முதலியவற்றால் நீ திடமாகக் கட்டப்பட்டவனானாய். ()

अद्वयानन्दरूपात्त्वां प्रच्याव्यातीवधूर्तकैः ।
दूरनीतोऽसि देहेषु संसारारण्यभूमिषु ॥ ६६ ॥

தூர்த்தர்களால் நீ அந்தவயாநந்தவடிவத்தினின்றும் நீக்கப்பட்டவனாய்ச் சம்சாராரணிய பூமிகளான தேகங்களிலும், (சுசு)

सर्वदुःखनिदानेषु शरीरादित्रयेषु च ।
नानायोनिषु कर्मान्धवासनानिर्दितासु च ॥ ६७ ॥

சர்வதுக்கநிதானமாகிய சரீரமுதலிய மூன்றிலும், கர்மா * ந்தவாசனையினாற்றடித்த நாநாயோனிகளிலுமாகத் தூரத்திற் கொண்டுபோகப்பட்டாய். (சுஎ)

प्रवेशितोऽपि सृष्टोऽसि बन्धस्वानन्ददृष्टितः ।
अनादिकालमारभ्य दूःखं चानुभवन्सदा ॥ ६८ ॥

பிரவேசிக்கப்பட்டவனாயினும் சுவாநந்ததிருஷ்டியிற் கட்டப்பட்டவனாய்ச் சிருஷ்டிக்கப்பட்டவனானாய். அநாதிகாலந் தொட்டு எப்போதும் துக்கத்தினை அநுபவிக்கின்றவனாய், (சுஅ)

जन्ममृत्युजरादोषनरकादिपरम्पराम् ।
निरन्तरं विषण्णोऽनुभवन्नत्यन्तशोकवान् ॥ ६९ ॥

ஜன்மம் மிருதியு ஜராதோஷ நரகாதி பரம்பரையை நிரந்தரம் கலங்கி அநுபவிக்கின்றவனாய், அத்தியந்தசோகமுடையவனாய். (சுகூ)

अविद्याभूतबन्धस्य निवृत्तौ दूःखदस्य च ।
स्वरूपानन्दसंप्राप्तौ सत्योपायो न लब्धवान् ॥ ७० ॥

துக்கத்தைத்தரும் அவித்தை வடிவ பந்தத்தின் நிவிருத்தியும் ஸ்வரூபாநந்தப் பிராப்தியும் இருக்க, உபாயத்தினைப் பெற்றாயில்லை. (எ0)

यथा गान्धारदेशीयश्चिरं दैवाद्दयालुभिः ।
कैश्चित्पान्थे परिप्राप्तैर्मुक्तदृष्ट्याादिबन्धनः ॥ ७१ ॥

---

* அந்தம் = குருடு.

எப்படிக் காந்தாரதேசத்தவன் ஒருகத் தெய்வீகமாக வழியில்சேர்ந்த சிலதயாவான்களால் கண்முதலியவற்றின் கட்டவிழ்க்கப்பட்டவனாய், (எக)

सः स्वस्थैरुपदिष्टश्च पण्डितो निश्चितात्मकः ।
ग्रामाद्ग्रामान्तरं गच्छेन्मेधावी मार्गतत्परः ॥ ७२ ॥

சுவஸ்தமுடையவர்களால் உபதேசிக்கப்பட்டவனாய், பண்டிதனாய், நிச்சயிக்கப்பட்டவடிவினனாய், மேதாவியும், மார்க்கதற்பரனுமான அவன் கிராமத்தினின்றும் கிராமத்திற்குப்போகின்றானோ. (எஉ)

गत्वा गान्धारदेशं स स्वगृहं प्राप्य पूर्ववत् ।
बान्धवैः संपरिष्वक्तः सुखी भूत्वा स्थितोऽभवत् ॥ ७३ ॥

காந்தாரதேசத்திற் சென்று தன்வீட்டை முன்போலடைந்து, பந்துக்களால் செவ்வையாய்த் தழுவப்பட்டவனாய்ச் சுகியாகிநிலைத்தவனானனோ. (எங)

त्वमप्येवमनेकेषु दुःखदायिषु जन्मसु ।
श्रान्तो दैवाच्छुभे मार्गे जातश्रद्धः सुकर्मकृत् ॥ ७४ ॥

அப்படியே நீயும் துக்கத்தைத்தரும் அநேக ஜன்மங்களில் சுழல்பவனாய்த் தெய்வீகமாகச் சுபமார்க்கத்தில் சிரத்தையுண்டானவனாய் நற்கருமமுடையவனானாய். (எச)

वर्णाश्रमाचारपरोऽवाप्तपुण्यमहोदयः ।
ईश्वरानुग्रहाल्लब्धब्रह्मविद्गुरुसत्तमः ॥ ७५ ॥

வர்ணாசிரமாசாரபரனாய், புண்ணியமகோதயத்தை யடைந்தவனாய், ஈசுவரானுக்கிரகத்தால் பிரஹ்மநிஷ்ட குருசிரேஷ்டரை யடைந்தவனாய், (எரு)

विधिवत्कृतसंन्यासो विवेकादियुतः सुधीः ।
प्राप्तब्रह्मोपदेशोऽद्य वैराग्याभ्यास तःपरम् ॥ ७६ ॥

விதிபூர்வகமாய்ச் செய்துகொண்ட சந்நியாஸமுடையவனாய், விவேகமுதலியவற்றையுடையவனாய், நற்புத்தியுடையவனாய், இன்று பிரஹ்மோபதேசத்தை யடைந்தாய். வைராக்கியாப்பியாசத்திற்குப்பின், (எசு)

पण्डितस्तत्र मेधावी युक्त्या वस्तु विचारयन् ।
निदिध्यासनसम्पन्नः प्राप्तौ हि त्वं परम्पदम् ॥ ७७ ॥

பண்டிதனாய், அங்கு மேதாவியுக்தியினால் வஸ்துவை விசாரிக்கின்றவனாய். நிதித்தியாசனசம்பன்னனாய், நீ பரமபதத்தினை அடைந்தாய். (எள)

अतो ब्रह्मात्मविज्ञानमुपदिष्टं यथाविधि ।
मयाचार्य्येण ते धीर सम्यक् तत्र प्रयत्नवान् ॥ ७८ ॥

ஆதலால் ஆசாரியனாகிய என்னால் பிரஹ்மாத்ம விஞ்ஞானம் விதிப்படி உனக்கு உபதேசிக்கப்பட்டது. தீரனே! அதில் நல்ல பிரயத்தினமுடையவனாவாய். (எஅ)

भूत्वा विमुक्तबन्धस्त्वं छिन्नद्वैतात्मसंशयः ।
निर्द्वन्द्वो निस्पृहो भूत्वा विचरस्व यथासुखम् ॥ ८९ ॥

நீ பந்தத்தினின்றும் விடுபட்டவனாய், சேதிக்கப்பட்ட துவைதாத்ம சம்சயமுடையவனாய்த் துவந்துவமின்றியவனும் ஆசையில்லாதவனுமாகிச் சுகமாய்ச் சரிப்பாயாக. (எகூ)

वस्तुतो निष्प्रपंचोऽसि नित्यमुक्तः स्वभावतः ।
न ते बन्धविमोक्षौ स्तः कल्पितौ तौ यतस्त्वयि ॥ ८० ॥

உண்மையாக நிஷ்பிரபஞ்சனும் சுபாவமாக நித்திய முக்தனுமாயிருக்கின்றாய். பந்த மோக்ஷமிரண்டும் உனக்கில்லை; அவ்விரண்டும் உன்னிடத்துக் கற்பிதமாயிருத்தலின். (அ0)

न निरोधो न चोत्पत्तिर्न बद्धो न च साधकः ।
न मुमुक्षुर्न वै मुक्त इत्येषा परमार्थता ॥ ८१ ॥

நிரோத (ஒடுக்க)மு மில்லை; உற்பத்தியுமில்லை; பெத்தனுமில்லை; சாதகனுமில்லை; முமுக்ஷுவுமில்லை; முக்தனுமில்லை யென்னுமிது பரமார்த்தத் தன்மையாம். (அக)

श्रुतिसिद्धान्तसारोयं तथैव त्वं स्वया धिया ।
संविचार्य निदिध्यास निजानन्दात्मकं परम् ॥ ८२ ॥

சுருதி சித்தாந்தசாரமாமிது. அவ்வாறே நீ தனதுபுத்தியினால் செவ்வையாய் விசாரித்து, நிதித்தியாசனஞ்செய்து நிஜாநந்தவடிவமும் பரமும். (அஉ)

साक्षात्कृत्वाऽपरिच्छिन्नाद्वैतब्रह्माक्षरं स्वयम् ।
जीवन्नेव विनिर्मुक्तो विश्रान्तशान्तिमाश्रय ॥ ८३ ॥

அபரிச்சின்னமும், அத்வைதமும், அக்ஷரமுமானப் பிரஹ்மத்தினை தானே சாக்ஷாத்கரித்து, ஜீவித்திருந்தே முக்தனாய் விசிராந்தசாந்தியினை ஆசிரயிப்பாயாக. (அங)

विचारणीया वेदान्ता वन्दनीयो गुरुः सदा ।
गुरूणां वचनं पथ्यं दर्शनं सेवनं नृणाम् ॥ ८४ ॥

வேதாந்தம் விசாரிக்கத்தக்கனவாம். குரு எப்போதும் வந்திக்கத்தக்கவராவர். குருவின்வசனம் தரிசனம் சேவனம் நரர்களுக்குப் பத்தியமாம். (அச)

गुरुर्ब्रह्म स्वयं साक्षात्सेव्यो वन्द्यो मुमुक्षुभिः ।
नोद्वेजनीय एवायं कृतज्ञेन विवेकिना ॥ ८५ ॥

குரு ஸ்வயம் (தானே) சாக்ஷாத் பிரஹ்மம். முமுக்ஷுக்களால் சேவிக்கத்தக்கவரும் வந்திக்கத்தக்கவருமாவர் கிரு

தஞ்ஞு (செய்ந்நன்றியறிபவ)னுகிய விவேகியால் இவர் வெறுக்கத்தக்கவரேயல்லர், (அறு)

यावदायुस्त्वया वन्द्यो वेदान्तो गुरुरीश्वरः ।
मनसा कर्मणा वाचा श्रुतिरेवैष निश्चयः ॥ ८६ ॥

ஆயுளுள்ளவரையில் வேதாந்தமும், குருவும், ஈசுவரனும், மனதினுலும், கர்மத்தினுலும், வாக்கினுலும், வந்திக்கத்தக்கவராமென்னும் இந்த நிச்சயம் சுருதியே. (அசு)

भावाद्वैतं सदा कुर्यात्क्रियाद्वैतं न कर्हिचित् ।
अद्वैतं त्रिषु लोकेषु नाद्वैतं गुरुणा सह ॥ ८७ ॥

* பாவாத்வைதம் எப்போதும் செய்யவேண்டும் * கிரியாத்வைதம் ஒருபோதும் செய்யலாகாது. அத்வைதம் மூன்றுலோகங்களிலுமாம். குருவிேைடு அத்வைதம் செய்யலாகாது. (அஎ)

इत्येवं बोधितो ब्रह्मामृतबोधात्मना द्विजः ।
गुरुणा भाष्यकारेण मण्डनाख्यकविर्महान् ॥ ८८ ॥

என்றிவ்வாறு பிரஹ்மாமிருதபோதவடிவ பாஷியகாரராகிய குருவினுல் துவிஜராகிய மண்டனரென்னும் பெயருடைய பெரிய கவியானவர் போதிக்கப்பட்டவரானுர். (அஅ)

॥ इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्रीमच्छंकरभगवत्पादकृतः
तत्त्वोपदेशः समाप्तः ॥

இவ்வாறு ஸ்ரீ பரமஹம்ஸபரிவிராஜகாசாரிய ஸ்ரீமத் சங்கரபகவத்
பாதரால் செய்தருளப்பட்ட

தத்துவோபதேசம்,

முடிந்தது.

---

* பாவம்=கருத்து. * கிரியை=தொழில்.

ஓம்.

ஸ்ரீ கணேசாய நம:

# ஸ்ரீபாலபோதினி.

## முதற்படலம்.

॥ श्रीबालबोधिनी प्रथमपटलः प्रारंभः ॥

### மங்கலம்.

प्रणम्यपरमानंदं मोहांधतिमिरापहम् ।
तत्प्रसादबलेनैव क्रियतेबालबोधिनी ॥ १ ॥

பரமாநந்தமும் மோகமெனும் இருளைக் கெடுப்பதுமான வஸ்துவைச் செவ்வையாய் வணங்கி, அதன் பிரசாத வலியினாலேயே ஸ்ரீபாலபோதினி நூலானது செய்யப்படுகின்றது. (க)

यस्यप्रसादलेशेन क्षीयंतेभवभीतयः ।
तंसर्वसाक्षिणंयामिशरणं कृपणोह्यहम् ॥ २ ॥

எவருடைய பிரசாதலேசத்தினால் பவபயங்கள் நசிக்கின்றனவோ அந்தச் சர்வசாக்ஷியினைக் கிருபணனாகிய யான் சரணமடைகின்றேன். (௨)

## நூல்.

### ஆத்மலக்ஷணம்.

भोभगवन्नथात्माकीदृशः ॥

பகவானே! ஆத்மா எத்தன்மையது?

सद्रूपंसर्वदाभावरूपं चिद्रूपंविशुद्धबोधैकरूपं आनंदंसुखरूपं नित्यं-कालत्रयावस्थायि कूटस्थमविकार्यं सत्यमबाधितं अस्थूलादिगुणवत् आदि-मध्यांतरहितं एवमात्मवस्तु ॥

எப்போதும் இருப்புவடிவமான சத்ரூபமாம். மிகச் சுத்தமான போதமே முக்கிய வடிவமான சித்துரூபமாம். சுகரூபமான ஆநந்தரூபமாம். முக்காலத்து மிருப்பதான நித்தியமாம். விகாரப்படாத கூடஸ்தமாம். பாதிக்கப்படாத அதாவது பொய்யென்று நிச்சயிக்கப்படாத சத்தியமாம். ஸ்தூலமின்மை முதலிய குணமுடைய முதல் இடை கடையின்றிபதாம். இத்தன்மையதாம் ஆத்மவஸ்து.

तदाश्रयातद्विषया अनाद्यविद्या ॥

அதன் (ஆத்மாவின்) ஆசிரயமாய் (அதனைச்சார்ந்ததாய்) அதனை (ஆத்மாவை) விஷயஞ்செய்வது (மறைப்பது) அநாதியான அவித்தையாம்.

यथा गर्भागारमंधकारस्यविषयाश्रयं तदाश्रयत्वविषयत्वबलेन आवरणविक्षेपरूपं प्राप्य तमेवस्फुरद्रूपमात्मानमाच्छाद्यविक्षिपति ॥

(ஆத்மா அவித்தைக்குவிஷயமும் ஆசிரயமுமாதல்) கர்ப்பக்கிருகம் இருளிற்கு விஷயமும் ஆசிரயமு மாதல்போலவாம். அதன் ஆசிரயத்தன்மை விஷயத்தன்மை வலியால் * ஆவரண விக்ஷேபரூபத்தினை அடைந்து, அதே விளக்கவடிவ ஆத்மாவினை மறைத்து விக்ஷேபப்படுகின்றது.

यद्यप्यवस्त्वविद्या तथाप्यात्मसत्तास्फूर्तिंप्राप्य वस्तुवद्भाति यथा-निर्मलादर्शसन्निकर्षस्थवस्तुनः अवारितोप्रतिबिंबोजयाते तद्वत् कूटस्थचिदा-भासोपि सत्वादिगुणत्रयात्मिकायामविद्यायां प्रतिफलति तन्मध्ये कारण-भूतसत्वांशे प्रतिबिंबितोयश्चिदाभासः सोहमित्यभिमानादीश्वरइत्युच्यते ॥

அவித்தை அவஸ்துவாயினும் ஆத்மசத்தையின் விளக்கத்தைப் பெற்று வஸ்துவைப்போல்த் தோன்றுகின்றது. எப்படி

* சொரூபத்தை மறைப்பது ஆவரணம். அது ஆத்மா இல்லையென்றும், ஆத்மாதெரியவில்லையென்றும் இருவடிவினதாயுள்ளது. விக்ஷேபம் ஒன்றை மற்றொன்றாகக் காட்டுவது. அது ஆத்மாவை அநாத்மாவாகக் காட்டுவது, இதனை விசாரசந்திரோதய முதலியவற்றில் காண்க.

நிர்மலமான கண்ணாடியில் எதிரிலுள்ள வஸ்துவின் நீக்கப் படாத பிரதிபிம்பம் உண்டாகின்றதோ அதுபோலக், கூடஸ்த சிதாபாஸனும் சத்துவாதி முக்குணவடிவ அவித்தையில் பிரதிப லிக்கின்றது. அதனிடையில் காரணவடிவ சத்துவாமிசத்தில் பிரதிபிம்பித்த சிதாபாஸன் எவனோ அவன் யானென்னும் அபி மானத்தினால் ஈசுவர னெனப்படுகின்றான்.

सत्वगुणोपाधिकत्वात्सर्वज्ञत्वं सर्वेश्वरत्वं सर्वकार्यकर्तृत्वं तस्यैव सत्वादिगुणप्रधान कारणगुणरूपमायायाः कार्यभूत रजस्तमोंशादिकप्रतिबिंबितोयश्चिदाभासः सयदाकर्मनिमित्तवशाद्देशकालवस्तुविविधपरिच्छेदंगृहीत्वा स्वस्वरूपपूर्णं विहाय सजातीय स्वगतभेदंप्राप्य अहं ममेत्यध्यासंकरोति तदाजीवइत्युच्यते ॥

சத்துவகுணத்தினை யுபாதியாக வுடைமையால் அவனுக்கே சர்வஞ்ஞத்துவம், சர்வேசுவரத்துவம், சர்வகாரிய கர்த்திருத் துவமுளது. சத்துவாதிகுணப்பிரதான காரணகுணவடிவமாயை யின் காரியவடிவமான இரஜஸ்தமோம்ச முதலியவற்றில் பிரதி பிம்பித்த சிதாபாஸன் எவனோ, அவன் எப்போது கர்ம நிமித்த வசத்தினால் தேசகாலவஸ்துக்களாலாம் நாநாவித பரிச்சேதத் தினைக் கிரகித்து, தனது சொரூபமான பூர்ணத்தினை விட்டு, * ஸஜாதீய * சுவகதபேதத்தினையடைந்து யான் எனது என் னும் அபிமானத்தினைச் செய்கின்றானோ அப்போது ஜீவனெனப் படுகின்றான்.

अस्यकार्योपाधिवशाज्जाड्यं तेनाहंकर्त्ताहंभोक्ताहंसुखीदुःखीमामहं नजानामीतिमन्यते श्रुतिरपि, कार्योपाधिरयंजीवः कारणोपाधिरीश्वरः कार्यकारणतांहित्वापूर्णबोधोवशिष्यते ॥

---

* ஸஜாதீயம் மரத்திற்கு மற்றோர் மரத்தோடுள்ளது போன்ற தன் னினத்தது.

* சுவகதம் மரத்திற்குத் தன்னிடத்தவாகிய இலை பூ காய் முதலிய வற்றோடுள்ளதுபோன்ற தன்னிடத்துள்ளது. இவற்றை விரிவாய் அறிய விரும்புவோர் ஸ்ரீ பாலபோதம் முதலுபதேசத்திற் காண்க.

இவனுக்குக் காரியோபாதிவசத்தினுல் ஜாட்டியம் (ஜடத் தன்மை) ஆம். அதனுல் "யான் கர்த்தா, யான் போக்தா, யான் சுகி துக்கி, யான் என்னையறியேன்" என்று கருதுகிறுன். சுருதியும் "* காரியோபாதியுடையவன் இச்சீவன். காரணோபாதியுடையவன் ஈசுவரன். காரிய காரணத்தன்மையினை விட்ட போது பூர்ணபோதம் மிஞ்சுகின்றது" என்று கூறுகின்றது.

जाग्रत्स्वप्नसुषुप्त्यवस्थात्रयभेदेन जीवगतोभेदस्स्वंगीकृतोस्ति शास्त्रे विश्व तैजस प्राज्ञ व्यावहारिक प्रातिभासिक पारमार्थिक इति जाग्रन्नामजीवस्य-स्थूलोव्यवहारः स्वप्नइति सूक्ष्मः सुषुप्तिरिति बुध्यादिकार्यकारणरूपं सर्वं ज-गत्कारणे अज्ञाने लयंयाति कारणावस्थेत्युच्यते एतदेवावस्थात्रयं व्यष्टौ विराट्हिरण्यगर्भाव्याकृतरूपेण समष्टाविति ॥

ஜாக்கிரம் சொப்பனம் சுழுத்தி யென்னும் அவஸ்தை மூன்றன்பேதத்தால் ஜீவனிடத்துள்ள பேதமானது, விசுவன், தைஜஸன், பிராஞ்ஞன், வியாவகாரிகன், பிராதிபாஸிகன், பாரமார்த்திகன் என்று சாஸ்திரத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஜாக்கிரமென்பது ஜீவனது ஸ்தூலவியவகாரம். சொப்பன மென்பது சூக்ஷ்மம். சுழுத்தி யென்பது புத்தியாதி காரிய காரணவடிவம் யாவும் ஜகத்காரணமான அஞ்ஞானத்தில் இலயமடைகின்றது. அது காரணவஸ்தை யெனப்படுகின்றது. இதுவே வியஷ்டியில் அவஸ்தை மூன்றும். விராட்டு இரணியகர்ப்ப அவ்யாகிருத வடிவத்தினுல் சமஷ்டியில் மூன்றெனக.

जीवस्वरूपं नामरूपं कर्मत्वं प्राप्य स्थूलजगद्भवति सएवचिदाभासः मनः प्रभृतिष्विंद्रियेषु प्रतिफलितः सृष्टिस्थितिप्रलयात्मकं भावाभावरूपं समष्टिव्यष्ट्यात्मकं जगत्कारणे मनसो नानारूपत्वान्नानाभवति अतिज-डत्वादप्रकाशवद्भवति श्रुतिरपि, कामः संकल्पोविचिकित्साश्रद्धा श्रद्धाधृति-रधृतिर्धीर्भीरित्येतत्सर्वं मनएवेति जीवगतेरस्वतंत्रत्वात् ॥

---

* அவித்தை காரியோபாதி. மாயைகாரணோபாதி. ஸ்ரீ விசாரசந்திரோதயம் கக-வது கலை உ௪அ-வது பக்கத்திற் காண்க.

ஜீவஸ்வரூபம் நாமரூபத்தையும் கர்மத்தன்மையினையும் அடைந்து ஸ்தூலஜகத்தாகின்றது. அச்சிதாபாஸனே மன முதலிய இந்திரியங்களில் பிரதிபலித்தவனாய், சிருஷ்டி ஸ்திதி பிரளய வடிவினதும், * பாவாபாவ வடிவினதும், சமஷ்டி வியஷ்டி வடிவினதுமான நாநாவாகின்றான்; ஜகத்காரணத்தில் மனதுக்கு நாநாவடிவமிருத்தலின், அதிஜடமாயிருத்தலின் அப்பிரகாசம்போலாகின்றான். சுருதியும், "காமம், சங்கற்பம், விகற்பம்(சந்தேகம்), சிரத்தை, அசிரத்தை, தைரியம், அதைரியம், புத்தி, பயமென்னும் இவையாவும் மனமே" என்று கூறுகின்றது. ஜீவகதிக்குச் சுவதந்திரத்துவமின்மையால்.

जीवानां कर्मफलदातृत्वे जगत्सृष्टिप्रलयप्रतिपालनेचेश्वरः कल्पितो-वेदांते ईश्वरस्तु, उपाधिसंबंधगुणत्रयभेदेन ब्रह्म विष्णु रुद्रादिभेदेन जगत्सृ-ष्ट्यादिंकरोति एवमविद्यावरणविक्षेपरूपद्वयेन समष्टि व्यष्ट्यात्मकं आब्र-ह्मस्तंभपर्यंतं नवविधसंसारं निर्वाहयति ॥

ஜீவர்களின் கர்மபலத்தைக் கொடுக்குந்தன்மையிலும் ஜகத்தைச் சிருஷ்டித்துக் காத்துச் சங்கரிப்பதிலும் வேதாந்த(உபநிஷ)த்தில் ஈசுவரன் கற்பிக்கப்பட்டிருக்கின்றார். ஈசுவரனோ உபாதிசம்பந்தமான குணமூன்றன் பேதத்தினால் பிரஹ்மா விஷ்ணு ருத்திராதி பேதத்தால் ஜகத்தின் சிருஷ்டியாதிகளைச் செய்கின்றார். இவ்வாறு அவித்தை ஆவரணம் விக்ஷேபமென்னும் இருவடிவத்தால் சமஷ்டி வியஷ்டி வடிவ பிரஹ்மாதி * ஸ்தம்பபரியந்தமான நவவித சம்சாரத்தை நிர்வகிக்கச் செய்கின்றது.

ज्ञाता ज्ञानं ज्ञेयं कर्ता कर्म क्रिया भोक्ता भोगः भोग्यं एते नवविधसंसाराः ॥

---

* இருக்கிறது என்று வியவரிக்கப்படுவது பாவம். இல்லையென்று வியவகரிக்கப்பட்டது அபாவம்.

* ஸ்தம்பம் = ஓர்வகைப்புல்.

* ஞாதா, * ஞானம், ஞேயம், கர்த்தா, கர்மம், கிரியை, போக்தா, போகம், போக்கியம் என்னுமிவை நவவிதசம்சார மாம்.

ननुकथंकेवलस्यासंगोदासीनस्य नित्यमुक्तस्य शुद्धस्य गुणातीतस्याहंकारेद्वेषप्रयत्नरहितस्य विक्रियस्य कूटस्थस्य चिदानंदैकरसस्य परमात्मनो नरविषाणसदृशादवस्तुनस्तुच्छाद्दर्पणमुख रज्जु सर्प शुक्तिकारजत मृगतृष्णिकाजल तुल्यादज्ञानादावरण विक्षेपौ संभाव्येते ॥

சங்கை:— * கேவலமும் * அசங்க * உதாசீனமும், நித்தியமுக்தமும், சுத்தமும், அகங்காரம் இச்சை துவேஷம் பிரயத்தின மின்றியதும் விசேஷகிரியை யில்லாததும், * கூடஸ்தமும், * சிதாநந்தைகரஸமுமாகிய பரமாத்மாவுக்கு மனிதக்கொம்புபோன்றதும், வஸ்துவல்லாததும், துச்சமும், கண்ணாடிமுகம், பழுதையிற் பாம்பு, இப்பிவெள்ளி, கானல்ஜலமென்பவற்றைப் போன்றதுமான அஞ்ஞானத்தினின்றும் ஆவரண விக்ஷேபங்களிரண்டும் எவ்வாறு பொருந்தும்?

यथागगनारविंदंसुरभिरित्युक्ते गगनारविंदमसत् तस्य सुरभित्वं कुतः सत्यमेतत् सर्वमविद्या तत्कार्य मावरणविक्षेपरूपं वस्तुगत्यानास्त्येवकिंत्वज्ञानादात्मनोविवेकाद्भ्रममात्रमेवेतिसिद्धम् ।

எப்படி ஆகாயத்தாமரை வாசனையுடைய தென்னுமிடத்து ஆகாயத்தாமரை அசத்தாக அதன் வாசனையுடைமை எவ்வாறு சத்தியமாம்? ஆகாது அதுபோல வென்க. இவ்வெல்லாமான அவித்தையும் அதன் காரியமுமான ஆவரண விக்ஷேப வடிவம்

---

* ஞாதா = அறிபவன். * ஞானம் = அறியப்படுவது.
* கேவலம் = ஒப்பற்றது.
* அசங்கம் = சம்பந்த மில்லாதது.
* உதாசீனம் = விருப்பு வெருப்பில்லாதது.
* நிர்விகாரமும்.
* ஞானநந்த ஒரு வடிவினதும்

வஸ்துகதியாக இல்லையேயில்லை. ஆனால் அஞ்ஞானமாகிய ஆத்மாவின் அவிவேகத்தினால் பிரமமாத்திரமே யென்பது சித்தித்தது.

यद्भ्रममात्रसिद्धंतत् किं ॥

*பிரமமாத்திரமாய்ச் சித்தித்தது யாதோ அது யாது?*

यथा स्वप्नंपश्यतिजनः तदा तंप्रतिस्वाप्नोव्यवाहरः सत्यतया प्रतिभाति ऐंद्रिजालिकोवा पुनरपिस्वप्नेनिवृत्ते स्वाप्नं ऐंद्रजालिकमायानिवृत्तौ ऐंद्रजालिकमायानिर्मितं सर्वमिदं मिथ्यैवेतिजानाति इदं सर्वेषां अनुभवसिद्धं तद्वत्तत्वज्ञानोत्पत्तेः प्राक् असत्यमिदं सत्यमेवेतिनिश्चिनोति तदनंतरं मिथ्यैवेतिज्ञायते अज्ञानं तत्कार्यंच आवरणविक्षेपरूपं सुतरां नश्यति ॥

சொப்பனத்தினைப் புருஷன் பார்க்கின்றான் அப்போது அவனைக் குறித்துச் சொப்பன வியவகாரம் சத்தியமாய்த் தோற்றுகின்றது. இந்திரஜாலவித்தையைக் காண்பவனுக்கும் அவ்வாறே தோற்றுகின்றது. மறுபடியும் சொப்பனம் நீங்கியபோது சொப்பனபதார்த்தமும் இந்திரஜாலமாயை நீங்கியபோது இந்திரஜாலிகமாயையினாலாக்கப்பட்ட இவ்வெல்லாமும் * மித்தையேயென்று அறிகின்றான். இது எல்லோருக்கும் அனுபவசித்தம். அதுபோலத் தத்துவஞானத்திற்குமுன் அசத்தியமாகிய இதனை (உலகினைச்) சத்தியமென்றே நிச்சயிக்கிறான். அதன்பின் (தத்துவஞானம்வந்தபின்) மித்தையேயென்று அறிகின்றான். அஞ்ஞானமும் ஆவரணவிக்ஷேபவடிவ அதன் காரியமும் முற்றும் நசிக்கின்றது.

येसंसारसमुद्रपारगमने संजातकामाभृशंतेवेदांतरहस्य मेतदमलं श्रुत्वासतांसंमतम् ॥ छित्वाशेषविरोधिमोहगहनं ज्ञानासिनाभानुवद्दीप्तायांति कृतार्थतामनुगताः कैवल्यसंज्ञ पदम् ॥

---

* வஸ்து = உண்மைப்பொருள். அவஸ்து = பொய்ப்பொருள். இதனையே நாயனார் "பொருளல்லவற்றை" யென்று மொழி பெயர்த்தார்.

எவர்கள் சப்ஸாரசமுத்திரத்தின் கரையைச்சேர்வதில் மிக்க விருப்பமுண்டானவர்களோ, அவர்கள் நிர்மலமும் சத்துக்களுக்குச் சம்மதமானதுமான வேதாந்த ரகஸியமான இதனைக் கேட்டு, விரோதியான மோகமென்னும் காடு முழுவதினையும் ஞானவாளால் சேதித்து(வெட்டி)ச், சூரியனைப்போலப்பிரகாசிப்பவர்களாய்க் * கிருதார்த்தத்தன்மையைத் தழுவியவர்களாய் கைவல்லிய மென்னும் பதத்தை அடைகின்றார்கள்.

॥ इति प्रथमपटलः संपूर्णः ॥

முதற்படலம்.

(முடிந்தது.)

உ

॥ द्वितियपटल प्रारंभः ॥

# ஸ்ரீ பாலபோதினி.

## இரண்டாம் படலம்.

इदानींमुमुक्षोः पुरुषस्य अनाद्यविद्याप्रतिबंधनिवृत्यर्थं साधनप्रकार-उच्यते ॥

இப்போது முமுக்ஷுவாகிய புருஷனுக்கு அநாதியவித்தையாகிய பிரதிபந்தம் நீங்குதற் பொருட்டுச் சாதனப் பிரகாரம் சொல்லப்படுகின்றது:—

तत्रपूर्वकांडोक्त निष्कामकर्मानुष्टाना दंतःकरणशुद्धिः यतोवैदिक-कर्मानुष्टानात् पुण्योपचये पापक्षयाद्रजस्तमोवृत्तिद्वारारागद्वेषनिराकरणं यथावृक्षस्य बीजंकारणं बीजस्य वृक्षःकारणं तथा रजस्तमसो पापवृद्धिः वृद्धेरपि रजस्तमसीइति परस्परानुबंधित्वा देकस्यापिनाशे इतरस्यापि नाश-इत्यंतःकरणशुद्धिः ततो नित्यानित्यविवेकः संपद्यते ॥

அங்கு முற்கர்மகாண்டத்திற் கூறப்பட்ட நிஷ்காம கர்மத்தின் அநுஷ்டானத்தால் அந்தக்கரண சுத்தியாம். ஏனெனின் வைதிக கர்மாநுஷ்டானத்தினால் புண்ணியமிகுந்து பாபம்குறைதலால் இரஜசு தமசுகளின் நீக்கவாயிலாக இராகத்துவேஷ நீக்கமுண்டாகின்றது. எப்படி விருக்ஷத்திற்குப் பீஜம் (வித்து) காரணமோ, பீஜத்திற்கு விருக்ஷம்காரணமோ, அதுபோல இரஜசு தமசுகளுக்குப் பாபவிருத்திகாரணமாம். பாபவிருத்

* பிராந்தி இதனை நாயனார் " பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும் மருள் " என்றார்.

* கிருதார்த்தத்தன்மை = தனக்கு வேண்டியது செய்யப்பட்டதாதல்.

திக்கு இராஜசு தமசுகள் காரணமாம் இப்படி யொன்றற்கொன்று தொடர்புடையனவாயிருத்தலின் ஒன்றற்கு நாசமுண்டாயின் மற்றதற்கும் நாசமுண்டாமென்பதனால் அந்தக்கரணசுத்தி யுண்டாகின்றது. அதனால் நித்தியாநித்தியவஸ்துவிவேக முண்டாகின்றது.

इहव्यहारभूमौ किंनित्यं किमनित्यमिति विचारः ॥

க இங்கு விபவகார பூமியில் நித்தியம் யாது? அநித்தியம் யாது? என்பது (விவேகம்) விசாரம்

नित्यानित्यवस्तुकीदृशं ॥

நித்தியாநித்தியவஸ்து எத்தன்மையது?

यदागमापायितदनित्यं यथाघटः एतद्विलक्षणं नित्यमिति नित्यानित्यवस्तुविवेकः ॥

எது போக்குவரத்துடையதோ அது அநித்தியம்; கடம்போல். இதனின் வேறுபட்டது (அழிவில்லாதது) நித்தியம். இத்தன்மையதாம் நித்தியாநித்தியவஸ்துவிவேகம்.

कीदृशोविरागः ॥

விராகம் எத்தன்மைத்து?

आब्रह्मस्तंभपर्यंतं यस्यमनसि सर्वदा अनवरतं छर्दितान्नमिव भवति तदैव वैराग्यमिति इहामुत्रार्थफलभोगविरागः ॥

உ. பிரஹ்மாமுதல் ஸ்தம்பபரியந்தமானவை எவனுடைய மனதில் எப்போதும் இடைவிடாது வாந்திஅன்னம் போலாகின்றதோ அதுவே வைராக்கியம். இத்தன்மையதாம்
* இகாமுத்திரார்த்த பலபோக விராகம்.

शमदमादिसाधनसंपत्तिः ॥

௩. சமதயாதி சாதன சம்பத்தி.

यस्यविषयेभ्योंतःकरण निवृत्ति रत्यंतंसशांतः ॥

(க) எவனுக்கு அந்தக்(உட்)கரணம் அத்தியந்தம் நீங்கி யிருக்கின்றதோ அவன் (சமமுடையவன்) சாந்தன்.

यस्याविषयेभ्यो बहिः करणानां सदानिवृत्तिः सदांतः ॥

(உ) எவனுடைய வெளிக்கரண(இந்திரிய)ங்கட்கு விஷயங் களினின்று எப்போதும் நிவிருத்தியிருக்கின்றதோ அவன் (தம முடையவன்) தாந்தன்.

यस्यउभयथा विषयग्रहणनिवृत्ति रत्यंतं स उपरतः ॥

(௩) எவனுக்கு இருவகையான விஷயங்களைக் கொள்ளு தல் அத்தியந்தம் நீங்கியிருக்கின்றதோ அவன் (உபரதியுடைய வன்) உபரதன்.

यस्यसुख दुःख भया भय लाभा लाभ जया जय स्तुति निंदादौ सर्वदैवोपेक्षाबुद्धिः सतितिक्षु ॥

(௪) எவனுக்குச் சுகம் துக்கம், பயா பயம், லாபா லாபம், ஜயா ஜயம், ஸ்துதி நிந்தை முதலியவற்றில் எப்போதுமே உபே க்ஷாபுத்தி யிருக்கின்றதோ அவன் (திதிக்ஷை யென்னும் சகித் தலை யுடையவன்) திதிக்ஷு.

एवंभूतस्याधिकारिणः समग्रसंसारोविलीयते यदा तदा तस्य मुमुक्षत्वं भवति इति साधनसंपत्तिः ॥

௫. இத்தன்மைய அதிகாரிக்குச் சகலசம்ஸாரமும் எப் போது ஒடுங்குகின்றதோ அப்போது அவனுக்கு முமுக்ஷுத்து

* இகம்=இவ்வுலகம். அமுத்திரம்=பரலோகம். அர்த்தம்=பொ ருள். பலம்=பயன். போகம்=நுகர்ச்சி. விராகம்=இச்சையின்மை.

வம் (முத்திவிருப்பமுடைமை) உண்டாகின்றது. இத்தன்மைய தாம் (சாதனத்தின் அடைவு) சாதனஸம்பத்தி.

इदानीं विविदिषुर्भवति आत्मानंज्ञातुमिच्छतीति ज्ञानादेवतुकैवल्यमितिश्रुतेः ॥

இப்போது ஞானவிருப்ப முடையவனாகின்றான். ஆத்மாவினை யறியவிரும்புகின்றானென்க; "ஞானத்தினாலேயே கைவல்யம்" என்று சுருதியிருத்தலின்.

ज्ञानंतु श्रवणमंतरेण न संभवति आत्मावारे द्रष्टव्यो श्रोतव्यो मंतव्यो निदिध्यासितव्य इतिश्रुतेः ॥

ஞானமோ சிரவணமின்றிச் சம்பவியாது: "ஆத்மாகாணத்தக்கது, கேட்கத்தக்கது மனனஞ்செய்யத்தக்கது, நிதித்தியாசனம் செய்யத்தக்கது" என்னும் சுருதியினால்.

तस्मात्संन्यासपूर्वकंश्रवणंकर्तव्यं श्रवणं मानश्रुतिवाक्यानामुपक्रमोपसंहारयोर्यन्महत्तात्पर्यं तस्य षड्विधलिंगधारणं ॥

ஆதலால் சந்நியாசபூர்வகமாகச்சிரவணஞ் செய்யவேண்டும். சிரவணமென்பது * சுருதிவாக்கியங்களினது உபக்கிரம உபசங்காரங்களின் பெருந்தாற்பரியம் எதுவோ, அதன் அறுவகை இலிங்கத்தினைத் தரித்தலாம்.

षड्विधलिंगंनाम उपक्रमोपसंहारावभ्यासोपूर्वताफलं अर्थवादोपपत्तीचलिंगंतात्पर्यनिर्णयइति ॥

* அறுவகை லிங்கமாவது உபக்கிரம, * உபசங்காரம், அப்பியாசம், அபூர்வதை, பலம், அர்த்தவாதம், உபபத்தி என்னும் இவை தாற்பரியநிர்ணயத்தில் இலிங்கமாமென்க.

---

* உபக்கிரமம் = ஆரம்பம். * உபசங்காரம் = முடிவு.

* இவற்றி னிலக்கணத்தை ஆத்மாநாத்மவிவேக மென்னும் நூலிற் காண்க.

श्रवणंतु अंगत्वादन्यानिरपेक्षयाज्ञानंजनयति तस्यज्ञानस्य कोमलकंट-कन्यायेन अदृढमूलत्वान्मंदाधिकारिणः असंभावना विपरीतभावने उत्पद्येते ॥

சிரவணமோ மற்றொன்றன் அபேக்ஷயின்றி ஞானத்தை யுண்டுபண்ணுகின்றது. அந்த ஞானத்திற்கு இளமுள்ளினைப் போலத் திடமின்மையாகிய மூலமிருத்தலின், மந்தாதிகாரிக்கு அசம்பாவனை விபரீதபாவனைக ளுண்டாகின்றன.

ते के सहस्रधाश्रुतेपिश्रुत्यर्थे देहेंद्रियादिव्यतिरिक्त आत्मानसंभव्यत-इतीयमसंभावना ॥

அவையாவையெனின், ஆயிரமுறை சுருதியர்த்தத்தினைக் கேட்டும் தேகேந்திரியாதிகட்கு வேறாய் ஆத்மாசம்பவியாது என்னும் இஃது அசம்பாவனை.

बहुधाश्रुत्वा विचार्य च अनात्मन्यात्मप्रतीतिर्विपरीतभावना तन्मध्ये असंभावना निवृत्यर्थं मननं मननंनाम गुरुमुखाच्छ्रुत्वायः श्रुत्यर्थोवधारितस्त-स्ययुक्त्याप्रतिपादनम् ॥

வெகுமுறைகேட்டும் விசாரித்தும் அநாத்மாவில் (தேகாதியில்) ஆத்மப்பிரதீதி (யானெனுமுணர்வு) விபரீதபாவனையாம். அவற்றில் அசம்பாவனை நீங்குதற்பொருட்டு மனனமாம். மனனமென்பது குருமுகமாகக்கேட்டு எந்தச் சுருதியர்த்தம் கிரகிக்கப்பட்டுளதோ அதனை யுக்தியால் நிரூபித்தல்.

मननस्ययुक्तिरूपत्वादसंभावनानिवर्त्तकत्वं यदाग्रामादिस्थितेचंदन-वृक्षे अज्ञस्यासंभावनाभवति नेदंचंदनमितितं पुनः कश्चिद्युक्त्याप्रतिबोधयति तदासंभावयति ॥

மனனம் யுக்திவடிவமாயிருத்தலின் அசம்பாவனையைக் கெடுப்பதாம். எப்படியெனின், கிராமமுதலியவற்றி லிருக்கும் சந்தனவிருக்ஷத்தில் அறியாதவனுக்கு இது சந்தனமன்றென்

னும் அசம்பாவனை யுண்டாகுமாயின், அவனுக்கு ஒருவன் யுக்தியினால் அறிவிக்குமிடத்து அப்போது சம்மதிக்கின்றான்.

विपरीतभावनानिवृत्यर्थं निदिध्यासनं निदिध्यासनंनाम श्रवण मननाभ्यां यएवार्थोनिश्चितः इदमित्थमिति दृढीकृतस्तन्निदिध्यासनं यथाशुक्तिकाशकेल विवेकाद्यथार्थेन परिज्ञातेरजतं विपरीतिज्ञानंच निवर्त्तते ॥

விபரீதபாவனை நீங்குதற் பொருட்டு நிதித்தியாசனமாம். நிதித்தியாசன மென்பது சிரவணமனனங்களால் எந்த அர்த்தம் நிச்சயிக்கப்பட்டதோ அதனையே இஃது இத்தன்மைத்தென்று திடப்படுத்துவதாம், எப்படிச் சுக்தியின் துண்டமானது விவேகத்தினால் யதார்த்தமாய் அறியப்பட்டபோது இரஜதமாகிய விபரீதஞானம் நீங்குகின்றதோ, அதுபோல விபரீதபாவனை (தேகாதிகளிலுள்ள ஆத்மபாவனை) நீங்குகின்றது.

ननु कुतः श्रवणमनन निदिध्यासनारतस्यापि संसारेप्रवृत्तिर्दृश्यते ॥

சங்கை:—சிரவண மனன நிதித்தியாசனபரனா யுள்ளவனுக்கும் சம்சாரத்தில் பிரவிருத்தி எதனால் காணப்படுகின்றது?

सत्यं तस्यात्मसाक्षात्काराभावात् यथापुनः कश्चिद्दीर्घकालनैरंतर्यादादरेण श्रवणादिकंकरोति तदा आत्मसाक्षात्कारे जाते सकामकर्माविद्यानिवर्त्तते संसारप्रवृत्तिरपि निवर्त्तते ॥

உண்மை. அவனுக்கு ஆத்மசாக்ஷாத்கார முண்டாகாமையால் பிரவிருத்தி யுண்டாகிறது. மறுபடியும் முன்போல நெடுங்காலம் இடைவிடாது ஆதரவோடு சிரவணாதிகளைச் செய்யின், அப்போது ஆத்மசாக்ஷாத்கார முண்டாகக் காமகர்மங்களோடு அவித்தை நீங்குகின்றது. நீங்கவே சம்ஸாரப்பிரவிருத்தியும் நீங்குகின்றது.

नन्वसमंजामिदंभवति यतोजनकादीनामपि संसारप्रवृत्तिर्दृश्यते ॥

அப்படியானல் இது பொருத்தமுடைய தாகாது. எதனுலெனின். ஜநகர்முதலியோருக்கும் சம்ஸாரப்பிரவிருத்தி காணப்படுகின்றதே ?

सत्यं संसारप्रवृत्तेर्दुःखप्रारब्धत्वात्तेषांप्रवृत्तिः प्रारब्धंहि भोगादेव-क्षयंयाति जीवन्मुक्तानामपि सकारणं प्रारब्धंतिष्ठति कारणंत्वज्ञानं दग्धबी-जवदज्ञानमस्ति प्रारब्धं हि यथा रज्जुस्वरूपे ज्ञाते सर्पज्ञानंनिवर्तते तथापि भयकंपादिकिंचिद्वर्त्ततएव तद्वत् कृतात्मसाक्षात्कारस्यतुर्यावस्थांगतस्य जीव-न्मुक्तस्य ज्ञानंप्रारब्धभोगश्च भवतीत्यविरोधः ॥

சத்தியம். சம்ஸாரப் பிரவிருத்தி துக்கப் பிராரப்தமுடையதா யிருத்தலின் அவர்களுக்குப் பிரவிருத்தி யுண்டாகின்றது. பிராரப்தமோ போகத்திலைலே க்ஷயமாகின்றது. ஜீவன்முக்தர்களுக்கும் காரணத்தோடு பிராரப்தம் நிற்கின்றது. காரணமோ அஞ்ஞானமாம். அஞ்ஞானமும் வறுத்தவிதையினைப்போலிருக்கின்றது. பிராரப்தமோ, எப்படி இரஜ்ஜுவினைச் செவ்வையா யறிந்தபோது சர்ப்பஞானம் நீங்கினும் பயம் நடுக்க முதலியன சிறிது எப்படி இருக்கவே செய்யுமோ, அதுபோல ஆத்மாவைச் சாக்ஷாத்கரித்தவனும் துரியாவஸ்தையினையடைந்தவனுமாகிய ஜீவன்முக்தனுக்கு ஞானமும் பிராரப்த போகமுமிருக்கு மென்பதனுல் விரோத மில்லை.

यस्यतुकाकतालन्यायेन समसमय एव आत्मसाक्षात्कारः प्रारब्ध-भोगनाशश्च तस्य तदानीमेव स्वस्वरूपस्थितिः यस्यतुसाक्षात्कारे जातेपि प्रारब्धशेषोवर्तते तस्यतु जीवन्मुक्तस्य प्रारब्धभोगार्थं शरीरधारणं ॥

எவனுக்குக் காகதாலநியாயத்தினுல் சம சமயத்தி(ஒருகாலத்தி)லேயே ஆத்ம சாக்ஷாத்காரமும் பிராரப்தபோகநாசமு முண்டாகின்றனவோ, அவனுக்கு அப்பொழுதே சுவசொரூபஸ்திதியாம். எவனுக்குச் சாக்ஷாத்காரமுண்டாகியும் பிராரப்த சேஷம்

இருக்கின்றமோ ஆச்சீவன்முக்தனுக்குச் சரீரதாரணம் பிராரப்த போகத்தின் பொருட்டாம்.

एवंसाक्षात्कारेजातेपि ननिःशेषाविद्याप्रतिबंधध्वंसः ततः प्रारब्धभोगक्षये शरीरपाताद्विदेहकैवल्यंभवतीति परमपुरुषार्थसिद्धिः ॥

இவ்வாறு சாக்ஷாத்காரமுண்டாகியும் * அவித்தையாகிய பிரதிபந்தம் அடியோடு கெடுகிறதல்லே. அதனால் பிராரப்த போகநாசத்தில் சரீரம் விழுதலால் விதேககைவல்ய முண்டாகின்றது. இவ்வாற்றால் பரமபுருஷார்த்தசித்தியாம.

विशुद्धबुद्धयोधीराज्ञानदीपकराः करेपश्यंति मणिवत् क्षिप्त्वातमो ब्रह्मपरंहितत् ॥

மிகப்பரிசுத்த புத்தியினரும் ஞனதீபத்தினைக் கையிற் கொண்டவருமான தீரர்கள் இருளை (அஞ்ஞானத்தினை) ஒதுக்கிக் கையில் இரத்தினத்தினைப்போல அந்தப் பரப்பிரஹ்மத்தினைக் காண்கின்றனர்.

॥ इति श्रीशंकराचार्यविराचिताबालबोधिनी द्वितीपटला समाप्ता ॥

இரண்டாம்படலம்.

முடிந்தது.

இவ்வாறு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்ட

ஸ்ரீ பாலபோதினி.

முடிந்தது.

---

* சரீராதிகள் ஞானம்வந்தபின் தோற்றிக்கொண்டிருத்தலால் அவை யிருத்தற்குக்காரணம் அவித்தை எரிக்கப் பட்ட படம்போலிருக்கின்றது தனை அவித்தியாலேசு மென்பர்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| க | க | ँ | ॐ |
| கஎ | க௪ | மித்தைபாக | மித்தையாக |
| க௬ | உங | நிரைநதுள்ள | நிரைந்துள்ள |
| உக | உக | क्वीचत् | क्चित् |
| உங | உ | हिसत | हसित |
| உகூ | உ | ெ ளபீன | * கௌபீன |
| ஙஎ | ககூ | சப்வித்து | * சப்வித்து |
| ௪௫ | உ௪ | ஸ்திரிசுகத் | ஸத்ரீசுகத் |
| ௫உ | ௫ | कच्चार्य | काचार्य |
| ௫௫ | க | तेमक | तमेक |
| ௫கூ | கக | पेठदादरा | पठेदादरा |
| ௬உ | ங | கண்டமுன்று | கண்டமுமன்று |
| ௬ங | கங | नेद्रियं | नेन्द्रियं |
| ௬௪ | உ௫ | அகண்டார | அகண்டாகார |
| எக | ௪ | சங்கிதியாகிய | (சங்கிதியாகிய) |
| எஎ | க | எபன் | என்ப |

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| எசு | ... | துவாச | துவாதச |
| அ0 | உரு | தலைவனுய் | தலையனுய் |
| ... | ரு0 | பரிகாரம் | பரிவாரம் |
| அச | ச | சோகததை | சோகத்தை |
| ... | உக | ணுயிணுயினும் | ணுயினும் |
| அரு | ... | சர்பட | சர்ப்பட |
| ... | கசு | ஆவகனஞ் | ஆவாகனஞ் |
| அஎ | அ | என்றும் | என்னும் |
| ... | கசு | विचॅतेहत् | विचिंतयेत् |
| அஅ | கச | கர்பூற | கற்பூர |
| அகூ | ரு | விங்கத்திஂன் | லிங்கத்தின் |
| கூச | ... | நாராமவலி | நாமாவலி |
| கூரு | ... | வாக்கியவிருத்தி | பிரஹ்மநாமாவலி |
| ... | கஉ | நாமாவளி | நாமாவலி |
| கூசு | ரு | வாக்கியவிர்த்தி | வாக்கியவிருத்தி |
| க00 | உ0 | நிச்சியஞ் | நிச்சயஞ் |
| க0உ | உ | நிச்சஞ்செய் | நிச்சயஞ்செய் |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| கoரு | கஅ | நிச்சஞ்செய் | நிச்சயஞ்செய் |
| ககo | உ | अद्वैतानुभूति | अद्वैतानुभूतिः |
| ... | ரு | அத்வதானு | அத்வைதாநு |
| ககக | கரு | (தன்னிடத்து | (தன்)னிடத்து |
| ககஉ | கo | கடத்திலுள்ள ஆகாயத்திலுல்ள ஆகாய | கடத்திலுள்ள ஆகாய |
| ககசு | சா | स्फुाटको | स्फटिको |
| கஉஎ | உரு | விலக்ஷமான | விலக்ஷணமான |
| கருசா | சா | अंय | अयं |
| கசo | கச | அத்வைமான | அத்வைதமான |
| கசஉ | கரு | बध्द्वा | बद्ध्वा |
| கசஅ | கசா | மன்டன | மண்டன |
| கருக | ... | ஸ்ரீபாலபோதினி | முதற்படலம் |
| கருச | உசா | வெருப்பி | வெறுப்பி |
| கருரு | ரு | மாத்திரமாய | மாத்திரமாய் |